# தேர்ந்த கட்டுரைகள்

வெளியீடு-20



கிறிஸ ஹானி (Chris Hani)

JPL
C2772

... விடுதலைப் புலிகள்,
...ட்டு வாரியம்,
...ம்.

15-08-1993

4

NATIONAL LIBRARY SECTION;
MUNICIPAL LIBRARY SERVICES,
JAFFNA.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

320.512

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

மாநகராட்சி
25-8-1995
97567
யாழ்ப்பாணம்

# தேர்ந்த கட்டுரைகள்

KOHA
JPL

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

**வெளியீடு-20**

தமிழீழ விடுதலைப் புலிகள்,
வெளியீட்டு வாரியம்,
தமிழீழம்.

**15-08-1993**

97567 C.C

# உள்ளே...


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. இந்தோனேசியாவின் செல்வவளம் அழிவுறுகின்றது. | 1—5 |
| 2. சனாதிபதி அவர்களின் செயலகத்தில் நண்பகலில் நடைபெற்ற அரசியல் நாடகம். | 6—10 |
| 3. சனாதிபதி அவர்களின் கொலைக்குப் பின்னர் முக்கியமானவர்களின் காப்பில் பெரியமாற்றம் ஏற்படவிருக்கின்றது. | 11—17 |
| 4. விடுதலைப்புலிகளின் இலக்கு | 18—20 |
| 5. கெடுபிடிப் போருக்கான புதிய பூதம். | 21—31 |
| 6. சினிமா நிஜமா. | 32—35 |
| 7. சினிமா நிஜமா. | 35-40 |
| 8. தமிழர் இலக்கியங்கள்! | 41—45 |
| 9. நான் இன்னும் நானே. | 46—47 |
| 10. ஐக்கிய தேசியக் கட்சியின் மகத்தான சாதனை. | 48—56 |
| 11. நகர்ப்புறங்களிலும் நாட்டுப்புறங்களிலும் ஏற்பட்ட திடீர்த் திருப்பங்கள். | 57—62 |
| 12. மகத்தான சேவைபுரியும் ஊர்காவற் படையினர். | 63—66 |
| 13. பழமை வாய்ந்த தந்திரி மலை இளம் பௌத்தமத குரு ஒருவரால் எழுச்சி பெறுகின்றது. | 67—72 |

14. மட்டக்களப்பு பாரம்பரியங்களின் மீளிர்ச்சித்தொகுப்பில் கண்ணகி வணக்கம். 73—78

15. போர்க் கைதிகளான காவல் துறையினர் மூலம், விடுதலைப் புலிகள் தங்கள் புகழை நிலை நாட்ட முயலுகின்றனர். 79—90

16. அடக்குமுறையாளனைக் கண்டுபிடித்தல். 91—107

17. உலக விவகாரங்கள் சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் போராடிய மாபெரும் தலைவர் ஒருவரின் இறப்பு. 108—115

18. தமிழா! நீ பேசுவது தமிழா? 116—118

19. கெடுபிடிப்போர் நடவடிக்கைகளின் இரகசியங்கள் வெளிவந்ததைத் தொடர்ந்து அமெரிக்க புலனாய்வுத் துறையினரான சி. ஐ. ஏ. வேவு பார்ப்பதற்கு புது முறைகளை ஆராய்கின்றார்கள். 119—121

97567

KOHA JPL

# தோழர்களுக்கு

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 20 ஆவது வெளியீடாகும்.

இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல்வேறு பட்ட விடயங்களைச் சரியாக ஆய்வு செய்து உண்மை களைக் கண்டறிய வேண்டியது வாசிப்பவர்களின் கட மையாகும். இக்கட்டுரைகளில் வரும் தகவல்கள் பல சரியானவை அல்ல ..

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும், பேணுவதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் ஊக்குவிக்கும்.

# இந்தோனேசியாவின் செல்வவளம் அழிவுறுகின்றது

— இலீ மக்கா பென்ரா —

(ஒப்சேவர் — 23.05.1993)

முசுலிம் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட இந்தோனேசியாவிலுள்ள சீன மக்களின் பொருளாதார மேம்பாடு இனப்பூசலை வளர்த்துவருவதோடு, இந்தச் சிறுபான்மை இன மக்கள் நீண்டகாலமாக அனுபவித்து வரும் சுதந்திரத்திற்கும், சகிப்புத்தன்மைக்கும் அச்சுறுத்தலாகவும் இருக்கின்றது.

இந்தோனேசியாவிலுள்ள 182 மில்லியன் மக்களில் 88% விகிதத்தினர் முசுலீம்களாக இருந்தபோதிலும், அந்த நாட்டில் பின்பற்றப்பட்டுவரும் இசுலாம் மதத்தின் இணக்கப் போக்கின் காரணமாகவும், அரசாங்கம் கடைப்பிடிக்கும் விதிமுறைகள் காரணமாகவும் சிறுபான்மை இனத்தவர்களான கிறித்தவர்களும், இந்துக்களும், பௌத்த மதத்தவர்களும் சுதந்திரமாக வாழ்வதுடன் சகிப்புத்தன்மையுடன் நடாத்தப்படுகின்றார்கள்.

சிறிய தொகையான 6 மில்லியன் சீனமக்களிடம் எவரும் நம்பமுடியாத அளவு பாரிய பொருளாதார முன்னேற்றம் இருந்த போதிலும், அவர்கள் சகிப்புத்தன்மையுடன் நடாத்தப் பட்டார்கள்.

இசுலாமுக்கு இந்தோனேசிய சமூகத்தில் வலுவான இடம் வழங்கப்படவேண்டும் என்ற உணர்வு தற்போது வளர்ந்து வருவதால், சீன மற்றும் கிறித்தவ மக்களுக்கு இதுகாறும் காட்டப் பட்டுவந்த சகிப்புத்தன்மை குறைய ஆரம்பித்துள்ளது.

## செல்வம்

"செல்வத்தைப் பகிர்ந்தளிக்கும் போது நாட்டில் வாழும் பழங்குடி மக்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் மலேசியாவின் திட்டத்தைப் பற்றிக் கூறவேண்டியிருக்கின்றது"

என இந்தோனேசியாவின் திட்டங்களை நடைமுறைப்படுத்துபவரான திரு. இம்றான் அவர்கள் கூறுகின்றார்.

பொருளாதார ரீதியில் மேம்பாடடைந்திருக்கும் சிறுபான்மைச் சீனமக்களுடன் இந்தோனேசியாவிலுள்ள பழங்குடி மக்கள் போட்டியிடத்தக்க வகையில் மலேசியாவில் உள்ளதுபோல் அந்த மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கக் கூடிய வகையில் சட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் இவர் கூறுகின்றார்.

மலேசிய அரசினால் இனத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சர்ச்சைக்குரிய "புதிய பொருளாதாரக் கொள்கை"யைப் பற்றி கருத்து வெளியிட்ட இந்தோனேசியாவின் கல்விமான்கள் இப்படியான கொள்கை இந்தோனேசியாவை இனரீதியாகவும், சமூக பொருளாதார ரீதியாகவும் பிளவுபடுத்தும் என அஞ்சுகின்றார்கள்.

நீண்டகாலமாக இருந்துவந்த வெறுப்புணர்ச்சிகள் இப்பொழுது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன. உதாரணமாக கிறித்தவ மதத்தைச் சேர்ந்த சில பகுதியினர் மதம் மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்திய முசுலிம் கிராம மக்கள், கிழக்கு யாவாவிலும், சுமாத்திராவிலுமுள்ள மூன்று கிறித்தவ தேவாலயங்களைத் தாக்கியதோடு ஒரு தேவாலயத்தைக் கடந்த நவம்பர் திங்களில் தீயிட்டுக் கொழுத்தியுமுள்ளார்கள்.

பக்தி

இதுகாறும் பெயரளவில் இசுலாமியர்களாக இருந்த இந்தோனேசியர்கள், குறிப்பாக நடுத்தர வகுப்பினரும் மாணவர்களும், தற்பொழுது அதிக மதப்பற்று உள்ளவர்களாகக் காணப்படுவதாகவும், இசுலாமியக் கோட்பாடுகளுக்கு அமைவான சமூக நீதி மற்றும் வாழ்க்கை நலம் ஆகியவற்றில் இந்தோனேசிய அறிஞர்கள் நாட்டம் கொண்டுள்ளதாகவும் வெளிநாட்டு பார்வையாளர்கள் கருதுகின்றார்கள்.

இந்த இசுலாமிய புத்தெழுச்சி மதத்தினால் மாத்திரம் ஏற்படவில்லை எனவும், அரசியல், சமூக மற்றும் பொருளாதாரத் துறையில் மக்களுக்கு ஏற்பட்ட விரக்தி காரணமாகவே ஏற்பட்டதெனவும் இங்குள்ள மனித சமுதாயத்தின் வளர்ச்சி பற்றி ஆய்வு மேற்கொள்பவர்கள் கூறுகின்றார்கள்.

சிற்றூர்களிலும், நகர்ப்புறங்களிலும் பெரும்பாலான முசுலிம்களே ஏழைகளாகவும், கல்வி அறிவற்றவர்களாகவும் இருக்கின்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

றார்கள். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 20 மில்லியன் இந்தோனேசியர்களும் முசுலிம்களே.

இதற்கு முற்றிலும் எதிர்மாறாக, உயர்ந்த தகுநிலை உள்ளவர்களாகவும் வர்த்தக நிலையங்கள் பலவற்றை நடாத்துபவர்களாகவும், அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிப்பவர்களாகவும் அங்குள்ள 15 மில்லியன் கிறித்தவர்கள் இருக்கின்றார்கள்.

## உயர்வு தாழ்வு நிலைகள்.

"பொருளாதாரத்தில் சமமான வாய்ப்புக்கள் இருக்கவேண்டுமென்று விடப்படும் கோரிக்கையானது நீதியின் பால் பட்ட ஒரு சமூகப் பொருளாதாரச் சிக்கலாகும். இதை ஒரு இனத்துடன் தொடர்புடைய சிக்கலாகக் கருதக்கூடாது" என யகார்த்தாவில் தனது தலைமையகத்தை கொண்ட அனைத்துலக மற்றும் போர் சார்ந்த விவகாரத்தின் ஆய்வுக்கான கழகத்தின் (Centre for International and Strategic Studies – CISS) நிர்வாக இயக்குனரான காதி சொசெசுரோ அவர்கள் கூறுகின்றார்.

இந்தோனேசியாவில் 1980 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாகப் பலர் செல்வந்தராகி நன்மையடைந்தபோதிலும், சிறிய எண்ணிக்கையிலுள்ள செல்வந்தர்களுக்கும் அதிக எண்ணிக்கையிலுள்ள ஏழை மக்களுக்கும் இடையே அது ஏற்றத்தாழ்வுகளை கூட்டிவிட்டது, தனியார் துறையிலுள்ள வர்த்தக நிலையங்கள் பலவும் சீனமக்களிடம் இருந்ததால், அரசியல் மற்றும் படையத் தலைவர்களின் ஆதரவுடன் இந்தோனேசியாவின் பொருளாதாரம் வழங்கிய வாய்ப்புக்கள் யாவற்றையும் பயன்படுத்தி நன்மைபெறும் நிலையில் அவர்கள் இருந்தனர்.

உயர்ந்த நிலையிலுள்ள சீனக்குடும்பங்கள் கட்டுப்பாடு எதுவுமின்றித் தாராளமாகச் செலவு செய்வதையும், பகட்டாக வாழ்வதையும் வெறுக்கும் இந்தோனேசியாவிலுள்ள பழங்குடி மக்கள், ஏழை மக்களின் நன்மை கருதாது வகுக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் காரணமாகச் சீனர்கள் நன்மை பெறுவதாகக் குறைகூறுகின்றார்கள்.

நாட்டின் முழுச் சனத்தொகையில் சீனர்கள் 2 1% விகிதமாக இருந்த போதிலும், செல்வத்தின் 75% விகிதத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை அவர்களே கொண்டுள்ளனர் எனச் சனவரித் திங்களில் வெளியிடப்பட்ட இந்தோனேசியாவின் வர்த்தகத்தைப் பற்றிய

வாரவெளியீட்டில் கூறப்பட்டுள்ளது. சீனர்களுடைய இந்த மேம் பாடான நிலையைக்கண்டு மற்றவர்கள் மனவெறுப்புக்கொள்ள வெகுகாலம் பிடிக்காது என மனித சமூதாயத்தின் வளர்ச்சி பற்றி ஆய்வு மேற்கொள்பவர்கள் கருதுகின்றார்கள்.

## உணர்வுபூர்வமானது.

"இது இலகுவாகத் தீர்க்கக் கூடிய விடயம் அல்ல. வெவ் வேறு திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்குப் பல ஆண்டுகளாக நாம் முயன்றோம். சனாதிபதியும், அரசாங்கமும் இந்த விடயம் தொடர்பாக உணர்வுபூர்வமாக நடந்து கொள்வ தாகப் பாசாங்கு செய்கின்றார்கள்" என திரு. சொசெசுரோ அவர்கள் கூறுகின்றார்.

நாட்டின் ஒருமைப்பாட்டைச் சீர்குலையாது இந்தப் பொரு ளாதாரப் பங்கீட்டைத் துணிந்து மேற்கொள்வது என்பது சனாதிபதி சுகார்ட்டோ அவர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தக் கூடிய ஒரு அரசியல் நடவடிக்கையாகும்.

சீன வர்த்தக நலன்களுடன் நெருங்கிய தொடர்புடைய வர் என விமர்சிக்கப்பட்ட திரு. சுகார்ட்டோ அவர்கள் சமூகங் களுக்கிடையே சுமூக நிலையை உருவாக்க சீன வர்த்தகர்கள் தங் கள் உடைமைகளின் பெறுமதியின் 25% விகிதத்தைக் கூட்டுற வுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யவேண்டுமென 1980 ஆம் ஆண்டில் கேட்டுக்கொண்டார்.

ஆனால் இந்தத்திட்டம் வெற்றியளிக்கவில்லை எனவும் இலஞ்ச ஊழல்களை இல்லாது செய்வதுடன் சிறிய வர்த்தகர் களுக்கு அதிக கடனை உதவியாக வழங்குவதே செய்யக்கூடிய சிறந்த வழி எனவும் திரு. சொசெசுரோ அவர்கள் கூறுகின்றார்.

## அடுத்த முன்னுரிமை.

மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு சனாதிபதியாகப் பதவி வகிக் கத்தக்க வகையில் ஆறாவது முறையாக மார்ச் திங்களில் தெரிவு செய்யப்பட்ட திரு. சுகார்ட்டோ அவர்கள், சமூக மற்றும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கே தான் முன்னுரிமை கொடுக்கப் போவதாகக் கூறியிருந்தார்.

முசுலிம்களை பெரும் எண்ணிக்கையாகக் கொண்டதும், பொருளாதார வல்லுனர்களைக்கொண்டதுமான திரு சுகாட்டோ அவர்களின் புதிய மந்திரிசபை, பெரும்பான்மையினரான முசுலிம் மக்கள் இனிமேல் இந்தோனேசியாவின் பொருளாதாரத்தின் சிறிய பங்கைப் பெறமாட்டார்கள் என உத்தரவாதம் அளித்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

சீனாவிலிருந்து 1000 தொழிலாளர்களைக் கொண்டுவருவதற்கு சீனர்களின் நிறுவனம் ஒன்றிற்கு அனுமதி வழங்கியதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து சென்ற செப்டெம்பர் திங்களில் அந்த அனுமதி விலக்கப்பட்டது. அந்த நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களை நாடு கடத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள், அந்த நிறுவனம் நாட்டுப்பற்றற்றது எனவும், இலாபத்திலேயே கருத்தாக இருப்பதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளார்கள்.

தொழில்புரியும் வயதையடைந்த 82 மில்லியன் இந்தோனேசியர்களுள் 11 மில்லியன் பேர்வரை தொழில் வசதி எதுவுமற்றவர்களாக இருப்பதுடன் ஆயிரக்கணக்கானோர் வெளிநாடுகளில் வேலை செய்கின்றனர். மலேசியாவில் இப்படி ஐந்து இலட்சம் பேர் வேலை செய்கின்றனர்.

---

உலகிலேயே இரண்டு முறை எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த ஒரே பெண் என்ற பெருமை எனக்குக் கிடைத்திருப்பது ஆச்சரியமான விடயமல்ல. பழமைவாதம் நிறைந்த இந்திய சமுதாயத்தில் வாழ்வதைவிட, எவரெஸ்ட் உச்சிமீது ஏறுவது எனக்கு மிகவும் எளிதான செயலாகவே தெரிகிறது.

— சந்தோஷ்யாதவ்

---

# சனாதிபதி அவர்களின் செயலகத்தில் நண்பகலில் நடைபெற்ற அரசியல் நாடகம்

— கீத் நோயர் —

(சண்டே ரைம்சு 9. 5. 1993).

ஆமர் வீதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு நிகழ்ச்சி காரண மாக உருக்குலைந்த நிலையிலிருந்த உடல்களை மருத்துவ மனைக்கு அனுப்ப அபாய ஒலி கிளப்பிய வாகனங்களும், படை யமும் குண்டுவெடித்த இடத்தை சுற்றி வளைத்துக் கொண்டி ருந்த அதேவேளையில், இரகசியமான அரசியல் நடவடிக்கை ஒன்று அந்த நண்பகலில் திரைமறைவில் நடைபெற்றது.

குற்றுயிராய் கிடந்தவர்களைக் காப்பதற்கு மருத்துவர்கள் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளையிலும் கடந்த பத்தாண்டுள் நடைபெற்ற மிகவும் அச்சம்தரும் சம்பவத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவலில் செய்தியாளர்கள் முண்டி யடித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடித்திரிந்து கொண்டு இருந்த வேளையிலும், ஆட்சி மேலாண்மையில் ஏற்பட்டிருந்த மாற் றத்தை இணக்கமான முறையில் மேற்கொள்வதற்கான வழிகளை ஆராய்வதற்கான நடவடிக்கை சனாதிபதி அவர்களின் செயல கத்தில் மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சியினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மே நாள் ஊர்வலத்திற்குள் ஊடுருவிச் சென்ற மனிதக்குண்டாகத் தன்னைப் பாவித்த கொலையாளி, தனது மார்பில் பொருத்தப் பட்ட வெடிகுண்டுகளைப் பிற்பகல் 12. 42 மணியளவில் வெடிக்க வைத்தார். உருக்குலைந்த உடல்கள் இரத்தம் தோய்ந்த தெரு எங்ஙனும் சிதறுண்டு இருந்தபோது சனாதிபதி எங்கே என அங்கி ருந்தவர்கள் தேடினார்கள்.

குண்டுவெடிப்பு நடைபெறுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன் சனாதிபதியின் பக்கத்தில் நின்றிருந்த அவரின் பத்திரிகைச் செயலாளரான எவன்சு குரே சனாதிபதி தனது மெய்க்காப்பாளர்களால் காப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருப்பார் என எண்ணினார்.

அந்த இடத்தில் காணப்படாத சனாதிபதி அவர்களைத் தேடும் முயற்சியில் பலர் ஈடுபட்டிருந்தவேளையில், பிரதமமந்திரி டி. பி. விஜயதுங்கா அவர்களை சனாதிபதியின் செயலகத்துக்கு விரைந்து அழைத்துவரும்படி கூறப்பட்டது.

இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையிலும் சனாதிபதி அவர்கள் எங்கே இருக்கின்றார் என்பது யாருக்கும் தெரியவில்லை.

சட்டமா அதிபர் திலக் மாரப்பன அவர்களுடன் நண்பகல் 12.55 மணியளவில் தொடர்பு கொண்ட சனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜதாசா அவர்கள் இந்தக்குண்டு வெடிப்பைப் பற்றிக் கூறியதுடன், சனாதிபதி எங்குள்ளார் என்பது எவருக்கும் தெரியாது எனவும் கூறினார். சனாதிபதியின் செயலகத்திற்குத் தான் உடனடியாக வருவதாகத் திரு. மாரப்பன அவர்கள் திரு. விஜயதாசாவிற்குக் கூறினார்.

தனது மெய்க்காப்பாளருடன் காரில் சென்ற திரு. மாரப்பன, தான் செல்லும் வழியில் அரசியல் சட்டத்தலைமை ஆலோசகரான சிப்லி அசீசு அவர்களையும் தனது காரில் ஏற்றிக் கொண்டு சனாதிபதியின் செயலகத்திற்கு இருவரும் விரைவாகச் சென்றனர்.

தரைப்படைத் தளபதி சிசில் வைத்தியரத்தினா, வான்படைத்தளபதி ரெறன்சு குணவர்த்தனா, கடற்படைத் தளபதி மோகன் சமரசேகரா மற்றும் காவல்துறை மா அதிபர் ஏர்னசு பெரேரா அகியோர் சனாதிபதியின் செயலகத்திற்கு அந்த நேரத்தில் வந்திருந்தனர்.

கூட்டுப்படைத் தலைமைத் தளபதி கமில்ரன் வணசிங்கா அவர்களும் அங்கு வருகை தந்திருந்தார். ஆனால் சனாதிபதி எங்கிருக்கிறார் என்பது எவருக்கும் தெரியவில்லை.

பிரதம நீதியரசர் ஜீ. பீ. எசு. த சில்வா அவர்களைக் உடனடியாக அழைத்துவருமாறு சட்ட மா அதிபர் அறிவுறுத்தினார். பிரதம நீதியரசரை அழைத்து வருவதற்காக அரசியல் சட்டத்

தலைமை ஆலோசகர் சிப்லி அசீசு அவர்கள் நீதியரசரின் இல்லத்திற்கு விரைந்து சென்றார். அதே நேரத்தில் பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்கா அவர்களும் சிறப்புக் காப்புடன் அங்கு வந்து சேர்ந்தார்.

சனாதிபதியைப் பற்றிய ஆகப்பிந்திய நிலைமையை அறிந்து கொள்ளும்படி காவல்துறை மா அதிபர் ஏர்னசு பெரேரா கேட்கப்பட்டார். இதைத்தொடர்ந்து துணைக் காவல்துறை மா அதிபர் ஏ. எசு. செனவிரத்தினா அவர்கள் அங்கு அழைக்கப்பட்டதுடன் அவரின் வாக்குமூலமும் பதிவுசெய்யப்பட்டது. சனாதிபதி அவர்கள் இறந்துவிட்ட அந்தத் துக்ககரமான செய்தியை அவரே வெளியிட்டார். இந்தச் செய்தியை நம்பவியலாதிருந்த அரச மேலாளர்கள் யாவரும் சில நிமிடங்கள் மௌனமாகவிருந்தனர். அந்த இடத்திற்கு அழைக்கப்பட்ட சனாதிபதியின் மெய்க்காப்பாளரான துணை காவல்துறை மா அதிபர் குணதிலக அவர்கள் சனாதிபதி இறந்துவிட்டார் என்பதைப் பிற்பகல் 1. 15 மணிக்கு உறுதிசெய்தார்.

பதில் சனாதிபதியாகப் பிரதம மந்திரி சத்தியப்பிரமாணம் செய்யும் வரை இச்செய்தியை மக்களுக்குத் தெரியப்படுத்தக் கூடாது என அரச மேலாளர்கள் யாவருக்கும் அறிவுறுத்தப்பட்டது. வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்காக ஊரடங்குச் சட்டத்தை நாடுபூராவும் அமுல்படுத்தி மே நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள வந்த மக்கள் கூட்டத்தை கலைந்துசெல்லச் செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பதில் சனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்து வைப்பவரான பிரதம நீதியரசர் ஜீ.பி.எசு.த. சில்வா அவர்கள் அந்த நேரத்தில் அங்கு வந்திருந்தார்.

வீடமைப்பு மந்திரியும் ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளருமான சிறிசேனகூரே, கல்விமந்திரி ஏ.சி.எசு. கமீது, விளையாட்டுத்துறை மந்திரி நந்தா மத்தியூ, இராசாங்க மந்திரிகள் யோன் அமரதுங்க மற்றும் ஏ.ஜே றனசிங்க உட்பட பல மூத்த மந்திரிகளும், சபாநாயகர் எம்.எச். முகமதுவும், சனாதிபதி செயலகத்திற்கு வந்திருந்தனர்.

சனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் அரசியல் யாப்பை உருவாக்குவதில் நிபுணத்துவம் வாய்ந்தவரும், ஐக்கிய தேசியக்கட்சியைச் சார்ந்தவருமான கே.என். சொக்சி

அவர்களும் அங்கு நடைபெறும் விடயங்களுக்குத் தங்கள் உதவியை வழங்கினர்.

சனாதிபதியின் செயலாளர் கே.எச்.ஜே. விஜயதாசா அவர்களின் மதியபோசன அறையில் சட்ட மா அதிபர் மாரப்பன அவர்கள் பிரதம மந்திரி டி.பி. விஜயதுங்கா அவர்களுடன் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக ஆலோசனையில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது.

சனாதிபதி அவர்களின் துன்பகரமான சாவைப்பற்றி எதிர் கட்சித் தலைவர் சிறிமா பண்டாரநாயக்கா அவர்களுக்கும், ஏனைய கட்சித் தலைவர்களுக்கும் அறிவிப்பதற்காகத் துணைக் காவல்துறை மா அதிபர் ஏ. எசு. செனவிரத்தினா அவர்கள் அனுப்பப்பட்டார். ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் மே நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவந்த பொதுமக்களை அமைதியுடன் வீடுசெல்லும்படி கோரும்படியும் அவர்கள் கேட்கப்பட்டனர்.

பதில் சனாதிபதி பதவிப்பிரமாணம் செய்தபின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய உரையை சனாதிபதி சட்டத்தரணியான கே.என். சொக்சியும் மந்திரி ஏ.எஸ். கமீதும் தயாரித்தனர்.

பிரதம நீதியரசர் ஜி.பி.எசு.த. சில்வா அவர்களின் முன்னிலையில் பிரதம மந்திரி டி.பி விஜயதுங்கா அவர்கள் இலங்கையின் சனநாயக சோசலிச குடியரசின் பதில் சனாதிபதியாகப் பிற்பகல் 2.15 மணிக்குப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

பதில் சனாதிபதி அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டிருந்த வேளையில் இந்த விடயம் பற்றி மந்திரிகள் யாவருக்கும் தெரியப்படுத்த வேண்டுமெனவும், மந்திரிசபை அவசரமாகக் கூட்டப்பட வேண்டுமெனவும், அங்கிருந்த மந்திரிகளும், உயர்பதவியிலுள்ள அரசாங்க மேலாளர்களும் தீர்மானித்தனர்.

பதில் சனாதிபதி டி.பி. விஜயதுங்கா அவர்களின் தலைமையில் தேசிய காப்புச்சபை பிற்பகல் 2.30 மணியளவில் கூடியது. நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதை முப்படைத் தளபதிகளும் உறுதிசெய்யவேண்டும் என முப்படைகளின் புதிய தளகர்த்தர் பணித்தார். மே நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள வந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பும்வரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதில் கண்டிப்பு இருக்கக் கூடாது எனவும் அவர்களுக்குக் கூறப்பட்டது.

பதில் சனாதிபதி அவர்களின் பதவிப்பிரமாணத்தையும், மக்களுக்கு அவர்விடுக்கும் செய்தியையும் ரூபவாகினி ஒளிப்பதிவு செய்யும் பணி தகவல்துறை இரசாங்க மந்திரி ஏ.ஜே. றணசிங்க அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகையாளருக்கான மாநாடு ஒன்றைக்கூட்டி சனாதிபதியின் சாவைப்பற்றியும், பதில் சனாதிபதியின் பதவிப் பிரமாணத்தைப் பற்றியும் அவர்களுக்கு அறிவிக்கும்படி சனாதி பதியின் பத்திரிகைச் செயலாளர் எவன்சு கூரே அவர்கள் கேட்கப் பட்டார்.

செய்தியாளர்களின் மாநாடு மாலை 4.00 மணிக்கு நடை பெற்றுக்கொண்டிருந்த வேளையில் ஆட்சி மாற்றத்தை எந்தவித மான தடங்கலுமின்றி நடைமுறைப்படுத்தக் கூடிய வழிமுறை களை ஆராய்வதற்கு மந்திரிசபை அவசரமாகக் கூடியது. இவை யாவும் இரவு 10.00 மணிக்கு முடிந்தபின் சனாதிபதியின் செய லாளர் கே.எச். விஜயதாசா பிரதம மந்திரியின் செயலாளர் அபேசிங்கா, சட்ட மா அதிபர் திலக் மாரப்பன மற்றும் அர சியல் சட்டத்தலைமை ஆலோசகர் சிப்லி அசீசு ஆகியோருடன் பதில் சனாதிபதி டி.பி. விஜயதுங்கா அவர்கள் சனாதிபதி செயலகத்தைவிட்டுச் சென்றார்.

சனாதிபதி ஒருவரின் கீழ் பணியாற்றியவர்கள் அவர் திடீ ரென மறைந்ததும் அரச மேலாண்மையை இணக்கமான முறை யில் மாற்றுவதற்கும் அரசாங்கத்தைத் தொடர்ந்தும் நடாத்துவ தற்கும் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை இது வாகும்.

---

மனம் அமைதியாக இருக்க வேண்டுமானால் எதிர்மறையான சிந்தனைகளையும், பிறரது திறமைகளைச் சிறுமைப்படுத்துவதை யும், கீழ்த்தரமான முறையில் அவர்களை விமர்சிப்பதையும் நிறுத்துங்கள். வேகமாகத் தண்ணீர்விட்டுக் கழுவியதைப்போல் உங்கள்மனத்தை சுத்தம்செய்யுங்கள். எப்போதும் மனத்தில் ஊக்க மான சிந்தனைகளையே நிரப்புங்கள். எப்போதும், எதிலும் நல்லதே நடக்கும் என்றே செயல்படுங்கள். இப்போது நீங்கள் தான் உலகிலேயே மிகவும் அமைதியான மனம் உடையவர்.

— என். வி. பீல்.

# சனாதிபதி அவர்களின் கொலைக்குப் பின்னர் முக்கியமானவர்களின் காப்பில் பெரிய மாற்றம் ஏற்படவிருக்கின்றது.

—சாமிந்திரா பெர்ணாண்டோ—

(ஐலண்ட் — 16. 5. 1993.)

கொழும்பில் சனாதிபதி இரணசிங்க பிரேமதாசா அவர்கள் கொல்லப்பட்டமை ஆளும் கட்சியிலுள்ள தலைவர்களுக்குக் காப்பு வழங்குவதற்குப் பொறுப்பாகவுள்ள காப்பு இயந்திரத்தை ஆட்டம் காணச் செய்துள்ளது. சனாதிபதியின் காப்புக்குப் பொறுப்பாகவிருந்தவர்கள் அவரைக் காக்கத் தவறிவிட்டார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டதால் மனம் நொந்த மூத்த காவல்துறை மேலாளர் ஒருவர் பதவியிலிருந்து விலக முன்வந்திருப்பதுடன், வேறு சில மேலாளர்கள் சனாதிபதியின் காப்புப் பகுதியிலிருந்து தாங்கள் உடனடியாக மாற்றம் செய்யப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

திரு. பிரேமதாசா அவர்களின் கொலை, இலங்கைக் காப்புத்துறையினரை குறிப்பாக அரசாங்கக் கட்சியைச் சார்ந்த முக்கிய அரசியல் வாதிகள் மற்றும் அரசாங்கத்தில் உயர்பதவி வகிக்கும் மேலாளர்கள் ஆகியோரின் காப்புக்குப் பொறுப்பாகவுள்ள மூத்த காவல்துறை மேலாளர்களை அதிர்ச்சியுறச் செய்துள்ளது.

''விடுதலைப்புலிகளின் பயங்கரவாத நடவடிக்கை காரணமாக கொழும்பு நகரத்தில் பலியான முதல் நபர் ,சனாதிபதி பிரேமதாசா அவர்கள் மாத்திரம் அல்ல'' எனக்கூறிய மூத்த காப்பு மேலாளர் ஒருவர், முக்கிய இலக்குகள் மீது மேலும் பல தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் எனவும் கூறியுள்ளார்.

மே திங்கள் முதலாம் நாள் இடம்பெற்ற சனாதிபதியின் கொலையை விசாரணை செய்துவரும் காவல்துறை மேலாளர்கள், குலவீரசிங்கம் வீரக்குமார் என்ற அந்த இளம் கொலையாளி சனாதிபதியின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டு சனாதிபதியின் தனிப்பட்ட காப்பு ஆலோசகராக விருந்த பி. எம். மொகைதீன் அவர்களுடன் நெருங்கிய உறவை வைத்துக் கொண்டார் எனக்கூறியுள்ளார்கள். சனாதிபதி அவர்களுக்குக் காப்பு வழங்கியவர்களுடன் தொடர்புள்ள அனேகருடன் கொலையாளி நல்ல உறவை வைத்திருந்ததாகவும் இந்த விசாரணையை மேற்கொள்பவர்கள் கூறியுள்ளனர்.

"கொலையாளி திரு. மொகைதீன் அவர்களின் நெருங்கிய நண்பனாக இருந்ததனால் அவரைச் சந்தேகிப்பதற்கு எக்காரணமும் இருக்கவில்லை" எனக்கூறிய மேலாளர்கள் சனாதிபதி பிரேமதாசா அவர்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் அவருடன் உடன் சென்றவர்களில் கொலையாளியும் ஒருவராகவிருந்தார் எனவும் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

கொலை செய்யப்பட்ட சனாதிபதி அவர்கள் எங்கு சென்றாலும் அவருடன் செல்லும் அவருடைய தனிப்பட்ட காப்பு ஆலோசகரான மொகைதீன் அவர்களுடன் மொனறாகலை, கதிர்காமம், குருணாகலை, பெல்மதுல்லை, எம்பிலிப்பிட்டிய, அம்பன்பொலை ஆகிய இடங்களுக்கு இந்தக் கொலையாளி சென்றுள்ளார் என இந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அலுத்கடைப்பக்கத்திலிருந்து வந்த ஊர்வலத்துடன் ஈருருளியில் வந்த கொலையாளி ஆளும் கட்சியின் ஊர்வலம் ஆமர் வீதியிலுள்ள காவல்துறை நிலையத்தைக் கடந்து செல்லும் போது அதனுடன் இணைந்து அதன் முன்புறத்திற்கு வந்ததாக இந்த விசாரணையை மேற்கொள்பவர்கள் நம்புகின்றனர்.

அவர் முன்னேறி வருவதைக்கண்டு எச்சரிக்கை அடைந்த காப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் அவரைத் தடுத்து நிறுத்த முயன்றபோது அவருக்கு நன்கு தெரிந்த சனாதிபதி அவர்களின் தனிப்பட்ட காப்பு ஆலோசகரான திரு. மொகைதீன் அவர்கள் தன்னை நோக்கிவருவதற்கு அவரை அனுமதிக்குமாறு காப்பு மேலாளர்களைக் கேட்டுக்கொண்டதனாலேயே இந்தக் கொலையையும் மற்றும் 23 பேருடைய கொலையையும் விடுதலைப் புலிகளால் செய்ய முடிந்தது.

முழுக் காப்புத்துறையினரையும் அந்தக் கொலைகாரன் ஆச்சரியமடையச் செய்துள்ளான். சனாதிபதி பிரேமதாசா அவர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



களைக் கொல்வதற்கு நெடு நாட்களாகக் காத்திருந்த அவர், சனாதிபதி அவர்களின் காப்புக்குப் பொறுப்பாக இருந்தவர்களுடனும், மொகைதீன் அவர்களுடனும் நெருங்கிய உறவை வைத்திருந்தார்.

சனாதிபதி பிரேமதாசா அவர்களுக்குச் சொந்தமானதும், கொழும்பிலுள்ளதுமான அவரின் வதிவிடமான ''சுசறித்த'' வுக்கும், அம்பன் பொலவில் உள்ள அவருடைய தோட்டத்திற்கும் அந்தக் கொலையாளி சென்றுள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தங்களுக்கென ஒரு தனிநாடு வேண்டுமென்ற தங்கள் குறிக்கோளை எட்டுவதற்குத் தாங்கள் எதையும் செய்யத் தயாராகவிருக்கின்றார்கள் என்பதை சனாதிபதி பிரேமதாசா அவர்களைக் கொலை செய்ததன் மூலம் விடுதலைப்புலிகள் தெரியப்படுத்தியுள்ளனர்.

71 வயதான சனதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்கா அவர்களின் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு அதன் முக்கியமான இலக்குகள் மீது விடுதலைப்புலிகள் துணிகரமான தாக்குதல்களை மேற்கொள்வர் என மூத்த மேலாவர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

''அச்சமே வழிகாட்டும் குறிப்பாக விளங்குகின்றது'' எனக் கூறிய காப்பு மேலாளர் ஒருவர் விடுதலைப்புலிகளின் ஆற்றலையும், நிபுணத்துவத்தையும் நோக்குகையில் முக்கியமானவர்களைக் காப்பது மிகவும் முக்கியமானதும், கடினமானதுமான பணியாக இருப்பதாகக் கருதுகின்றார்.

இறந்த சனாதிபதி மிகவும் சிறப்பான காப்பைப் பெற்றிருந்தார். சனாதிபதியின் காப்புப் பிரிவினரும், சிறப்பு அதிரடிப் படையினரும் அவருக்குக் காப்பை வழங்கியிருந்தனர். மூத்த காவல்துறை மேலாளர் ஒருவரையும் (SSP), மூன்று காவல்துறை மேலாளர்களையும் (SP), பன்னிரெண்டிற்கும் அதிகமான உதவி மேலாளர்களையும் (ASP), குறைந்த தரத்திலுள்ள மேலாளர்களையும் உள்ளடக்கியதும், உதவிக் காவல்துறை மா அதிபர் ஒருவரின் தலைமையிலானதுமான சனாதிபதியின் காப்புப் பிரிவு, சனாதிபதி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் காப்பை வழங்கும் முக்கிய பங்கை ஏற்றிருந்தது.

அம்பாறை - மட்டக்களப்பு பகுதிகளில் மேற்கொள்ளப் பட்ட போர் நடவடிக்கைகளின்போது நல்ல பட்டறிவைப் பெற்றவர்

27726

களும், கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் மிகவும் ஆற்றல் வாய்ந்தவர்களுமான காவல்துறையைச் சேர்ந்த சிறப்பு அதிரடிப் படையினர் சனாதிபதியின் காப்புப் பிரிவைப் பலப்படுத்துவதற் காக அவர்களுடன் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

"அவர்கள் யாவரும் மிகவும் ஆற்றல் வாய்ந்தவர்கள்" என ஒரு மேலாளர் கூறினார். சனாதிபதி பிரேமதாசா அவர்கள் கொல்லப்பட்டபோது அவருக்கு அருகில் நின்றவர்களில் குறைந் தது 24 பேர் கொல்லப்பட்டனர்.

சனாதிபதியின் காப்புப் பிரிவு மற்றும் சிறப்பு அதிரடிப்பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த பலரும் இறந்தவர்களுள் அடங்குவர். சனாதிபதி பிரேமதாசா அவர்களின் மெய்க்காப்பாளரான காவல் துறை உதவி மேலாளர் சரத் மகிந்தா (ASP) மற்றும் துப் பாக்கிச் சூட்டில் மிகவும் திறமைவாய்ந்தவர்களாகக் கணிக்கப் பட்டவர்களில் ஒருவரும் காவல்துறை தலைமை மேலாளர் (Chief Inspector) உபாலி சில்வா அவர்களும் இறந்தவர்களுள் அடங் குவர். "காவல்துறையைச் சேர்ந்த நான்கு அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதுடன், மூவர் கடும் காயமுற்றனர்" என மூத்த மேலாளர் கூறினார்.

சனாதிபதி பிரேமதாசா அவர்களின் கொலை, கனவான்களி னதும், இராசதந்திரிகளினதும் காப்பு சம்பந்தமாகப் புதிய அணுகுமுறையைக் கையாளவேண்டிய கட்டாயத்தை காப்பு மேலாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. சனாதிபதியின் காப்புப்பிரி வுக்குப் பொறுப்பாகவுள்ள மூத்தமேலாளர் ஒருவர் தன்னை அந்தப் பிரிவிலிருந்து மாற்றிவிடும்படி ஏற்கனவே காவல்துறை மா அதிபர் ஏர்னசு பெரேரா அவர்களைக்கோரியுள்ளார். சனாதிபதி அவர்களின் கொலைக்குப்பின் அந்தப் பிரிவில் கடமை யாற்றும் நிலையில் தான் இல்லையென அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். அவரைத் தவிர வேறு பலர் முக்கியமானவர்கட்கும், இராசதந்திரிகளுக்கும் காப்பு வளங்கும் பிரிவிலிருந்து தங்களை மாற்றிவிடும்படி கேட்டுள்ளதாகத் தெரிகின்றது.

கொலையுண்ட சனாதிபதி அவர்கள் வழமையாகச் செல்லும் சனாதிபதிச் செயலகம், நடமாடும் செயலகம், அவரின் சொந்த வதிவிடமான சுசறித்த ஆகியவற்றையும் மற்ற இடங்களையும் சனாதிபதியின் காப்பு ஊழியர்கள் காவல் செய்து வந்தனர்.

சனாதிபதி பிரேமதாசா அவர்களின் கொலைக்குப் பின்னர் புதிய சனாதிபதியின் காப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தக்

கொலை காப்பு வளங்கும் முறையை முற்றாக மாற்றியுள்ளது என மேலாளர் கூறியுள்ளனர்.

தன்னை மனிதக் குண்டாகப் பாவித்து கடுமையான காப்பு ஏற்பாடுகள் யாவற்றையும் தாண்டி கொலையைச் செய்வதற்கு கொலையாளி சென்ற முறையை நோக்குகையில் முக்கியமானவர்களுடன் கூடிச் செல்பவர்களின் சகாக்கள் பற்றி காப்புக்குப் பொறுப்பானவர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகின்றது.

சனாதிபதி அவர்களின் கொலையைத் தொடர்ந்து பிரதம மந்திரியின் காப்புப் பிரிவில் காவல்துறையைச் சேர்ந்த அதிரடிப் படையினரைக் கடமைபுரிய அமர்த்தியதன் மூலம் காப்பு மேலாளர்கள் அந்தப் பிரிவை வலுப்படுத்தியுள்ளார்கள்.

திரு. டிங்கிரி பண்டா விஜயதுங்கா அவர்கள் பிரதம மந்திரியாக இருந்த போது துணை காவல்துறை மா அதிபர் ஒருவரின் தலைமையில் பிரதம மந்திரியின் காப்புப் பிரிவினரால் அவருக்குக் காப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய பிரதம மந்திரியான ரணில் விக்கிரமசிங்கா அவர்களைக் காப்பதற்கு காவல்துறையைச் சேர்ந்த அதிரடிப்படையினரின் உதவியை பிரதம மந்திரியின் காப்பு பிரிவுக்கு காப்பு மேலாளர்கள் வழங்க, மே தினத்தில் இடம்பெற்ற கொலைச்சம்பவம் வழிவகுத்துள்ளது.

நாட்டின் தலைவருக்கும், பிரதம மந்திரிக்கும் காப்பு வழங்கும் பணியை சனாதிபதியின் காப்புப் பிரிவும், பிரதம மந்திரியின் காப்புப் பிரிவும் சிறப்பு அதிரடிப்படையினரும் மேற்கொள்ளும் வேளையில் இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது சனாதிபதியான ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களுக்கும், மந்திரிமார்களுக்கும் காப்பு வழங்கும் பொறுப்பு வேறு இரு பிர்வுகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.

நாளை நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலின் பின் அரசாங்கக் காப்பு அமைப்பில் மேலும் பல மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாக ஐலன்ட் நாளிதழுக்குத் தெரியவந்துள்ளது.

சனாதிபதி பிரேமதாசா அவர்களின் கொலையைப் பற்றி அரசாங்கம் இந்த வார இறுதியில் தீவிரமாக ஆராயுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கொல்லப்பட்ட சனாதிபதியுடன் திரு. பிரபாகரன் அவர்கள் தொடர்பு கொள்வதற்கு இந்தக் கொலையாளி அவரால் முன்

னர் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற ஒரு கருத்து சில வட்டாரங்களில் நிலவுகின்றது.

எதையும் வெளிப்படையாகப் பேசுபவரும், படைய ரீதியாக விடுதலைப்புலிகளை வெல்லவேண்டுமென்ற அரசாங்கத்தின் விருப்பை நிறைவேற்ற அரும்பாடுபட்டவருமான காப்பு உதவி மந்திரியான றஞ்சன் விஜயரத்தினா அவர்களின் இழப்புக்குபின் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எந்தவிதமான பாரிய தாக்குதல்களையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. போரை நடாத்துவதில் பட்டறிவும், ஆற்றலும் வாய்ந்த மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவா, பிரிகேடியர் விஜய விமலரத்தினா மற்றும் வடக்கில் கடற்படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த கொம்மடோர் மோகன் ஜயமாக ஆகியோரின் கொலைக்குக் காரணமாகவிருந்த சர்ச்சைக்குரிய அராலித்துண்டு வெடிப்புச் சம்பவம் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளவிருந்த பாரிய தாக்குதல் திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது போலத் தோன்றுகின்றது.

விடுதலைப்புலிகள் தாக்குவார்கள் எனச் சனாதிபதி அவர்கள் எதிர்பார்க்கவில்லை எனப் பலர் கருதுகின்றார்கள். தெற்கிலுள்ள அவரின் பகைவர்களிடமிருந்து அவரைக் காப்பாற்றுவதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அதன்படியே அவரது காப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகளுக்குச் சனாதிபதி பலதடவை சென்றுள்ளார். திரிகோணமலைக்கு அவர் சென்றிருந்த வேளையில் அவர் அங்கு சுதந்திரமாக நடமாடி அங்குள்ள மக்களுடன் பேசியதை நான் கண்டேன்.

காப்புத்துறையினரை மாத்திரமின்றி சனாதிபதி அவர்களின் உறவினர்களையும் இந்தக் கொலை அதிர்ச்சியுறச் செய்துள்ளது.

சனாதிபதி கொல்லப்பட்டார் என்று கேள்வியுற்றதும் சனாதிபதியின் செயலகத்தில் அவசரமாக நடாத்தப்பட்ட மாநாட்டிற்கு வந்த சனாதிபதி பிரேமதாசா அவர்களின் நெருங்கிய உறவினர் ஒருவர், காவல்துறையினர் சனாதிபதியைக் காப்பாற்றத் தவறிவிட்டதாக வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டினார். சனாதிபதி அவர்களின் கொலையினால் ஏற்பட்ட சிக்கல்களையும், இலங்கையின் நிறைவேற்று மேலாண்மை கொண்ட மூன்றாவது சனாதிபதியாகத் திரு. டிங்கிரி பண்டா விஜயதுங்கா அவர்களை நியமித்ததன் மூலம் எழக்கூடிய சிக்கல்களையும் வெற்

றிகொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்காக ஆளும் கட்சியில் செல்வாக்குள்ள அரசியல்வாதிகள் அரச சேவையில் உயர்பதவி வகிப்போர், முப்படைத்தளபதிகள் மற்றும் காவல் துறை மா அதிபர் ஆகியோர் அந்த நேரத்தில் ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் மனவேதனை அடைந்த காவல்துறை மேலாளர் ஒருவர் புதிய சனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தனது நிலைப் பாட்டை விளக்கியிருந்ததுடன், முன்னாள் சனாதிபதி இரணசிங்க பிரேமதாசா அவர்களைக் காப்பாற்றத் தவறியதற்குக் காவல் துறையினரே பொறுப்பு என அரசாங்கம் கருதுமாயின் தான் வகிக்கும் பதவியை விடுத்து அதற்குக் குறைந்த 'தரத்திலுள்ள பதவியைத் தான் வகிக்க முன்வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

தன்னை மே திங்கள் 3 ஆம் நாளன்று சந்திக்கும்படி சனா திபதி விஜயதுங்கா அவர்கள் அந்த மேலாளரைப் பணித்தார். புதிய சனாதிபதி அவர்களைச் சந்தித்து அவர் என்ன விரும் புகின்றார் என்பதை அறிவதற்கு அந்த மேலாளர் வேறு ஒருவரை அனுப்பிவைத்தார்.

அப்படி அனுப்பப்பட்ட காவல்துறை மேலாளர் சனாதிபதி அவர்களைச் சந்தித்தபோது பதவி விலக முன்வந்த மேலாள ரையே தான் சந்திக்க விரும்புவதாகச் சனாதிபதி கூறினார்.

அவர் வகித்துவந்த பதவியில் தொடர்ந்தும் பணிபுரிவதை சனாதிபதி விஜயதுங்கா அவர்களின் அரசாங்கம் விரும்புவதாக அதே நாளில் அந்த மேலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

எப்படி இருப்பினும் நாளை நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலின் பின் பல மாற்றங்கள் இடம்பெறவிருப்பதாக அதிகார பூர்வமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

சட்டத்திற்கு ஒவ்வாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்தும் மேலா ளர்கள் மற்றும் அரச உயர்பதவி வகிப்போர் இந்த வார இறு தியில் பெரிய அதிர்ச்சிக்கு உள்ளாகவேண்டிவரும்.

---

கஷ்டங்கள், நஷ்டங்கள் அடைந்த பின்புதான், மனிதர்கள் அதிக அடக்கத்தையும் அறிவையும் பெறுகின்றனர்.

— ஃப்ராங்க்ளின்

# விடுதலைப் புலிகளின் இலக்கு

—கௌடில்யா—

(ஐலன்ட் — 16. 5. 93)

விடுதலைப் புலிகள் வாய்ப்புக் கிடைக்கும் வேளையில் தாக்கக் கருதிய இலக்கைத் தாக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களா யிருக்கின்றார்கள். ''இனத்தூய்மை'' நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டிருப்பினும் இதை "இனத்தூய்மை" என்று கூறமுடியாது. பொசனியாவில் சேர்பியர்களின் இலக்குக்கு முசுலிம்கள் எப்படி ஆளாகியுள்ளார்களோ அதுபோல் விடுதலைப் புலிகளின் இலக்குக்கு இங்கு வாழும் 190 முசுலிம்கள் ஆளாகியிருந்தனர்.

இது ஒரு நுணுக்கமான நடவடிக்கை ஆகும். கொலை செய்வதில் நாட்டம் கொண்ட ஒருவர், தனது சொந்த ஆத்ம திருப்திக்காகக் கொலை செய்வாராகில் ''அதைத் தொடர்ச்சியான கொலைகள்'' எனக்கூறலாம். ஆனால் இது இனப்பூசல் காரணமாகத் தோன்றிய அரசியல் மற்றும் படைய ரீதியான போராட்டமாகும். சிங்களத் தலைவர்களையும், படையம் மற்றும் பொது மக்களுக்கிடையே உள்ள மிகவும் ஆற்றல் வாய்ந்தவர்களையும், செல்வாக்குள்ளவர்களையும் ஒவ்வொருவராக ஒழித்துக்கட்டுவதைத் ''தேர்ந்தெடுககப்பட்ட தூய்மைப்படுத்தல்'' எனக் கூறலாம்.

சனாதிபதிகள், சனாதிபதிப் பதவிக்கான வேட்பாளர்கள், படையினரின் நன்மதிப்பைப் பெற்ற அரசியல்வாதிகள் மற்றும் காப்பு மந்திரிகள், உயர்ந்த பதவிவகிக்கும் படைத்தளபதிகள், மக்களால் நன்கு விரும்பப்படும் படைவீரர்கள், கருமமே கண்ணாகவிருக்கும் கடற்படைத்தளபதிகள், உயர்பதவி வகிப்பவர்கள் ஆகிய இவர்களில் எவரேனும் தன்னை மனிதகுண்டாகப் பாவிக்கும் ஒருவரால் அல்லது கண்ணி வெடியால் அல்லது துப்பாக்கிச் சூட்டால் கொல்லப்படலாம்.

இதன்மூலம் எங்களுக்குள் பகையுணர்வை உருவாக்கி விடுதலைப்புலிகளே நன்மை அடைகின்றார்கள். பகையுணர்வுடன் தங்கள் அரசியலை நடாத்துபவர்களும், ஆட்சிபீடத்தில் அமர்வதையே கருத்தாகக் கொண்டவர்களுமான கட்சிகளும், மக்களிடையே கருத்தை உருவாக்கக்கூடிய நிலையிலுள்ள கற்றவர்களும் இதற்காக ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்துவது எங்கள் அரசியலில் வழமையாகிவிட்டது.

அரசியல் கட்சிகளுக்கிடையே பிளவுகள் ஏற்படும் பொழுது விடுதலைப்புலிகளே நன்மை அடைகின்றார்கள். சிங்களக்கட்சிகள் ஒன்றின் மீது மற்றது குற்றம் சுமத்தும் போதும், ஒன்றின் கொள்கையை மற்றது திரித்துக் கூறும் போதும் சிங்கள மக்களுக்கிடையே பிளவுகள் அதிகரிப்பதுடன், உண்மையான விடயங்கள் ஒன்றில் உதாசீனம் செய்யப்படுவதால் அல்லது மறக்கப்படுவதால் அவர்கள் குழப்பத்திற்கு ஆழாகி மனச்சோர்வு அடைகின்றார்கள். இப்படியான ஒருநிலையை உருவாக்குவதில் திரு. பிரபாகரன் அவர்கள் மிகவும் கூர்மதி வாய்ந்தவர் என்பதை நான் முன்பு கூறியுள்ளேன்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காரணமாகத் தெற்கின் உறுதிப்பாடு சீர்குலைந்தது, அரசாங்கம் நெருக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டும், அரசியலில் இருள் சூழ்ந்தும், பொதுமக்கள் குழப்பமடைந்தும், சோர்வுற்றும் இருப்பதுடன் இலங்கையின் எதிர்காலத்தைப்பற்றி வெளியுலகமும் நம்பிக்கை இழந்துள்ளது.

## எதிர் விளைவை ஏற்படுத்தும் கோட்பாடு.

தென்னிந்தியாவிலிருந்து வெளிவரும் இரண்டு ஆங்கில நாளேடுகளில் குறிப்பிட்டிருந்தது போல், விடுதலைப் புலிகள் வகுத்த திட்டத்தின்படி யாவும் நடை பெறவில்லை. தங்கள் நடவடிக்கைகள் சிங்கள மக்களிடையே எதிர்விளைவை ஏற்படுத்துமென விடுதலைப்புலிகள் நம்பியிருந்தனர். அப்படி நடந்திருந்தால் இலங்கைக்கு வெளிநாடுகளிலுள்ள செல்வாக்கையும், அதற்கு மற்ற நாடுகளிடமிருந்து கிடைக்கும் உதவியையும், இங்கு செய்யப்படும் முதலீட்டையும், அதன் உல்லாசத் துறையையும் அது வெகுவாகப் பாதித்திருக்கும். ஆனால் தங்கள் தலைவர்களைவிடத் தாங்கள் கூரறிவு படைத்தவர்கள் என்பதைச் சிங்கள மக்கள் தெரியப்படுத்தியுள்ளார்கள். 1983 ஆம் ஆண்டில் ஜாதிக சேவய சங்கமய கட்டவிழ்த்துவிட்ட வன்செயல்கள் காரணமாக நாடும் மக்களும் அல்லலுற்றதைக்கண்ட அவர்கள் நல்ல பாடத்தைக் கற்றுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கை சிங்கள மக்களிடையே எதிர்விளைவை ஏற்படுத்துமானால் அது இலங்கையின் புகழுக்கு இழுக்கை ஏற்படுத்துவதுடன் வெளிநாட்டில் விடுதலைப் புலிகள் செல்வாக்கைப்பெற உதவும் என சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' என்ற நாளேடும் பங்களூரிலிருந்து வெளிவரும் 'டெக்கன் கெரல்ட்' என்ற நாளேடும் தெரிவிக்கின்றன. ''பழிவாங்கும் எதிர் நடவடிக்கைகளுக்குப் பயந்து ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொழும்பிலிருந்து தப்பியோடுகின்றார்கள்'' என்ற தலைப்புச் செய்தியைத் தனது முதலாம் பக்கத்தில் ஒரு நாளேடும் ''கொழும்பில் வாழும் தமிழ்மக்களுக்குப் போதிய காப்பு வழங்கப்படுவதை உறுதி செய்யப்பட்டுள்ளது'' என்ற செய்தியை மற்ற நாளேடும் கொண்டிருந்தது. சில குண்டர்களின் கல்வீச்சுக்கு இலக்கான இல்லத்தையுடைய திரு. தொண்டமான் அவர்கள் தமிழ்மக்கள் காக்கப்படுவர் என்று விடுத்த உறுதிமொழிக்கு 'இந்து' நாளேடு முக்கியத்துவம் கொடுத்திருந்தது.

''தமிழ்மக்கள் தாக்கப்படுவார்கள் என்ற ஊகத்திற்கு எந்த விதமான ஆதாரமுமில்லை. ஆகையால் அவர்களிடையே பயப்பீதியை உருவாக்குவதை ''நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்'' என இவர் கூறியுள்ளார் வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட இருக்கின்றன'' என எச்சரித்ததன்மூலம் ''சிறுபான்மை மக்களுக்கிடையே பயப்பிராந்தியை ஏற்படுத்திய'' மேலைத்தேச தொலைக்காட்சிச் சேவை ஒன்றை அவர் சாடியுள்ளார். சுதந்திரமாக இயங்கும் பத்திரிகைத்துறையினர் பொறுப்புடனும், நேர்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்குச் சில வேளைகளில் நினைவுறுத்த வேண்டியுள்ளது.

(தென் ஆசியாவின் கூட்டுக்காப்பு என்ற கட்டுரையில் இருந்து ஒரு பகுதி)

---

நம்மைத் தாழ்த்திப் பேசும்போது அடக்கமாய் இருத்தல் பெரிய காரியமன்று. நம்மைப் புகழ்ந்துரைக்கும்போது அடக்கமாய் இருத்தலே மிகப்பெரிய வெற்றியாகும்.

— அர்ச் பெர்னார்டு.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# கெடுபிடிப் போருக்கான புதிய பூதம்

## அச்சுறுத்தலாக விளங்குகின்றது எனக் கூறப்படும் இசுலாமிய அடிப்படை வாதம் பற்றிய சில உண்மைக்கருத்துக்கள்.

— அமீன் இசாடீன். —

(சண்டே ரைம்சு 18. 4. 93)

உலகெங்கும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய மாபெரும் ஆற்றலாக மதம் விளங்குவதாக உலக அரசியல் ஆய்வாளர்களில் ஒருவர் கூறுகின்றார். திறமையற்றதும் செயலற்றுப்போனதுமான வழிமுறைகளைக்கைவிட்டு செயற்றிறன் வாய்ந்த வழிமுறைகளைக் கண்டறிய அவாவுறும் சமூகங்களுக்கு அவர்களது என்று உரிமை கொண்டாடவும் அவர்களை இனங்காட்டவும் தக்கவகையில் செயலாற்ற, மதம் ஒரு செயன்முறையை அவர்களுக்கு வழங்குகின்றது.

சமுதாய மட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி திபெத்தில் பௌத்த மதத்தினரும், இந்தியாவில் தாழ்த்தப்பட்ட இந்துக்களும், லத்தீன் அமெரிக்காவிலும், பிலிப்பைன் நாட்டிலும் கிறித்தவர்களும் தங்கள் மதங்களை மறுமலர்ச்சி அடையச் செய்துள்ளார்கள். எங்கும் நிலைமை இவ்வாறாக இருக்கும் பொழுது இசுலாமிய இயக்கத்தை மாத்திரம் பூதமாகக் காட்டி வன்முறையுடன் அதைச் சம்பந்தப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? அல்லது இசுலாம் மதத்தைத் தங்கள் பகைவனாகக் கொண்டு அதற்கு எதிரான போரை நடாத்துவதற்கு இரண்டாவது கெடுபிடிப் போர் ஒன்றை உருவாக்க மேற்குலக நாடுகள் முயல்கின்றனவா? சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் இசுலாமிய அடிப்படைவாதத்தை முதலாவது எதிரியாகக் கருதி அதற்கு எதிரான திட்டங்களை அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலக நாடுகள் வகுக்க முயன்றுவருவதனால் இந்தக் கேள்வி அனைத்

துலக நாடுகளுக்கிடையில் முக்கியத்துவம் பெறுகின்றது. மேற் குலக நாடுகளின் நலன்களைப் பேணுவதற்கு யூதர்களின் ஆதர வுடன் அமெரிக்கா ஒரு புதிய பூதத்தை உருவாக்கும் நோக்கில் இசுலாமிய அடிப்படைவாதம் அச்சுறுத்தலாக இருக்கின்றதெனப் பெரிதுபடுத்துகின்றதா என்பதைச் சமநிலையிலிருந்து நாம் நோக்கவேண்டும்.

அடிப்படைவாதத்தின் எதிர்மறைப் பண்புகளை அல்லது வெறுக்கத்தக்க பண்புகளை நாம் முதலில் ஆராய்வோம்.

மிகவும் ஈவிரக்கமுள்ள பெரிதும் நன்மைபயக்கின்ற ஆண்ட டவனின் பெயரால் என்ற வாசகங்களுடன் உலகத்தின் 1000 மில்லியன் முசுலிம்களின் புனித நூலான குர்ஆன் ஆரம்பமா கின்றது.

ஆனால் ஆண்டவரின் பெயராலேயே, வெடிகுண்டுகள் நிரப்பப் பட்ட வண்டியொன்று லெபனானில் அமெரிக்கா மற்றும் பிரான்சு நாட்டைச் சேர்ந்த படையினர் தங்கிய பாசறைக்குள் சென்று மோதி அந்த நாடுகளைச் சேர்ந்த 350 திற்கும் அதிகமான படையினரை 1985 ஆம் ஆண்டில் கொன்றது.

இந்த ஆண்டவரின் பெயராலேயே வெளிப்படையாகத் தெய்வநிந்தனை செய்யும் "சாத்தானின் வசனங்கள்" என்ற நூலின் ஆசிரியரான சல்மன் உருச்டி அவர்களைக் கொல்லும் படி ஈரான் நாட்டு மதகுருவான அயதுல்லா ரொகொல்லா கொமெனி ஆணையிட்டார்.

இந்த ஆண்டவனின் பெயராலேயே எகிப்திய சனாதிபதி அன்வர் சதாத் அவர்கள் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக நிலையத்தில் அண் மையில் நடாத்தப்பட்ட குண்டுவெடிப்பு சம்பவம் போல இப்ப டியான அழிவுவேலைகள் ஆண்டவனின் பெயரால் தொடர்ந் தும் நடந்து கொண்டே இருக்கின்றன. ஆண்டவனின் பெயரால் நடாத்தப்பட்ட இந்த இழிசெயல்கள் காரணமாகவே இசுலாமிய அடிப்படைவாதம் பயங்கரவாதத்துடன் சம்பந்தப்படுத்தப்படு கின்றது.

அடிப்படைவாதம் அண்மையில் தோன்றியதாகப் பலர் கருது கின்றார்கள். 1970 ம் ஆண்டின் பிற்பகுதியில் ஈரான் நாட்டில் இடம்பெற்ற இசுலாமியப் புரட்சியுடன் ஆரம்பித்த இது விரை வில் மறைந்துவிடும் என்றும் சிலர் கருதுகின்றார்கள்.

## அடிப்படைவாதம் என்றால் என்ன ?

மரபுவழுவாததும், சமயமாறுபாடு அற்றதுமான கொள்கைகளைப் பேணிக் காப்பதே அடிப்படைவாதம் என இதற்கு ஒக்ஸ்போர்ட் அகராதியில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் மரபு முறையான இசுலாமியக் கொள்கைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதே இசுலாமிய அடிப்படைவாதம் என்பதன் பொருளாகும்.

இசுலாமிய அடிப்படைவாதத்தின் ஆக்கக்கூறுகளை நோக்குகையில், இசுலாமிய அடிப்படைவாதக் கொள்கையில் நம்பிக்கையுள்ள ஓர் இசுலாமியன், தன் நாளாந்த வாழ்விலும், அரசியல் செயற்பாடுகளிலும் இசுலாத்தின் உன்னதமான கோட்பாடுகள் பின்பற்றப்படுவதையே விரும்புகின்றான்.

முசுலிம் நாடுகளின் பண்பாடு மேற்குலக நாடுகளால் சீர்குலைக்கப்படுவதாக அவன் உணருகிறான். மேற்குலகப் பண்பாடு கொண்டுவந்த அழிவை ஏற்படுத்தும், இரவு விடுதிகளையும், விபச்சார விடுதிகளையும், மதுபானச் சாலைகளையும் வெறுக்கும் அவன், முசுலிம் நாடுகளில் இவை வேரூன்றுவதைக் சகிக்க முடியாதவனாக இருக்கின்றான். சுருங்கக் கூறின், அனைத்து இசுலாமிய நாடுகளும் அழிவிலிருந்து காப்பாற்றப்படவேண்டுமாகில், அந்த நாடுகள், தங்கள் அரசியல் நடைமுறைகளையும், பொருண்மியத்தையும், நீதிவழங்கலையும் இசுலாத்தின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டுமென்பதையே அவன் விரும்புகின்றான். "உன்னதக் கோட்பாடு" என்று அவன் கருதும் தனது கோட்பாட்டை முசுலிம் அல்லாத நாடுகளின் மீது திணிக்கும் எண்ணம் அவனுக்கில்லை.

இசுலாமியர்கள் இந்தவிதமான உள்ளம் உடையவர்களாயின் மேற்குலக நாடுகள் இந்த இசுலாமிய அடிப்படைவாதத்தைத் தங்களுக்கு அச்சுறுத்தலாகக் கருதவேண்டியது ஏன்?

மேற்குலக நாடுகளின் இரட்டை வேடத்திற்கும், தீங்கு விளைவிக்கும் அவர்களுடைய பண்பாட்டிற்கும் எதிராகச் செயற்படக்கூடிய ஆற்றலாக அடிப்படைவாதம் வளர்ச்சியடைந்ததும் இதற்குக் காரணமாக இருக்குமெனச் சிலர் கூறுகின்றார்கள்.

ஆனால் இன்று தேசிய ரீதியாகவும், அனைத்துலக ரீதியாகவும் இசுலாமிய அடிப்படைவாதம் அரசியல் பரினாமத்தைப் பெற்றுவிட்டது.

மேற்குலக நாடுகளின் இழிவான பண்பாட்டையும், வாழ்க்கை முறைகளையும் பின்பற்றி இழிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தம் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காகவே ஜிகாத் (Jihad) என்ற மதப்போரைத் தாங்கள் நடாத்துவதாக இசுலாமிய அடிப் படைவாதிகள் கூறுகின்றனர். ஊழல் நிறைந்ததும், ஆதிக்கவெறி கொண்டதுமான அரசாங்கங்களிடமிருந்து பொதுமக்களை விடு வித்து சாறியா (Shariah) எனப்படும் இசுலாமிய முறையிலான சட்டதிட்டங்களுக்கு அமைவான ஒரு அரசை அமைக்கவும் அவர்கள் விரும்புகின்றார்கள் ஊழல் நிறைந்ததும், ஆதிக்கவெறி கொண்டதுமான தங்கள் அரசாங்கங்களையே மேற்குலக நாடு களைப் பார்க்கிலும் அவர்கள் முதல் எதிரியாகக் கருதுகின்றார் கள். அடிப்படைவாதக் கொள்கையையுடைய அரசாங்கங்களும் ஆதிக்க வெறிகொண்ட அரசாங்கங்களாக மாறுமென மேற்குலக நாடுகள் அஞ்சுகின்றன.

ஈரானிலும், லெபனானிலும் இடம்பெற்ற அச்சம்தரும் நிகழ்ச்சிகள் இப்படியான கருத்துக்களை அவர்கள் கொள்ள வைத்துள்ளன.

"தீவிரவாத இசுலாமிய அடிப்படைவாதிகள் ஆட்சி அமைப் பது அமெரிக்காவிற்கும், அதன் நேச நாடுகளுக்கும் எப்பொழு தும் திங்கு விளைவிக்கக்கூடியதாக இருப்பதால், அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் நலன்களுக்கு இவர்களே உண்மை யான அச்சுறுத்தலாக விளங்குவதாக வெளிநாட்டு விடயங்களை ஆய்வு செய்யும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைப் பகுப் பாய்வு நிறுவனத்தின் இயக்குனராக 1986ஆம் ஆண்டில் இருந் தவரான திரு. டானியல் பைப்சு அவர்கள் எழுதியுள்ளார்.

ஆனால் சில தினங்களுக்கு முன் அமெரிக்கா, அல்ஜீரியா சம்பந்தமாகக் கடைப்பிடித்த இரண்டகமான போக்கையும், அதன் சொந்த நலன்களுக்காக அது செயற்பட்டதையுமே திரு. பைப்சு அவர்களின் கருத்துக்களும் பிரதிபலிக்கின்றன.

அல்ஜீரியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதற்கட்ட வாக்கெடுப்பில் இசுலாமிய மீட்பு முன்னணி (Islamic Salvation Front) வெற்றியை ஈட்டியபோது, அந்த முன்னணி ஆட்சி பீட மேறுவதைத் தடுக்கும் நோக்கில் அந்த நாட்டுக் காப்பு மந்திரி யான காலித்நசார் அமெரிக்காவின் ஆதரவுடன் சதி செய்த போது வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண் டும் எனத் தனது உறுப்பினர்களை அந்த முன்னணி கேட்டுக் கொண்டது. தாங்கள் சனநாயக வழிமுறைகளையே விரும்புவ

தாக அந்த முன்னணியினர் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

இசுலாமிய மீட்பு முன்னணியை அழித்தொழிப்பதை நோக்க மாகக் கொண்டு அதைச் சட்டவிரோதமானதெனத் தடைசெய்ததன்மூலம் அந்த நாட்டை ஆட்சிசெய்யும் குழு சனநாயகத்தையே குழிதோண்டிப் புதைத்துள்ளது.

அந்தக் குழு கடும் அடக்குமுறைகளில் ஈடுபட்டபோதிலும் அவற்றைப் பொருட்படுத்தாத ஐரோப்பிய மற்றும் அமெரிக்க வங்கிகளின் கூட்டமைப்பு, 1.45 பில்லியன் அமெரிக்க டொலர்களை அல்ஜீரியாவிற்கு உதவியாக வழங்குகின்றது.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உருவாகிய புதிய உலக ஒழுங்கும், அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் வளைகுடாப் போரில் கிட்டிய வெற்றியும், நீதியின்பால் மேற்கொள்ளப்படும் செயல்களே ஆற்றல் வாய்ந்தவை என்பதை உணர்த்தும் என்றும், அப்படியான நீதியான கொள்கையையே அவை கடைப்பிடிக்கும் என்றும் பலர் கருதியிருந்தனர். ஆனால் மனித உரிமைகளைத் தாங்கள்பேணிக்காப்பதாகப் பெரிதாகப் பேசிக்கொள்பவர்கள் அல்ஜீரியாவிலுள்ள ஆட்சிக்குழுவின் அடக்கு முறைகளுக்கு எதிராக எதையும் செய்யவில்லையென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## ஒரே ஒரு விதிவிலக்கு

"தங்களாலேயே, தங்களுக்காக ஓர் அரசாங்கத்தை உருவாக்கவேண்டுமென்று விரும்பும் உலகெங்கனும் வாழும் மக்கள்' தங்கள் சுதந்திரத்தையும், சொத்துக்களையும், தனி மனிதத் தன்மையையும் பேணிக்காக்கும் உரிமையை விரும்புகின்றார்கள். அப்படியான உரிமைகளுக்கு அமெரிக்கா தன் ஆதரவை வழங்கு" மென ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் சனாதிபதி திரு புஷ் அவர்கள் கூறியுள்ளார்,

சனநாயக வழிமுறைகளில் எந்தவொரு நாட்டிலாகுதல் நடாத்தப்பட்ட தேர்தலில் இசுலாம் அந்த வெற்றிக்குக் காரணமாக இருந்தால் அந்த வெற்றியை ஈட்டிய கட்சியை, ஒடுக்குவதுதான் திரு. புஷ் அவர்கள் கடைப்பிடிக்கும் சரியான கொள்கையா? இல்லையேல் அல்ஜீரியாவில் மாத்திரம் அவர் விதிவிலக்காக நடந்துகொண்டாரா? என்றும் வெளிநாட்டு விடயங்களைப் பற்றி அண்மையில் எழுதும் போது லொசு ஏஞ்சல்சிலுள்ள பத்திரிகை நிருபரான ரொபின் றையிற் அவர்கள் எழுதியுள்ளார்.

சனநாயகக் கோட்பாடுகளிலேயே தாங்கள் நம்பிக்கை உள்ளவர்கள் என இசுலாமிய மறுமலர்ச்சிக் கட்சியினர் தெரியப் படுத்தியிருந்தபோதிலும், இசுலாமியக் கட்சிகளைவிட முன்னர் கம்யூனிசக் கடும் போக்காளர்களாயிருந்து சனநாயக வழிக்குத் திரும்பியவர்களையே தாங்கள் விரும்புவதாக மேற்குலக நாடுக ளின் உதவியில் வெகுவாகத் தங்கியிருக்கும் மத்திய ஆசியாவி லுள்ள முசுலிம் நாடுகளுக்கு மேற்குலக நாடுகள் கூறியுள்ளன.

எகிப்தை எடுத்துக்கொள்வோம். தற்போது எகிப்து இசுலாமிய அடிப்படைவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையைத் தீவிரப் படுத்தியுள்ளது. இதன் காரணமாக அங்கு இடம்பெறும் அச்சம் தரும் நிகழ்ச்சிகள், சனாதிபதி கொசினி முபாரக் அவர்களின் போலியான சனநாயகத்தைத் தூக்கியெறிந்துவிட்டு உண்மை யான சனநாயகத்தைக் கட்டியெழுப்ப மக்கள் விரும்புவதை எடுத்துக்காட்டுகின்றனவா? என்று எண்ணவைக்கின்றது.

இசுலாமிய அடிப்படைவாதிகள் சனநாயக வழிமுறைகளைக் கடைப்பிடிக்க முடியாதிருக்கின்றது. 1980 ஆம் ஆண்டில் விதிக் கப்பட்ட தடை இன்றும் அமுலில் உள்ளது. இந்த அடக்குமுறை கள் சட்ட ஒழுங்கமைப்புக்கு அமைய நடாத்தப்படுவதாக தெரிய வில்லை. செயற் கியுருப் (Syed Qutub) கசன் அல்பன்னா (Hasan al Banna) போன்ற மேன்மைவாய்ந்த இசுலாமியக் கல் விமான்களை எகிப்திய அரசாங்கம் கொன்றது ஒன்றும் இரகசி யமானதல்ல. இதனாலேயே தாங்கள் தங்கள் வேணவாக்களை எட்டுவதற்காக வன்செயல்களில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள் ளதாக இசுலாமிய அடிப்படைவாதிகள் கூறுகின்றார்கள்.

மேற்குலக நாடுகளைவிடத் தங்கள் அரசாங்கங்களே அடக் குமுறையைக் கையாளும் அரசாங்கங்கள் எனக்கூறும் முசுலிம் அடிப்படைவாதிகள் எகிப்தையும், அல்ஜீரியாவையும் இதற்கு உதாரணமாகக் காட்டியுள்ளார்கள்.

பல ஆயிரக்கணக்கான முசுலிம் தீவிரவாதக் கோட்பாட்டா ளர்கள் 1980 ம் ஆண்டி முற்பகுதியில் கற்சால் அசாட்டில் (Hatzal Asad) கொல்லப்பட்டமை, முசுலிம் தீவிரவாதக்கோட் பாட்டாளர்கள் ரியுனியாவில் தடுத்துவைக்கப்பட்டமை, அல் தாம் கட்சி (Aldam Party) யின் உறுப்பினர்களைத்தேடி ஈராக் கில் மனித வேட்டையாடியமை முதலிய நடவடிக்கைகளிலும் இந்த அடக்குமுறை மனப்பாங்கு காணப்படுகின்றது. ஆனால் இசுரேலியர்களால் கைப்பற்றப்பட்ட மேற்குக்கரையிலும், காசா மலைத்தொடரிலும் வாழும் இசுலாமிய அடிப்படைவாதிகளின் இயக்கமான கமாசைப் பற்றிய விடயம் வேறுபட்டதாகும்.

பாலஸ்தீனிய விடுதலை முன்னணிக்கு எதிராகச் செயற்படக்கூடிய ஒரு ஆற்றலாக இசுரேலியர்களால் முன்பு வளர்க்கப்பட்டு வந்ததும், 400 பேருக்குச் சற்றுக்கூடிய எண்ணிக்கையான உறுப்பினரைக் கொண்டதுமான 'கமாசு' இயக்கத்தினர் தங்கள் தாய் நாட்டிலிருந்து விரட்டப்பட்டு இசுரேலுக்கும், லெபனானுக்கும் இடையே அலைந்து திரிந்து அல்லல்படுகிறார்கள். தங்கள் சகோதரர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்வரை 'கமாசு' இயக்கத்தினர் வன்செயல்களில் ஈடுபடவில்லை.

வெளிநாட்டு விடயங்கள் பற்றித்தான் எழுதிய கட்டுரையில் ரொபின் றைற் அவர்கள் வலியுறுத்திக் கூறியதுபோல் அடிப்படைத் தேசியவாத இயக்கங்களையும், இசுலாம் மதத்தையும் மேற்குலக நாடுகள் பூதங்கள் போல் கருதக்கூடாது. ஈரான் நாட்டிற்கு முற்றிலும் எதிர்மாறாகச் சாறியாவைப் பின்பற்றும் நாடுகளான சவூதி அரேபியா, மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் மேற்குலக நாடுகளைச் சார்ந்த நாடுகளாக இருந்து வந்துள்ளன.

ஆகவே அடிப்படைவாதம் உள்நாட்டு விடயமாகவே உள்ளது.

அடிப்படைவாதத்தை அகில உலகமும் எப்படி நோக்குகின்றது என்பதைப் பார்ப்போம். கெடுபிடிப் போர் முடிவுக்கு வந்த பின்னர் இசுலாமிய அடிப்படைவாதமே மேற்குலக நாடுகளை அச்சுறுத்துவதாகக் கூறப்படுகின்றது.

இசுலாமிய அச்சுறுத்தலால் 'அமெரிக்காவும், மேற்குலகநாடுகளும் பீதியுறுவதை ஆதாரமற்றது எனக்கூறமுடியாது. ஈரானிலும் லெபனானிலும் இடம்பெற்ற பணயக் கைதிகளின் விவகாரம், 350 திற்கு மேற்பட்ட அமெரிக்க மற்றும் பிரான்சு நாட்டுப் படைகள் லெபனானில் கொல்லப்பட்டமை, நியூயோர்க் நகரிலுள்ள உலக வர்த்தக நிலையத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட குண்டுவெடிப்பு ஆகிய கசப்பான நிகழ்ச்சிகளாகும். மேற்குலக நாடுகளில் இசுலாத்தின் பெரும் வளர்ச்சியாலும் அடிப்படைவாதிகள் இசுலாத்தை மேற்குலக நாடுகளுக்கு எதிராக ஆக்கியுள்ளனர்.

## இரண்டாவது கெடுபிடிப்போர்.

இசுலாமைப்பற்றிய தனது அச்சுறுத்தலைக் கூறவந்த பிரான்சின் வலதுசாரிக்கட்சியின் தலைவரான யீன் - மேரி லீ பென் அவர்கள் ''செவ்விந்தியர்கள் போல் பிரான்சு மக்கள் மாறுவதை நான் விரும்பவில்லை'' எனக் கூறியுள்ளார்,

குடியரசுக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் தகுதிக்குச் சனாதிபதி புஷ் அவர்களுடன் போட்டியிட்ட திரு பற்றித் புச்சனன் அவர்கள் இசுலாத்தின் அச்சுறுத்தலைக்கூறவந்தபோது ''தொட்டிலிலுள்ள ஒரு முசுலிம் குழந்தை அழும்போது மேற்குலக நாடுகளின் அழிவைப்பற்றியே பேசுகின்றது'' என்று கூறியுள்ளார்.

ஆனால் மத்தியகிழக்கைப் பற்றிய ஆய்வை மேற்கொள்ளும் பேராசிரியரும், ''இசுலாமின் அச்சுறுத்தல்-கற்பனையானதா அல்லது உண்மையானதா'' என்ற நூலின் ஆசிரியருமான கலாநிதி யோன் எசுபொசிற்றோ அவர்கள் இந்தப் பயப்பிராந்தியத்தைப் போக்கிவருவதுடன், இசுலாத்தை அமெரிக்காவுக்கு எதிரானதாக ஆக்குவதென்பது இரண்டாவது கெடுபிடிப்போர் ஒன்றை பிரகடனப் படுத்துவது போலாகுவதுடன், முதலாவது கெடுபிடிப்போரில் வெற்றி கண்டதுபோல இதில் சுலபமாக வெற்றி கண்டுவிடமுடியாது என்றும் எச்சரித்துள்ளார்.

புதிய உலக ஒழுங்குக்கு எதிராகவும், உலகத்தின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகவும் இசுலாத்தின் எழுச்சி விளங்குகின்றதென்ற பயப்பிராந்தியத்தை உருவாக்கி கெடுபிடிப்போரின் முடிவால் பெற்ற நன்மைகளை 1990 ஆம் ஆண்டுகளில் சீர்குலையாதிருப்பது மிகவும் முக்கியமானதென இவர் கூறுகின்றார்.

இசுலாம் மதத்திற்கும், அடிப்படைவாதிகளுக்கும் ஆதரவான மற்றும் எதிரான வாதங்கள் எப்படியானவைகளாக இருப்பினும், கெடுபிடிப்போரின் போது தனக்கிருந்த செல்வாக்கைத் தொடர்ந்தும் செலுத்துவதற்கு இசுலாமிய அடிப்படைவாதத்தை ஒரு பெரும் பூதமாக உலகத்திற்குக் காட்டுவதற்கு யூதர்களே முன்னணியில் நிற்கின்றனர் என்பது தெளிவாகவிருக்கின்றது.

1948 அம் ஆண்டு இசுரேல் என்ற நாட்டை உருவாக்கியதைத் தொடர்ந்து மில்லியன் கணக்கான அப்பாவிப் பாலஸ்தீனியர்கள் அவர்களுடைய நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதனாலேயே, அடிப்படைவாதம் என்ற தீ முதன்முதலாக உலகளாவிய ரீதியில் கொழுந்துவிட்டுப்பரவ ஆரம்பித்தது என முசுலிம்களின் பகை உணர்ச்சிக்கான காரணத்தை ஆய்வு செய்த அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

சுயெசு கால்வாய் நெருக்கடி, 1967 ஆம் ஆண்டில் நடைபெற்ற அராப் இசுரேலிய போர், ஐக்கிய நாடுகள் சபையால் இசுரேலுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளிலிருந்து அதைக்காப்பாற்ற அமெரிக்கா பயன்படுத்திய அதன்

இரத்து செயலுரிமை ஆகியவை அனைத்துலகிலும் வாழும் முசு லிம்களை ஆத்திரமுறச் செய்ததுமல்லாது உலக ஒழுக்கில் நீதி கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று அவர்களைக் கோரவும் செய்தது.

ஈரானில் 1970ம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட புரட்சி முசுலிம் அடிப்படைவாதிகள் பலருக்கு எழுச்சியை ஊட்டுவதாக இருந்தது. இந்தப்புரட்சி, "சியா" பிரிவைச்சேர்ந்த முசுலிம்கள் சம்பந்தமானதாக இருந்தபோதிலும், முசுலிம் அடிப்படை வாதிகள் பலரின் ஆதரவைப் பெற்றது. இதன்மூலம் லெபனா னிலும், சூடானிலும், எகிப்திலும், அல்ஜீரியாவிலும், ஈரான் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டது.

தனது இசுலாமிய அடிப்படைவாதக் கொள்கையை மற்றைய நாடுகளுக்குப் பரப்பும் நோக்கத்தை ஈரான் அண்மைக்காலத்தில் வெகுவாகக் குறைத்துள்ளது. இந்தத் தத்துவத்தை முன்னெடுத் துச் செல்லுவதற்குப் பதிலாக பொருளாதார ஒத்துழைப்புக் கொள்கையை மத்திய ஆசிய நாடுகளுக்கு எடுத்துச்செல்ல அது ஆர்வம் கொண்டுள்ளது. தனது சகிப்புத்தன்மை மற்றும் மித வாதப் போக்கு ஆகியவற்றை வெளிக்காட்டும் முகமாக அமெ ரிக்காவுக்கும், மேற்குலக நாடுகளுக்கும் எதிராக அது நடாத்தி வந்த கடும் விமர்சனங்களையும் குறைத்துள்ளது.

அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும், மேற்குலக நாடுக ளும், ஈராக் நாட்டைப்பற்றிய விடயங்களில் ஒரு விதமாகவும், இசுரேல் மற்றும் சேர்பியா நாடுகள் பற்றிய விடயங்களில் வேறு விதமாகவும் அண்மைக்காலங்களில் நடந்துகொண்டதையிட்டு முசுலிம் தலைவர்கள் தங்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்தாவிடி னும் முசுலிம் பொதுமக்கள் அதை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

சேர்பியாவின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான பொசுனியாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட ஆயுதத்தடையை ஆதரித்துவரும் அமெ ரிக்கா, சேர்பியாவுக்கு உருசியா ஆயுதங்கள் வழங்குவதை ஆத ரிக்கின்றது.

## பொசுனியா பற்றிய கருத்து.

ஜேர்மன் நாசிகள் நடந்துகொண்டது போல் சேர்பியர்கள் நடந்து கொள்வதாகச் சனாதிபதித் தேர்தலின் போது கூறி அவர்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய சனாதிபதி பில் கிளின்ரன் அவர்கள், உருசியாவில் சேர்பியர்களுக்குப் பெரும் ஆதரவு இருப்பதால் அந்த நாட்டின் தலைவரான போரிசு யெல்

சின் அவர்களுக்கு சிக்கல் எதையும் ஏற்படுத்த விரும்பாது மௌன மாக இருக்கின்றார். ஆனால் பொசுனியாவில் முசுலிம்கள் சேர் பியர்களால் படுகொலை செய்யப்படுவதற்கு மேற்குலக நாடுக ளும் உடந்தையாக இருப்பதாக பிரித்தானியாவின் முன்னாள் பிரதமரான திருமதி மாகறட் தட்ச்சர் அவர்கள் மேற்குலக நாடுகளை இந்தவாரம் சாடியுள்ளார்.

அமெரிக்காவிற்கும் முசுலிம் உலகத்திற்கும் இடையே பதட்ட நிலையை உருவாக்குவதற்கு இசுலாம் மதத்தை பூதமாக 'காட்ட முயலும் இசுரேலிய ஆதரவாளர்களும், இசுரேலியர்களுமே இசு லாமின் உண்மையான பகைவர்கள் எனச் சில அரசியல் ஆய் வாளர்கள் கூறுகின்றார்கள்.

அமெரிக்காவுக்கும் அதன் உண்மையான அல்லது கற்பனை யான பகைவர்களுக்கும் நிலவிய சச்சரவுகளால் இசுரேலே நன் மையடைந்தது என இந்த ஆய்வாளர்கள் வாதாடுகின்றார்கள். மத்திய கிழக்கில் அமெரிக்காவின் நலன்களை உருசியாவின் அச் சுறுத்தலிலிருந்து காப்பதாக இசுரேல் கெடுபிடி போரின் போது காட்டிக்கொண்டது. இதன் கரணமாக நூற்றுக்கணக்கான பில் லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்காவிடமிருந்து அது பெற்றுக் கொண்டது. ஈராக்குக்கு எதிராக அமெரிக்காவால் நடாத் தப்பட்ட வளைகுடாப் போரில் பற்றியட் ஏவுகணையின் தொழில் நுட்பத்தைப் பெற்றும், படைய நீதியாக ஈராக்கைப் பலமிழக் கச் செய்தும் இசுரேலே நன்மையைப் பெற்றது.

"சென்ற நாற்பது ஆண்டுகளில் தற்பொழுதே முதன் முத லாக மத்திய கிழக்கு சம்பந்தமான அமெரிக்காவின் வெளிநாட் டுக் கொள்கையை சோவியத் ஒன்றியத்தின் அச்சுறுத்தல் இருப் பதாகக் காரணங்காட்டி வகுக்க முடியாதவாறு உள்ளது. முன் னாள் சோவியத் ஒன்றியத்திற்குப் பதிலாக இசுலாத்தையும், முசுலிம்களையும் தாங்கள் வெறுக்கும் மற்றும் அவநம்பிக்கை கொள்ளும் கருவியாக இசுரேலியர்களும், அவர்களுடைய ஆதர வாளர்களும் தற்பொழுது தேர்ந்தெடுத்துள்ளார்கள் போல் தோன்றுகின்றது." என உத்திகா கல்லூரியில் பல்தேசிய உறவு கள் பற்றிப்போதிக்கும் பேராசிரியர் சேர் டல்லால் அவர்கள் கூறுகின்றார்.

இசுலாத்தையும் வன்செயலையும் இணைத்துக்காட்ட இசுரே லியர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும் பெரிதும் முயல கின்றார்கள் என பேராசிரியர் டல்லால் அவர்கள் கூறுகின்றார்.

அமெரிக்க காங்கிரசின் ஆய்வுக்குழுவால் தயாரிக்கப்பட்டதும், இசுரேலிய ஆதரவாளர்களான இரு காங்கிரசு உறுப்பினர்களால் கைச்சாத்திடப்பட்டதுமான அறிக்கையான, "மரபு ரீதியற்ற போர்முறை மற்றும் பயங்கரவாதத்திற்கு வேண்டிய அதிரடிப் படை" என்பதை அவர் இதற்கு மேற்கோள் காட்டுகின்றார்.

1992ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3 ஆம் நாள் திகதி இடப்பட்டதும், அதிரடிப்படை உறுப்பினர்கள் இருவரால் மாத்திரம் கைச்சாத்திடப்பட்டதுமான இந்த அறிக்கை, பொசுனியா - கெர்செகோவினா பற்றியதாகும். இதில் மற்றைய விடயங்களுடன் பின்வருவனவும் கூறப்பட்டுள்ளது.

"இசுலாமியத் தீவிரவாதத்தை ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லும் சாதனமாக பொசுனியாவிலுள்ள முசுலிம்களை மத்திய கிழக்கிலுள்ள இசுலாமியத் தலைவர்கள் பயன்படுத்துவதாகக் கருதப்படுகின்றது."

"மத்தியகிழக்கிலுள்ள பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்புடைய பொசுனியாவிலுள்ள முசுலிம் இளைஞர்கள் உலக மக்களின் ஆதரவைப் பெறும் நோக்கில் சறயேவோவிலுள்ள முசுலிம்களைப் படுகொலைசெய்தது உட்பட, வேறுபல கொடுமைகளையும் புரிய ஆரம்பித்தனர்."

அதிரடிப்படையினர் இணைத்தலைவர் டனா றோறா பாச்சர் அவர்கள், இந்த அறிக்கைக்கும் தனக்கும் ஒரு தொடர்புமில்லையெனக் கூறி அமெரிக்காவிலுள்ள முசுலிம் சபையிடம் மன்னிப்புக்கோரியிருந்தார். தனக்குத் தொடர்பு எதுவுமில்லாத விடயத்தை அதிரடிப்படையினர் வலியுறுத்திக்கூறுவதையிட்டு அவர் ஆத்திரமுற்றுள்ளார். இசுலாம் மதத்தை பூதமாகக் காட்டுது கண்டிக்கப்படவேண்டிய ஒன்று மாத்திரமின்றி, இது வெளிநாடுகளில் மனித உரிமையையும், உறுதிப்பாட்டையும் பேணிக்காக்கும் அமெரிக்காவின் விருப்பிற்கு எதிரானதும், உள்நாட்டில் பொருளாதார மேம்பாட்டை எய்துவதற்கு எதிரானதுமென பேராசிரியர் டல்லால் அவர்கள் எச்சரிக்கின்றார்.

---

ஒரு செயலில் உறுதியாய் இருப்பதே வெற்றியின் இரகசியம்.

— டிசுரேலி

# சினிமா நிஜமா

—B. லெனின்—

(நக்கீரன் 15. 5. 93)

மனதைக் கொஞ்சம் கல்லாக்கிக்கொண்டு படிக்க வேண்டிய விஷயம். தேவர் தயாரித்து எம். ஏ. திருமுகம் இயக்கிய 'துணைவன்' படத்தை அமோகமாக தமிழக தாய்மார்கள் நிறைய பேர் பார்த்திருப்பார்கள், அல்லது கேள்விபட்டும் இருப்பார்கள்.

அழகான தம்பதிகளுக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு பிறந்த குழந்தை ஒரு குறைப் பிரசவம் போல இருக்கிறது. அந்தக் குழந்தை நலம் பெறுவதற்காக கதாநாயகனும், கதாநாயகியும் கோவில் கோவிலாக ஏறிக் கொண்டு இருக்கிறார்கள், கடைசியில் ஒரு முருகன் கோவிலில் புனித நீர் விட்டு அந்தக் குழந்தைக்கு பிணி தீர்ந்து குணமாகிறது. மருதமலை முருகன் அருளால் அது நடைபெறுகிறது. இந்தப் படம் வெளி வந்து தமிழ் நாட்டில் ஏகப்பட்ட வசூலில் ஓடி சாதனை படைத்தது. இந்தப் படம் திரையிடடபின் நிறைய தாய்மார்கள் மருதமலைக்கு சென்று திரைப்படத்தில் எந்த இடத்தில் குழந்தையை கிடத்தி கதாநாயகனும், நாயகியும் பக்தி உருக பாடினார்களோ அதே இடத்தில் தாங்கள், தங்கள் குழந்தைகளைக் கிடத்தி முருகனிடம் வேண்டிக் கொண்டார்கள்.

இவ்வளவு புகழ் பெற்ற படத்தை இந்தியில் தயாரிப்பது என்று முடிவாகி, பீம்சிங் இயக்குவதாக ஏற்பாடாகியது.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு நடக்கும் போது நடந்த சம்பவங்கள் தான் மனதைக் கொஞ்சம் பிழியும்.

கதையின்படி இந்திப் படத்தின் நாயகனான ராஜேஷ் கன்னாவிற்கும், நாயகி ஷபனா ஆஸ்மிக்கும் பிறந்த குழந்தை கைகால் விளங்காமல், கறுத்து சூம்பிப் போய் கிடக்கிறது. கதாநாயகி சதா அந்தக் குழந்தையை நினைத்து அழுது கொண்டிருக்கிறாள்.

படப்பிடிப்பு நடந்து இருக்கும் போது, நாங்களும், தயாரிப்பு நிர்வாகிகளும், ஆஸ்பிடல் ஆஸ்பிடலாக இதே போன்ற கறுத்த, சூம்பிய குழந்தைகளுக்காக தேடினோம்.

எப்படியோ கடைசியில் பிள்ளைப்பேறு மருத்துவமனையில் இருந்து பிறந்த குழந்தைகளில் ஒன்றை பேசி பணம் கொடுத்து படப்பிடிப்பிற்காக கொண்டு வருவோம்.

படப்பிடிப்பு தளத்தில் அந்த இறுக்கமான சூழ்நிலையில் ஆயிரக்கணக்கான கிலோ வாட்ஸ் பல்புகளின் சூட்டில் படப்பிடிப்பு நடைபெறும். ராஜேஷ் கன்னாவும், ஷபனா ஆஸ்மியும், தங்கள் குழந்தைக்காக அழ, ஷாட் 1, ஷாட் 2, ஷாட் 3, ஷாட் 4, இதற்குள் மாலையாகி விடும். அதற்குள் அந்த குறைபிரசவக் குழந்தையின் கைகால்கள் அசைவற்று ஓய்ந்து விடும். அனேகமாக இறந்து விட்டிருக்கும், அல்லது ஏற்கனவே இறந்து இருக்கும், ஒருவேளை உயிருடன் இருந்தால், இன்னும் கொஞ்ச நேரத்தில் இறந்து விடும் தன்மைக்கு வந்துவிடும்.

தாய்மார்களுக்குத் தெரியும் குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளை 'இன்கு பேட்டர்' போன்ற நவீன சாதன அறையில் பாதுகாப்பாக வைத்து பிழைக்க வைப்பார்கள். ஆனால் அத்தகைய குழந்தைகள் 'ஸ்டூடியோ' சூட்டில் என்னவாகும்...?

ஒரு நாள் படப்பிடிப்பில் கலந்து கொண்ட குழந்தை மறு நாள் கலந்து கொள்ளாது. ஏனெனில் அதற்குள் அது இறந்திருக்கும். பொதுவாக பிறந்த குழந்தைகளை மாற்றி காட்டினால் யாரும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. அதாவது 'கன்டினியூட்டி' சமாச்சாரங்கள் ஓரளவுக்கு தேவையில்லை, அதிலும் குறைப் பிரசவ குழந்தைகளை யாராலும் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போகும். ஆகையால் சராசரியாக நாளுக்கு ஒன்று வீதம் குழந்தைகள் இறந்திருக்கலாம். படம் முடிந்தது. அந்த இந்திப் படத்தின் பெயர் 'மாலிக்' அதாவது எஜமான். எஜமான் என்கிற வார்த்தை கடவுள் என்று பொருள் படும்படி வைக்கப்பட்டது.

இந்த படப்பிடிப்பின் போதுதான் அதில் உதவி இயக்குனராக பணியாற்றும் போது ஒன்றை புரிந்துகொண்டேன். அதாவது சராசரியாக இத்தகைய குழந்தைகள் தினந்தோறும் பிறந்து கொண்டே இருக்கிறது. இன்னொன்று இதை வாடகைக்கு விடவும் தாய்மார்கள் இருக்கிறார்களே என்பதும்.

'கலை'க்கு சில தியாகங்கள் தேவை தான். ஆனால் 'மாலிக்' காக அதாவது இறைவனுக்காக இறந்த இந்த குழந்தைகளை என்னவென்பது. ஆனால் அந்த குழந்தைகள் இல்லாமல் இந்தப் படத்தை எடுத்திருக்கவே முடியாதுதான். எப்படியோ படம் எடுத்து முடிக்கப்பட்டு முதல் பிரதியும் எடுத்து விநியோகஸ்தர் களுக்கு போட்டுக் காட்டப்பட்டது.

விநியோகஸ்தர்கள் ஒவ்வொருவராக குறைப்பட்டுக் கொள் ளத் துவங்கினார்கள். ராஜேஷ்கன்னாவும், ஷபனா ஆஸ்மியும், என்ன 'பர்சனாலிடி' இவர்களுக்கு இப்படி ஒரு குழந்தை பிறக் குமா? மக்கள் இதை ஏற்றுக் கொள்வார்களா? ராஜேஷ்கன்னா வும்' ஷபனா ஆஸ்மியும், என்ன 'கலர்' இவர்களுக்கு கறுப்பாக குழந்தை சூம்பிப் போய் பிறக்குமா? மக்கள் ஏற்றுக் கொள்வார் களா?

இப்படி 'மக்கள்' ஏற்றுக் கொள்வார்களா? மக்கள் ஏற்றுக் கொள்வார்களா..? என்று சொல்லியே எந்த விநியோகஸ்தர் களும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. படம் வெளிவருவது சிக்க லானது.

ஒரு வழியாய் முடிவெடுக்கப்பட்டு அந்த 'கறுத்த சூம்பிய குழந்தை' ஷாட்டுகள் எல்லாம் வெட்டி எறியப்பட்டன. ராஜேஷ் கன்னா, ஷபனா ஆஸ்மி தம்பதியரின் பர்சனாலிட்டிக்கு ஏற்றார் போல் கொஞ்சம்' கொழு கொழு குழந்தை'கள் தேடப்பட்டன. பயன்படுத்தப்பட்டு மறுபடி ஷூட்டிங் நடைபெற்றது. படம் முடிந்து திரையிடப்பட்டது. படம் போன வேகத்திலேயே திரும்பி வந்தது.

தமிழில் 'துணைவன்' பெற்ற வெற்றிக்கு மேலே எதிர் பார்த்து காத்திருந்தவர்கள் கலங்கிப் போனார்கள். துணைவன் படத்தில் கதாநாயகன் ஏ.வி.எம். ராஜன் சத்தான நல்ல 'பர்சனாலிட்டி'. அவருக்கு இப்படி ஒரு குழந்தை பிறந்தது என்பதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா?

சில உணர்வுகளும், அன்புகளும் எங்கும், என்றைக்கும் பொதுவானவை. மக்கள் அதை என்றைக்கும் ஏற்றுக் கொள் ளத் தயங்கியதே இல்லை. இதில் ஏராளமானவர்கள் இடறி இருக்கிறார்கள்.

தமிழில் 'பாசப்பிரிவினை' சூப்பர் ஹிட்டாகி ஓடியபின் இந்தப் படத்தின் தயாரிப்பாளரான திரு. ஜி.என். வேலுமணி

அவர்கள் இதையே இந்தியில் தயாரிக்க தயங்கினர். வேலுமணி அவர்கள் மிகப் பெரிய புரொடியூசர். அதற்குப் பிறகு 'குடியிருந்த கோயில்' போன்ற மிகப் பெரிய படங்களை எடுத்தவர். இருந்தும் தனது 'சரவணா பிலிம்சின்' முதல் தயாரிப்பான பாகப்பிரிவினை இமாலய வெற்றிக்குப் பின்னும் இந்தியில் அதை தயாரிக்க பின்வாங்கினார். ஏகப்பட்ட பொருட்செலவில் வேறொரு படத்தைத் தயாரிக்கத் துவங்கினார். அப்போது 'வாசுமேனன்' என்கிற வாசு ஸ்டூடியோ உரிமையாளர் பாகப்பிரிவினை கதையை வேலுமணியிடம் இருந்து இந்திக்கு வாங்கி பீம்சிங்கை இயக்கச் சொன்னார். 'பாகப்பிரிவினையில்' சிவாஜி கணேசனைப் பார்த்த இந்தி நடிகர்கள் ராஜ்கபூர், திலீப்குமார், தேவ் ஆனந்த் போன்றவர்கள் கூட மறுத்து விட்டனர். நொண்டிக்கையுடன் ஒரு கதாநாயகன் தோன்றுவது என்பது எப்படி, எங்கள் இமேஜ் என்னாவது? என்று வரிசையாக மறந்துவிட கடைசியில் ஏற்கனவே 'மே சுப் ரகூங்கி' என்கிற தமிழ் 'களத்தூர் கண்ணம்மா' இந்திப் படத்தில் நடித்திருந்த சுனில் தத்தை ஒப்பந்தம் செய்யப்பட்டது. சுனில்தத் வேறு யாருமல்ல, இன்று பம்பாயில் தடாவில் கைது செய்யப்பட்டிருக்கும் சஞ்சய்தத்தின் தகப்பனார். சிறந்த குணச்சித்திர நடிகரான அவர் பாகப்பிரிவினை இந்தி 'காந்தன்'னில் நொண்டிக்கையனாக தோன்றி மாபெரும் வெற்றி பெற்றார். அதற்குப் பிறகு பெரும்பாலும் வந்த சிவாஜி கணேசனின் படங்கள் இந்தியில் தயாரிக்கப்படும் போதெல்லாம் இவரே இந்த கதாபாத்திரத்திற்கு பொருத்தமானவராக கருதப்பட்டார்.

சிவாஜி கணேசன் அவர்களின் கதாபாத்திரங்களை சுனில்தத் செய்து வெற்றி பெற்றபின் மிகப் பெரிய நடிகரான திலீப்குமார் தமிழில் சிவாஜி கணேசன் நடித்த 'ஆலயமணி' படத்தை இந்தியில் செய்ய விரும்பினார். 'ஆத்மி' என்ற பெயரில் வெளிவந்த இந்த படமும் மிகப் பெரிய வெற்றியை பெற்றது (ஆத்மி என்று ஏற்கனவே இந்தியில் சாந்தாராம் இயக்கிய படம் ஒன்று உள்ளது. இருந்தும் சாந்தாராமின் ரசிகரான என் தந்தை அவர் இயக்கிய ஆலயமணி இந்திக்கும் ஆத்மி என்று பெயரிட்டார்)

இப்படி எண்ணற்ற மக்களின் உணர்வுகளை திடீரென்று முளைத்த நடிகர்களால் அவ்வளவு துல்லியமாக கணித்து விட முடியாது. டிஸ்ட்ரிபியூடர்களாலும் இது, வியாபாரிகளாலும் இப்படித்தான் என்று தீர்மானித்து விட முடியாது.

அதை விட ஒரு கதாசிரியனுக்கோ இயக்குனருக்கோ வேண்டுமானால் இதில ஓரளவுக்கு தகுதி உண்டு என்பது என் தாழ்மையான கருத்து!

27726

# சினிமா நிஜமா

—B. லெனின்—

(நக்கீரன் 22 5 93)

உலக வரலாறு என்பதே வர்க்கப் போராட்டங்களின் தொகுப்பு.

—கார்ல் மார்க்ஸ்

சினிமா கதாநாயர்கள் எதையும் செய்வார்கள். பத்து பேர் வந்தாலும் ஒரே சமயத்தில் அடித்து வீழ்த்துவார்கள். உயரமான மலையின் மீது இருந்தும் குதிப்பார்கள். இரும்புச் சங்கிலியால் கட்டிப் போட்டாலும், அறுத்துக் கொண்டு தப்பித்துக் கொள் வார்கள்.

இன்னும் இன்னும் நம் கதாநாயகர்களை என்ன செய்ய வைக்கலாம்? என்று நம் மசாலா கதாசிரியர்கள் கூடி கூடி சிந்தித் துக் கொண்டு இருக்கிறார்கள்.

இப்படி ஒரு சுவையான விவாதத்தின் போது விஷயம் சற்று வித்தியாசமாக திசை திரும்பியது.

நம் கதாசிரியர்களின் கதைகட்டும் திறனையும் மீறிய கதா பாத்திரங்கள், நம் வரலாறு முழுக்க இறைந்து கிடக்கின் றன. அவர்களைப் பற்றி குறிப்பெடுப்பது, தொகுத்துப் பார்க்கும் போது இவர்களெல்லாம் மிகப் பெரிய 'அக்ஷன் ஹீரோக்கள்'.

'பகத்சிங்' இந்தியா வரலாற்றின் மாபெரும் புரட்சியாளர். இளைஞர்களின் ரத்தத் துடிப்பாய் இன்றைக்கும் விளங்கும் பகத் சிங்கைப் பற்றி சினிமா வட்டாரத்தில், கதை விவாதத்தின்போது பேச்சு அடிபடத் துவங்கியது.

இந்திய நாட்டில் வழக்கமாக தூக்கு தண்டனை கைதிகளை பொழுது புலரும் முன்பு மட்டுமே தூக்குத் தண்டனை நிறைவேற் றிக் கொண்டு இருந்த இந்திய பிரிட்டிஷ் அரசு, முதல் முதலாக

பகத்சிங்கையும், அவர் தோழர்களையும் அவசர அவசரமாக மாலைப் பொழுதில் தூக்கிலீட்டது. அதுவும் எப்படி? தேசப்பிதா மகாத்மாகாந்தி அவர்களாலேயே 'பகத்சிங்கை தூக்கிலிடுவதாக இருந்தால், கராச்சியில் நடைபெறும் காங்கிரஸ் கூட்டத்திற்கு முன்னதாக தூக்கிலிடுவது நல்லது' என்று வைஸ்ராயிடம் தானாகவே கேட்டுக் கொண்ட சம்பவத்திற்கு வந்தவுடன் பகத்சிங் மேல் இன்னும் அனுதாபம் ஏற்பட்டு விஷயம் பெரிதாக ஆனது.

பகத்சிங்கிற்கு தூக்குத் தண்டனை தீர்ப்பாகி விட்டது. நேரம் நெருங்கி விட்டது. தண்டனையை நிறைவேற்ற அதிகாரிகள் பகத்சிங்கின் சிறை அறைக்கு செல்கிறார்கள். அறையின் மின்சார பல்பின் வெளிச்சத்தில், அந்த வீர இளைஞன் 'பகத்சிங்' மாமேதை லெனின் எழுதிய 'அரசும் புரட்சியும்' என்ற புத்தகத்தின் கடைசி அத்தியாயங்களை ஆழ்ந்து படித்துக் கொண்டிருக்கிறான். சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, கடைசி நேரத்திலேயும் தன் கழுத்துக்கு நேரே தூக்குக் கயிறு தொங்கிக் கொண்டு இருக்கும் தறுவாயிலும், படிப்பில் ஆர்வம் காட்டிய துணிச்சலைக் கண்டு அரசு அதிகாரி நடுங்கியபடி பகத்சிங்கை தூக்கு மரத்திற்கு அழைக்கிறான். அதற்கு நிதானமாக 'கொஞ்சம் பொறுங்கள். கடைசி இரண்டு பக்கங்களையும் படித்து விட்டு வருகிறேன்' என்று சொல்லவும், அதைக் கேட்ட அதிகாரி என்ன பிரமிப்பை அடைந்திருப்பாரோ, அதே பிரமிப்பை சினிமா கதை குழுவும் அடைந்தது.

தங்கள் கற்பனைக்கும் எட்டாத இப்படிப்பட்ட மாபெரும் கதாபாத்திரம் இந்த மண்ணிலேயே பிறந்து, வாழ்ந்து, போராடி மறைந்ததைக் கேட்டால் யாருக்குத்தான் பிரமிப்பு வராது...!

இப்படி ஒருவரா இருவரா — இந்திய வரலாற்றை, உலக வரலாற்றை, தங்கள் ரத்தத்தை தண்ணீராக ஊற்றி வளர்த்த 'கதாநாயர்கள்?'

நீங்கள் ஏராளமான சினிமாக்களில் உணர்ச்சிகரமான காட்சி அமைப்புகளில் சகோதர பாசம், தாய்பாசம், அண்ணன் தங்கை பாசம் பார்த்திருப்பீர்கள். ஆனால் இந்திய வரலாற்றின் பக்கங்கள் சிலவற்றை நான் உங்களுக்கு படித்துக் காட்டுகிறேன். ஒரு வேளை அதை ஏற்கனவே நீங்கள் படித்திருப்பினும், இது இங்கே தேவை.

சிறைச்சாலை...! அதுவும் ஏகாதிபத்தியத்தின் திமிரான, அடக்குமுறை சிறைச்சாலை. இளைஞர்கள் பகத்சிங், ஜதீந்திரா தாஸ், பி. கே. தத் ஆகியோரும் சிறைச்சாலையில் தாங்கள் நடத்தப்படும் முறைகளை எதிர்த்து உண்ணாவிரதமிருக்கத் துவங்கினர்,

மகாத்மா காந்தியாரின் உண்ணாவிரதப் போராட்டத்தைப் போல' ஆனால் வரலாரற்றின் சரியாக பதிக்காமல் போன அந்த உண்ணாவிரதப் போர் துவங்கி உருண்டோடத் துவங்கின. 10, 20, 30, 40, 50, கொஞ்சம் கொஞ்சமாக அந்த இளைஞர்களின் சதையும், எழும்புகளும், ரத்தமும் சுருங்கத் துவங்கின. சுண்டத் துவங்கின.

உண்ணாவிரதத்தின் கடுமை தாள முடியாமல், அந்த இளை ஞர்கள் தாங்களாகவே உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ளப் போகிறார்கள் என்று அரசு எதிர்பார்த்துக் கொண்டு காத்தி ருந்தது.

இளைஞர்களின் உடல்நிலை மோசமாவதைத் தொடர்ந்து, மக்களிடையே கொந்தளிப்பு அங்கொன்றும், இங்கொன்றுமாய் முளைக்கத்துவங்கியது. இளைஞர்களின் நிலை படு மோசமாய் ஆகிக் கொண்டிருந்தது. நாட்கள் ஐம்பதையும்தாண்டியது. ஜதீந் திர தாஸின் நிலை ஆபத்தை நெருங்கிக் கொண்டுருந்தது.

தினசரி பத்திரிக்கைகள், உண்ணாவிரதத்தை 'இத்தனையா வது நாள்' என்று தினமும் அறிவிக்கத் துவங்கியது ஒவ்வொரு நாளும் மக்கள் துடிப்பு அதிகரிக்க, அதிகரிக்க, ஜதீந்திர தாஸின் இதயத்துடிப்பின் வேகமும் இறங்கத் துவங்கியது.

அரசுக்கு சிறிது கலக்கம் அப்பொழுதுதான் ஏற்பட்டது. என்ன செய்வது... எத்தனைமுறை கேட்டுக்கொண்டும் தாஸை விரதத்தைவிட வைக்க முடியவில்லை. செய்வதறியாது தடுமாறிய அதிகாரிகள், கடைசியில் ஒரு உபாயத்தை கையாண்டனர். நேரே ஜதீந்திர தாஸின் தோழர் பகத்சிங்கிடம் சென்றார்கள். பல வாறாக எடுத்துச்சொல்லி, விரதத்தை கைவிடச் செய்யுமாறு கேட்டுக் கொள்ள வேண்டினர். பலவிதமான ஆலோசனைக்குப் பின் சம்மதித்தார் பகத். படுத்த படுக்கையாக இருக்கும் தன் தோழனை நெருங்கினார். தனக்காக உண்ணாவிரதத்தை நிறுத் திக் கொள்ளுமாறு வாஞ்சையுடன் கேட்டுக் கொள்ள, அன்றே தன் விரதத்தை முடிந்துக் கொண்ட தாஸ் "பகத்... என்னாளும் சிறந்த தோழனான நீ கேட்டுக் கொண்ட பின்பும் ஒரு அரசியல் போராட்டத்தை கைவிடுவதற்கு நான் சம்மதிக்கவில்லை யெனில் வரலாற்றில் பகத்சிங்கின் வார்த்தைகளை மீறியவனாக ஆவேன். அதனால் விரதத்தை முடித்துக் கொள்கிறேன்" என்று கூறி, கூறிய படி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

அரசு மூச்சு விட்டுக் கொண்டது. அன்றைய பொழுது கழிந் தது, மறுநாள் பொழுது புலர்ந்ததும் ஜதீந்திர தாஸுக்கு உணவு

கொண்டு போகப்பட்டது. ஆனால் அங்கே அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

ஜதீந்திர தாஸ் தன் உண்ணாவிரதத்தை மறுபடியும் துவங்கி இருந்தார் - மறுபடியும் மக்களிடையே கொந்தளிப்பு துவங்கியது. பகத்சிங் மறுபடியும் ஜதீந்திரதாஸின் அறைக்கு சென்றார். அங்கே படுத்த படுக்கையுடன் தாஸ். பகத் அருகே சென்றதும் தாஸ் சொன்னார், "தோழரே வரலாற்றில் பகத்சிங் என்கிற உயர்ந்த தோழன் கேட்டு உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட இந்த தாஸ் மறுபடியும் பகத் கேட்டு அவர் கோரிக்கையை மறுத்தான் என்றோ, ஏகாதிபத்திய அரசுக்கு எதிரான தன் தோழனின் போராட்டத்தைக் கைவிடும்படி பகத் கேட்டார் என்றோ, இனி வரும் வரலாறு எழுதப்பட வேண்டாம். தயவு செய்து என் போராட்டத்தை நிறுத்தும் படி கேட்டுக் கொள்ளாதீர்கள்" என்று வந்தவுடன் முன்கூட்டியே சொன்னார் தாஸ். மௌனமாய் தன் நண்பனின் மரியாதைக்குரிய போராட்டத்தை நினைத்து மனதுக்குள் பெருமைபட்டுக் கொண்ட பகத், அங்கிருந்து அமைதியாய் வெளியேறினான்.

அறுபதாவது நாள், அறுபத்து ஒன்றாவது நாள் ஜதீந்திர தாஸ் அறையில் மௌனம் சூழ்ந்து கொண்டு இருந்தது. லேசாக கைகால்கள் மரத்துப் போகத் துவங்கியது. டாக்டர்கள் சூழ்ந்து கொண்டார்கள். மருத்துவத்தை மறுத்தார் தாஸ்.

அறுபத்து மூன்றாவது நாள் ஜதீந்திரதாஸின் உடல் சலனமற்று கிடந்தது. தொண்டைகுழி மட்டும் துடித்துக் கொண்டு இருந்தது. நினைவு மங்கிய உடலில் மருந்து செலுத்தி உயிரைக் காப்பாற்ற நினைத்து, அதன் முயற்சியில் அவரின் கையில் ஊசி குத்துவதற்காக மருத்துவர் முதலில் 'பஞ்சை ஸ்பிரிட்டில்' நனைத்து மெதுவாக தடவினார். நினைவு மறந்து போய் இருந்த உடல் என்று நினைத்திருந்த தாஸின் வாயில் இருந்து "நோ.." என்ற குரல் மட்டும் வந்தது. திடுக்கிட்டு போன மருத்துவர் மெதுவாக விலகினார். அடுத்த அரை மணி நேரத்தில் ஜதீந்திர தாஸின் உயிர் பிரிந்து விட்டது...!

கதையும், கற்பனைகளுமாய் நம் சினிமா வெறும் கனவை சொல்லிக் கொண்டுருக்கையில், ரத்தமும், சதையுமாய் இருந்த நிஜங்கள் இனிமேலும் கொஞ்சம் கொஞ்சமாக திரைக்கு வர வேண்டும்.

'காந்தியை' படமாக்குவதற்கும் ஒரு பிரிட்டிஷ்காரர்தானா வரவேண்டும், ஆனால் பகத்சிங்கின் கதையைக் கேட்ட கதாசிரி

யர் ஒருவர் வேக வேகமாக பகத்சிங்கின் பாதிப்புகளை வைத்துக் கொண்டு ஒரு மசாலாக் கதையை எழுதத் தொடங்கி விட்டார். ஆடல், பாடல் காட்சிகளுடன், அடிதடி சண்டைகளுடன் பகத் தமிழ் சினிமாவில் மசாலா மனிதனாக மாறிவிடுவார்.

பகத்சிங்கின் உண்ணாவிரதத்தை நான் இன்றைக்கும் எழுத வேண்டிய காரணம் ஒன்று இருக்கிறது.

தமிழ் சினிமா பட உலகம் கடந்த 4 மாதங்களுக்கு மேலாக வேலையற்று பட்டினி கிடப்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருப்பேன். ஆனால் பிரச்சனைகள் இன்னும் முடியாது இருக்கும் நேரத்தில் நானும் என் சக நண்பர்களும் சினிமா கலைஞர்களும் இதுகுறித்து நிலமை அறியவும், அதற்கான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடலாம் என்ற எண்ணத்துடனும் பிலிம் சேம்பர் மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்களைத் தொடர்பு கொண்டு நிலைமை குறித்து விளக்கம் கேட்டுப் பெற்றோம்.

திரு. கேயார் அவர்கள் அப்படி ஒரு உண்ணாவிரதம் இப்போதைக்கு வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதின் பேரில், நாங்கள் அதில் ஈடுபடவில்லை, எனினும் இங்கே நான் ஒன்றைச் சொல்ல வேண்டும்.

என்றைக்கு நாங்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்று முடிவெடுத்தோமோ, அன்றையிலிருந்து இதுநாள் வரை நான் மட்டும் தனியாக எந்தவித அறிவிப்பும் இல்லாத வகையில், வெறும் சர்பத்துக்களை மட்டும் குடித்துக் கொண்டு, ஒரு வகையில் உண்ணாவிரதம் இருந்து வருகிறேன். இதை இப்போது கூட அறிவிக்க எனக்கு எண்ணம் இல்லை. ஏனெனில், இது வெறும் நல்லெண்ணத்திற்காக இருந்தும் விஷயம் அறிந்த நண்பர்கள் சிலரால் இது சினிமா வட்டாரங்களில் தெரியவந்து விட்டதால், நான் இதை நம் வாசகர்களுக்கும் சொல்ல வேண்டியதாயிற்று.

சரித்திரத்தையும், நல்லதையும் எப்போதும் விழைந்து கொண்டு இருக்கும், அதற்காக அவர் அவர் வழிகளில் போராடும் நோக்கமுடையவர்கள். எனக்கு முன்னும் இருந்தார்கள், என்னோடும் இருக்கிறார்கள், எனக்குப் பின்னும் வருவார்கள்.

# தமிழர் இலக்கியங்கள்!

— பிரபஞ்சன் —

(நக்கீரன் 22-5-93)

தமிழ் இலக்கியங்கள் பெரும்பான்மையும், தமிழர்க்கு விரோதமானவை. சமூக, பொருளாதார, கலாச்சார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களையே, நான் தமிழர் என்கிறேன். தொல்காப்பியன் தொடங்கி சங்க இலக்கியப் புலவர்கள் என்று தொடர்ந்து, இன்று வரையிலான பத்திரிகை இலக்கியங்கள் வரை, இவை மேல் சாதி, பார்ப்பனீய, வருணாசிரம தர்மத்துக்கே சேவை செய்தன, செய்கின்றன என்பதே என் கருத்தாகும்.

கருத்து ரீதியாக இவை செய்த தவறே இதுதான். சமூகத்தின் அடிப்படை மக்களின் மேல் உயர் சாதி மற்றும் பார்ப்பனர்கள் கொண்டிருந்த ஆதிக்கத்தை, நம் தமிழ் இலக்கியங்கள் நியாயப்படுத்திக் காட்டின. அகநானூறு, கலித்தொகை போன்ற காதல் (அகப்) பாடல்கள் காதலைச் சொல்லின. ஆனால் யாரின் காதலை. உயர் மக்களின் காதலைத்தான். தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மக்கள், அந்த உயர் மக்களின் காதலுக்குத் தூது போனவர்களே ஆவார்கள். சிலப்பதிகாரம், அரசனுக்கு நிகராக அல்லது போட்டியாக வளர்ந்து வந்த செட்டியார்களைத் தூக்கிப் பிடிக்கிறது. மணிமேகலை, ஒடுக்கப்பட்ட பெண்ணை சமஸ்கிருதப் படுத்தியது. அதாவது பாப்பாத்தியாக்கிய பிறகாப்பியங்களோ, சிறு இலக்கியங்களோ, ராஜாக்களை அல்லது ஜமீன்தார்களைத் துதிபாடி, அவர்களின் பால்வினை நோய்களையும் விழுந்து பாராட்டின. முன்னூறு வருஷத்துக்கு முந்தைய பள்ளு இலக்கியமான, பள்ளர்களைப் பற்றிய இலக்கியமான அவையும், மேல் சாதிப் பார்வையில், பள்ளர்களைக் கேலி செய்த இலக்கியங்களே ஆகும்.

இந்த இரண்டாயிரம் வருஷத்து ஒடுக்குபவர்களின் இலக்கியக் குரலுக்கு ஊடேயும் சில பலகீனமான முற்போக்குக் குரல்கள் கேட்கத்தான் செய்தன. திருவள்ளுவரின், 'பிறப் பொக்கும்

எல்லா உயிர்க்கும்' என்கிற குரலும், தொடர்ந்து பின் நாட்களில் 'ஆண் சாதி பெண் சாதி ஆக இரு சாதி — வீண் சாதி' மற்ற எல்லாம் என்கிற சித்தர்கள் குரலும், நாகர் கோவிலில் வாழ்ந்த வைகுண்டசாமி வள்ளலார் போன்ற வெகு சிலரே, பிராமா னீயத்தை எதிர்த்து இலக்கியம் செய்தவர்கள். மேல் தட்டு இலக்கியக்காரர்களின் பேய் இரைச்சலில் இந்தப் புல்லாங்குழல் சங்கீதம் அமுங்கித்தான் போயின.

தமிழில் கலை இலக்கியங்கள் இருக்கின்றன. அவை பார்ப் பன ஒடுக்குமுறையை எதிர்த்த அதே நேரத்தில் மேல் சாதி ஒடுக்குமுறையை மறைமுகமாக ஆதரித்தன. ஆகவே, முற்ற முழுக்கவும், ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக, ஒடுக்கப்பட்ட வர்க்கு ஆதரவாக, சகல ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து சாய் கிற இலக்கியங்கள் அண்மைக் காலத்தில் வெளிவரத் தொடங் கியிருக்கின்றன. இதைத்தான் தமிழின் நவீன இலக்கியமாக நான் காண்கிறேன். தமிழர் இலக்கியம் என்றும் இதைச் சொல் லலாம்.

தமிழர் இலக்கியத்தின் குணாம்சம் என்னவாக இருக்க முடியும்.

1. அது ஒடுக்கப்பட்டோரை எழுதுவது அவர்களை வெளிச் சத்துக்கு கொண்டு வருவது.

2. சகல ஒடுக்குமுறைகளுக்கும் அது எதிரானது. சமூக, பொருளாய, கலாச்சார ஒடுக்குமுறைகள் அனைத்தையும் எதிர்ப்பது.

3. பழைய இலக்கியங்களின் கருத்தியலை, அழகியலை, இலக் கணங்களை முற்றாகப் புறக்கணிப்பது. தமிழர்களது புதிதான அழகியல், இலக்கணம், கருத்துக்களை கொண்டது.

4. இது சுகம் தராது. எரிச்சலைக் கிளப்பும். உண்மைகளை முகத்தில் அறைந்து சொல்லும்.

தமிழ்நாட்டுக்குள் இந்த வகை இலக்கியங்களை முதலில் படைத்தவர் சிவகாமி என்கிற எழுத்தாளர். இவருடைய 'பழை யன கழிதலும்' - நாவலும் (அன்னம், சிவகங்கை வெளியீடு'), 'ஆனந்தாயி' என்கிற நாவலும் (தமிழ்ப் புத்த காலயம், சென்னை-5) பழைய இலக்கிய மரபுகளை உடைத்துப் புதிய மரபுகளை உருவாக்கும் தன்மையுடையவை.

உடையார் ஆட்களால் பலமாகத் தாக்கப்பட்ட அந்த தாழ்த்தப்பட்ட பெண், தன் வகுப்பாரில் தலைமையானவரிடம் இப்படிச் சொல்கிறாள்.

''சாமி... நாட்ல, ஊர்ல நடக்காததா சாமி... நான் தட்டுக் கேட்டு அலையிற முண்டையில்ல. ரெண்டொருக்கா சொல்லிப் பார்த்தேன். ஒடையாரு கேட்கல. நான் இஷ்டப்படாமலே... காடு கண்ணிக்கு வேலைக்குப் போம்போது, கரும்புக் கொல்லையிலே வச்சிப் பண்ணிப் புட்டாரு..."

காத்தமுத்து இடைமறித்துச் சொன்னார்:

''சரி. போனதுதான் போனீயே. நம்மாளுவ எவனாவது பார்த்து போவ வேண்டியதுதானே? நம்மாளுன்னா உனக்குக் கசக்குதா?'' உதாரணத்துக்கு இப்பகுதியைக் கொடுத்தேன். காலம் காலமாக மேல் சாதியார் எனப்பட்டவர்கள், 'தாழ்த்தப் பட்டவர்க்கு இழைத்த, இழைக்கிற வங்கொடுமையை, பொருள் மற்றும் பாலியல் பலாத்காரத்தை, இவ்வளவு காரமாக, நேராக, அற்புதமான சொல் செட்டோடு, தைரியமாக, முகத்தில் அறைந்த மாதிரிச் சொன்ன நாவலை நான் படித்ததில்லை. 'ஆனந்தாயி' என்கிற நாவல், முழுக்கப் பெண்கள், பாலியல் ரீதியில் சுரண்டப்படுகிற விஷயம்.

மேல் சாதிக்காரன் தாழ்ந்தவனைச் சுரண்டுவது மாத்திரம் அல்ல. வலுத்தவன், தன் சொந்த சாதிக்காரனையே சுரண்டு வதுகூட' சிவகாமியால் மிகச் சிறப்பாக வடிக்கப்பட்டிருக்கிறது. பெண்ணுக்கு எதிராக இழைக்கப்படும், அத்தனைத் தீமைகளுக் கும் எதிராக, இந்த எழுத்தாளரது கனலும் கோபம் - தமிழுக்கு மிகுந்த ஆரோக்கியம் தருவது.

ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' போலவும், ப. சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி' என்கிற நாவலைப் போலவும், சிவகாமி யின் நாவல்கள். முன்மாதிரிப் படைப்புகளாக நிற்பவை.

பாமா என்பவர் எழுதிய 'கருக்கு' என்கிற தன் வரலாறு. தமிழுக்குக் கிடைத்திருக்கும் புதிய பலம். தன் வரலாறுகளே தமிழில் மிக குறைவு. உ. வே. சாமிநாதய்யர், நாமக்கல் கவிஞர், கோவை அய்யாமுத்து, நெ. து. சுந்தர வடிவேலு போன்றோர் குறிப்பிடத்தக்க வரலாறு எழுதியவர்கள். தன் வரலாற்றுத் துறையில், தமிழர் இலக்கிய நோக்கில், ஒடுக்கப்பட்டோர் கண் ணோட்டத்தில் பாமாவின் 'கருக்கு' ஒரு புதுப் படைப்பு. புதிய வழி. புதிய தொடக்கம்,

பாமா தாழ்த்தப்பட்ட கிறித்துவப் பெண்ணாக இருந்தவர். ஏசுவின் போதனைகளை, கிறித்துவ மடங்கள் உண்மையாகவே செயல்படுத்துகின்றன என்று தப்பாக நம்பி, மடத்தில் சேர்ந்து. ஆசிரியையாகவும் வளர்ந்து. மடத்துக்குள்ளும் மோசமான சாதி வேறுபாடு இருப்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து, மடத்தை விட்டும், அந்த மடையர்களை விட்டும், தன் மடத்தனத்தை விட்டும் வெறியேறியவர். குழந்தைப் பருவம் தொடங்கி, சுமார் 25ஆண்டு கால வாழ்க்கையை எழுதியிருக்கிறார்.

எழுத்து எப்படி என்கிறீர்கள்? சும்மா, பேச்சை அப்படியே பதிவு செய்கிறார். அலங்காரம், ஆடம்பரம், அணிகலன்கள் ஏதுவும் இல்லாமல் உடைத்துக்கொண்டு கிளம்பும் ஊற்று மாதிரி வார்த்தைகள் வந்து விழுந்து இந்தத் தன் வரலாற்றை ஆக்கியிருக்கின்றன. இருதயத்தல் இருந்து வாழ்க்கை வெளிப்படுகிற காரணத்தால், அது வீரியம் கொண்டு விளங்குகிறது. எப்போதும் உண்மைக்கு இருக்கும் சக்தியே அதுதான். வேறு வார்த்தைகளில் சொன்னால், மெத்தப் படித்தவர்களுக்கு பாமாவின் தமிழ் கைவராது. மாதிரிக்கு சில வரிகள்:

"இப்படி நெனச்சிக்கிட்டு, இருக்கிறப்ப, மடத்தனமா, மடத்துக்குள்ள, கன்னியாஸ்திரியா சேர்ந்து. நம்மளப் போல கஷ்டப்படற பிள்ளைகளுக்காக பாடுபடலாம்னு ஆசைப்பட்டுக்கிட்டு போய் ஒரு மடத்துல சேர்ந்தேன். இப்படி ஒரு சாதியில பெறந்து இவ்வளவு கஷ்டப்பட்டு நம்ம படிப்புனால முன்னுக்கு வந்ததப் போல, மத்த கஷ்டப்படற பிள்ளைகளையும் முன்னுக்கு கொண்டு வரலாம்னு ஆசை. அப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு படிச்சுக் குடுக்கணும்னு ஆசை. ஆனா, நான் போய்ச் சேர்ந்த மடம். பெரிய பெரிய பணக்கார புள்ளைகளுக்குத்தான் சேவகம் பண்ணிக்கிட்டு இருக்கிற விஷயத்தை உள்ளே போய்த் தெரிஞ்சுக்கிட்டேன். மடத்துக்குள்ள வறுமையில வாடுற சனங்கன்னா ஒரு தினுசாவும், துட்டு இருக்கிறவுகளை இன்னோரு தினுசாவும் தான் நடத்துறாங்க .."

இந்து மடத் தலைவர்களுக்குச் சற்றும் குறையாத கிறிஸ்துவ மடத் தலைவர்களின், தோலுரிக்கிற இந்தச் 'கருக்கு' புத்தகம் (ஐடியாஸ், வாழைத்தோப்பு, சிந்தாமணி ரோடு. மதுரை-1) தமிழன் தவறாமல் படிக்கவேண்டிய தமிழ் இலக்கியம்.

விழி. பா. இதயவேந்தன் என்கிற தமிழ் எழுத்தாளரைத் தமிழர் அறிதல் அவசியம். அவருடைய சிறுகதைத் தொகுதியின் பெயரே, 'நந்தனார் தெரு'. கதைகள் எப்படி? சாட்டைச் சொடுக்கு மாதிரி, சிகரெட் துண்டை மிதித்து விட்ட மாதிரி, மண

சுக்குள் சுரீர் என்று வலியேற்றும் கதைகள்.'இப்படித்தான் செய்ய வேண்டும். இந்த அயேக்கியா அதிகாரிக்கு அப்போதுதான் புத்தி வரும்' என்று ஒப்புக் கொள்ள வைக்கிற கதைகள். (வெளியீடு: தாமரைச் செல்வி பதிப்பகம், 4-வது தெரு, சுப்பராயன் நகர், சென்னை —24)

'நந்தனார் தெருவுக்கு ஒரு கழிப்பறை வேண்டும். ஒரு அதிகாரியும், ஒரு தலைவனும், ஒரு கட்சிக்காரனும் எவனும் எதையும் 'புடுங்காமல்', ஊரை ஏய்த்துத் திரிகிறார்கள். பார்த்தார்கள் சனங்கள். நகரசபைக் கமிஷனர் அறைக்கு வெளியேயும் உள்ளேயும் மலம் இருந்து வைத்து விட்டார்கள்' என்று ஒரு கதை. சரிதானே? நியாயம் தானே? மக்களிடம் இருந்து சம்பளம் வாங்குகிற நாய்கள் தங்கள் கடமையை ஒழுங்காக ஆற்ற வேண்டாமா. அப்புறம் என்ன மயித்துக்கு, இந்த அரசாங்கம் அதிகாரம் எல்லாம்? கேட்கிறார் இதயவேந்தன். தமிழனுக்கு அறிவு கொளுத்துகிற கதைகள்!

---

உண்மையான நட்பு ஆரோக்கியத்தைப் போன்றது. அதனை இழந்து விடும்வரை நாம் அதன் உண்மை மதிப்பை உணர்வதில்லை.

— வோல்ட்டேன்

# நான் இன்னும் நானே

—தணிகைச் செல்வன்

(சுபமங்களா - மே 93)

தீக்குளித்தும் எந்தன் கற்பை நீங்க நம்பலை — சீதை
சாகலையே என்ற கவலை உங்க மனசிலே
வாக்களித்தபடி எனக்கு வாழ்க்கை கிடைக்கலே —
என் வாழக்கை உங்க பட்டி மன்றம் தீர்க்க முடியலே.

தூண் கணக்கா நீங்க சபையில் நிக்கையிலேயே — என்னைத்
துகிலுரிந்த கையை வெட்ட வக்கு இல்லையே
ஆண் மகனா நீங்க? அட வெக்கமில்லையா? — என்னை
அடகுப் பொருளைப் போலச் சூதில் வைக்க வில்லையா?

அரிச்சந்திரன் மனைவியாக அரியணை மீது — நான்
அரசியாக அமர்ந்திருந்தும் உரிமைகள் ஏது?
தரகுச் சந்தை மாட்டைப் போல என்னை வித்தீங்க — உங்க
சரித்திரத்தில் பெண்ணுக்காக எதைக் கிழிச்சீங்க.

கூடையிலே குஷ்டரோகி உங்களை வைத்து — நீங்க
கூடும் ஆசை நாயகியின் வீட்டிலே விட்டு
வாடி நின்றேன் 'பதிவிரதை' பட்டத்துக்காக — துளி
வருத்த முண்டா நான் சிறுமை பட்டதற்காக?

நட்ட நடுக் காட்டில் என்னை விட்டு ஓடினாய் — உன்னை
நம்பி வந்த என் கழுத்தில் நாகம் சூடினாய்
அப்படியும் சுயம் வரத்தில் உன்னை நாடினேன் — இந்த
அடிமைக்குணம் போற்றிப் புகழ்ந்தே பாடினான்.

மேடையிலே நின்றபோது மாதவியானேன் — உங்க
மிருக இச்சை வடிந்த பின்பு பாதகியானேன்
வேடர்களின் வெறியினின்று விடுதலையாக — வேறு
வழிகளின்றித் துறவு பூண்டேன் மேகலையாக.

விற்பதற்கு நான் அளித்த சிலம்பிருந்ததால் — என்னை
விற்கவில்லை! கோவலனின் குணம் புரிந்ததா?
கற்பு என்னும் ஆரக்காலில் பக்திக் கயிற்றிலே — கட்டிக்
கதற வைத்தீர் காரைக்காலின் அம்மை கழுத்திலே.

பட்டமகிஷி என்பதும் ஓர் அடிமைப் பட்டமே — டில்லி
பாதுஷாவின் பாதையெங்கும் எனது ரத்தமே
கட்டிடங்கள் வானை முட்டும் நிஜாமின் செழுமை — அதன்
கலசங்களில் குருதி நாறும் கன்னியர் இளமை.

ராஜசபையின் வடிவம் இன்று சட்ட சபைகளே — உங்கள்
ரதங்களிலே பூட்டியுள்ள குதிரை நாங்களே
ராணுவத்தை மகிழவைக்க நாங்கள் இரைகளே — உங்கள்
ராஜியத்தில் பாதி சிவப்புச் சேரித் தெருக்களே.

என்ன மாற்றம் அன்று முதல் இன்று வரையிலே — பரத்தை
என்றும் உங்கள் தேவையாக இருக்கும் வரையிலே?
பெண்ணைச்சுற்றி லட்சுமணன் போட்ட கோட்டினைத் - தாண்டிப்
போனவளின் மேலடித்தீர் நரகல் சேற்றினை.

லட்சுமியின் தெய்வப்படம் தொங்கும் சுவரின் கீழ் — போலீஸ்
லத்திகளில் வடிகிறது என்னுடைய சீழ்?
எத்தனையோ ஜமீலாக்கள் கல்பனாக்களாய் — இதோ
இன்னுமொரு பத்மினியாய் தொடர் வினாக்களாய்......

நான் இருந்தேன்; 'பொம்பளை' யாய் நான் இருக்கிறேன் - இனி
நாணழித்துப் புதியவளாய்த் தோலுரிக்கிறேன்
ஏன் பிறந்தேன் என்று இனியும் வியரத்திடமாட்டேன் - உலகம்
என்னில் பாதி அதனை விட்டுக் கொடுத்திட மாட்டேன்.

# ஐக்கிய தேசியக் கட்சியின் மகத்தான சாதனை.

— அனுரத்த திலகசிறி—

(ஒப்சேவர் 23. 5. 93)

"உன்னைத் தாங்கள் கொன்றுவிட்டதாக
அவர்கள் எண்ணினார்கள் ஆனால் நான்
உன்னை நேற்றைய தினம் கண்டேன்."

- அசாத்த சாகூர் இயற்றிய "இளம் இரத்தம்"
என்ற கவிதையிலிருந்து.

சென்ற வாரம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த வெற்றி மே திங்கள் முதலாம் நாள் கொலை செய்யப்பட்ட சனாதிபதி பிரேமதாசா அவர்கள் புத்துயிர் பெற்றுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது. தாங்கள் வெற்றியை ஈட்டுவார்கள் என மனப்பால் குடித்திருந்த எதிர்க்கட்சியினர் தோல்வியைத் தழுவிக்கொண்டனர்.

இந்தத் தேர்தல்களில் வெற்றிவாகை சூடும் வாய்ப்பை எதிர்க்கட்சியினர் முன்னெப்போதும் இல்லாதவாறு பெற்றிருந்தனர். மே திங்கள் 17 ஆம் நாள் நடாத்தப்படவிருந்த தேர்தலுக்கு இருவாரங்களுக்கு முன் சனாதிபதி பிரேமதாசா அவர்கள் கொல்லப்பட்டதால் ஐக்கிய தேசியக் கட்சி தனது மகத்தான தலைவராகவும், அதன் மூல உபாயங்களை வகுப்பவராகவும் அதன் முதன்மை அமைப்பாளராகவும், பொதுமக்களைக் கவரத்தக்க வகையில் பேசும் ஆற்றல் வாய்ந்தவராகவும் விளங்கிய ஒருவரை இழந்தது. "பலம் குன்றிய நாடுகள் கட்டுக்கோப்புடனும், சிதைவுறாமலும் நீடித்து நிலைத்திருக்க வேண்டுமாயின் அவை உறுதியான தலைவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். உறுதியான தலைவர்கள் தங்கள் பதவிகளை விட்டுச் செல்லும் பொழுது நீண்டதொரு இடைவெளியையும் விட்டுச் செல்கின்

றார்கள். மே திங்கள் முதலாம் நாள் சனாதிபதி பிரேமதாசா அவர்கள் கொலைசெய்யப்பட்டதன் காரணமாக அரசாங்கத்தின் மத்தியில் பெரிய இடைவெளி ஒன்று ஏற்பட்டுள்ளாதால் இலங்கையும் பலம் குன்றிய நாடாகிவிட்டது'' என மே திங்கள் 8 ஆம் நாள் லண்டனிலிருந்து வெளிவந்த ''த எக்கோனோமிஸ்ற்'' என்ற செய்தித்தாளில் கூறப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினரும் மற்றவர்களும் எதிர்பார்த்ததைப்போலல்லாது சனாதிபதி பிரேமதாசா அவர்களின் கொலைக்குப் பின் ஐக்கிய தேசியக்கட்சி சிதைவுறவோ அரசாங்கம் வீழ்ச்சியுறவோ இல்லை. ஆட்சி மாற்றம் அமைதியான முறையில் ஏற்பட்டதுடன் கட்சியிலுள்ளவர்கள் தங்களுக்கிடையேயிருந்த வேறுபாடுகளை மறந்துவிட்டு புதிய தலைவர் சனாதிபதி டீ. பி. விஜயதுங்கா அவர்களுக்குத் தங்கள் முழுமையான ஆதரவையும் வழங்கினார்கள். ஐக்கிய தேசியக்கட்சி உடனடியாக தன் நிலைக்கு வர முடியாதவகையில் பாரிய தாக்கத்தை சனாதிபதி பிரேமதாசா அவர்களின் சாவு ஏற்படுத்தியுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

## எதிர்க்கட்சியினரின் எதிர்பார்ப்புகள்.

மே திங்கள் 17 ஆம் நாளில் நடைபெறவிருந்த தேர்தலில் தாங்கள் வெற்றியடைவார்கள் என எதிர்க்கட்சியினர் திடமாக நம்பியிருந்தனர். திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்களின் தலைமை ஆலோசகராக விளங்குபவரைப் பத்திரிகை ஆசிரியராகக் கொண்டதும், எதிர்கட்சியினரிடம் மாறாத பற்றுறுதி கொண்டதுமான 'ராறய' என்ற நாளிதழின் சென்றவார வெளியீட்டிலுள்ள தலையங்கத்தில் ''17 ஆம் நாள் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பல வெற்றிகளை ஈட்டும்'' எனக்கூறப்பட்டிருந்தது. மாகாண சபைத் தேர்தலுக்கான கோட் பரப்பு ஆரம்பமான நாளிலிருந்து எதிர்க்கட்சிகள் பெருமளவில் வெற்றியைப் பெறும் என்றே பல நாளேடுகள் ஊகித்திருந்தன. ''மாகாணசபைத் தேர்தல் பற்றி ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் நாங்கள் பெற்றுக்கொண்ட தகவல்களின் படி திருவாளர்கள் லலித் மற்றும் காமினி உட்பட ஆற்றல் வாய்ந்த ஒரு குழுவினால் வழிநடாத்தப்படும் மக்கள் முன்னணியும், சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியைவிட முன்னணியில் இருக்கின்றன'' என 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் வெளியிடப்பட்ட ''யுக்திய'' என்ற நாளிதழின் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில

மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி ஐக்கிய தேசியக்கட்சி அந்த மாவட்டங்களில் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது எனவும் இந்த நாளிதழில் கூறப்பட்டிருந்தது.

சுருங்கக்கூறின் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிரான அலை நாட்டில் வீசுவதாகவும், பெரும்பாலான மாகாணசபைகளில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியை இழக்க நேரிடும் எனவும் எதிர்க் கட்சியினர் திடமாக நம்பியிருந்தனர்.

ஆனால் இது அவர்களுடைய பயனற்ற ஒரு கற்பனையாகவே முடிந்தது. சமாளிக்கமுடியாத பல தடைகளை எதிர்நோக்கவேண்டியிருந்த போதிலும் 7 மாகாண சபைகளுக்கு நடாத்தப்பட்ட தேர்தலில் 6 மாகாண சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சி முதலாவதாக வந்துள்ளது. இவற்றில் 4 மாகாணசபைகளில் முறையே வடமத்தியமாகாணத்தில் 52 விகிதத்தையும், மத்திய மாகாணத்தில் 51 விகிதத்தையும், ஊவா மாகாணத்தில் 57 விகிதத்தையும், சப்பிரகமுவா மாகாணத்தில் 51விகிதத்தையும் பெற்றதன் மூலம் இப்பகுதியில் 50 விகிதத்திற்கும் அதிகமான வாக்குகளைப்பெற்றுதானே நாட்டிலுள்ள கட்சிகளில் மிகவும்பலம் வாய்ந்த தனிப்பெரும் கட்சி என்பதையும், தனக்கே நாட்டு மக்களின் பெரும் ஆதரவு என்றும் உள்ளதென்பதையும் சந்தேகத்திற்கு இடமின்றி ஐக்கிய தேசியக் கட்சி நிரூபித்துள்ளது

## உண்மை நிலை.

கீழே தரப்பட்ட உண்மைகளை எதிர்க்கட்சியினர் தங்கள் கவனத்தில் கொள்வது நல்லதாகும்.

* எதிர்க்கட்சியினர் ஆதரிக்கும் முன்னைய தேர்தல்முறையில் தேர்தல் நடாத்தப்பட்டிருப்பின் 136 தேர்தல் தொகுதிகளில் 106 தொகுதிகளை ஐக்கிய தேசியக்கட்சி பெற்றிருக்கும். அதாவது இக்கட்சி 78 விகித ஆசனங்களைப் பெற்றிருக்கும் என்பதை இது எடுத்துக்காட்டுவதுடன் 1977 ம் ஆண்டைப்போல மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பெற்றிருக்கும்.

* 17 மாவட்டங்களுள் பதுளை, மொனறாகலை, புத்தளம், கண்டி, மாத்தளை, நுவரேலியா, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, அநுராதபுரம் மற்றும் பொலனறுவை ஆகிய 11 மாவட்டங்களில் முழுமையான வெற்றியைப் பெற்றஐக்கிய தேசியக்கட்சி, 7 மாகாணங்களுள், ஊவாமாகாணம் வடமத்திய மாகாணம், சப்பிரகமுவா மாகாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



மற்றும் மத்திய மாகாணம் ஆகிய 4 மாகாணங்களில் முழுமையான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

* அந்த மாவட்டங்களில் அல்லது மாகாணங்களிலுள்ள எந்தவொரு தேர்தல் தொகுதியிலும் மக்கள் முன்னணி அல்லது சனநாயக தேசிய முன்னணி முதலாவதாக வரமுடியவில்லை.

* சில இடங்களை மாத்திரம் குறிப்பிடுவதாயின், இலங்கைச் சுதந்திரக்கட்சியினதும், இடதுசாரிகளினதும் கோட்டையாக விளங்கும் மதவாச்சி, கலவானை, இரத்தினபுரி, திருமதி பண்டாரநாயக்கா அவர்களின் பிறப்பிடமான பலாங்கொடை, எட்டியான்தோட்டை, ருவான்வெலை, அகலவத்தை, முல்கிரிகலை, திவுலப்பிட்டி, எகிலியகொடை ஆகிய இடங்களை ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றிக்கொண்டது.

* செல்லுபடியானதென ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் மொத்த விகிதத்தில் 1991 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகளைவிட 1993 ஆம் ஆண்டில் சற்றுக் குறைவாகப் பெற்றது என்பது உண்மையே. இது 5.4 விகிதமான வீழ்ச்சி ஆகும். செல்லுபடியானதென ஏற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் விகிதாசாரத்தில் சுதந்திரக் கட்சி பெற்ற முழுவாக்குகளையும் கணிப்பிடுகையில் அதுவும் மிகவும் வீழ்ச்சியுற்றுள்ளது என்பதையும் அந்த வீழ்ச்சி 11.6 விகிதமானது என்பதையும் அறிந்து கொள்ளலாம். ஐக்கிய தேசியக்கட்சி இழந்த வாக்குகளைவிட இரண்டு மடங்குக்கு அதிகமான வாக்குகளை சுதந்திரக்கட்சி இழந்துள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## திரு. பிறேமதாசா அவர்களின் கொள்கை.

நாட்டிலுள்ள சிற்றூர் மக்களின் பெரும் ஆதரவு ஐக்கிய தேசியக்கட்சிக்கு உண்டு என்பதை தேர்தல் பெறுபேறுகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. கொழும்பு மாநகரின் சுற்றுப்புறத்தே வாழும் மக்களின் ஆதரவு இக்கட்சிக்கு அவ்வளவு இல்லாத போதிலும், தலைநகரில் இதற்கு ஓரளவு ஆதரவு உண்டு.

ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் முன்னணியிடம் மேற்கு மாகாணத்தை இழந்தபோதிலும், கல்வி, பண்பாடு மற்றும் பொருளாதார வளங்கள் நிறைந்த கொழும்பு மாநகரில் அது வெற்றி ஈட்டியுள்ளது. நகரத்தின் எல்லைக்கு உட்பட்ட தேர்தல் தொகு

திகள் யாவற்றிலும் வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக்கட்சி வாக் களிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 51 விகிதத்திற்கு மேலான வற்றைப் பெற்றுள்ளது. புவியியல் அரசியல் ரீதியாக நோக்கு கையில் எதிர்கட்சியினர் நகரங்களைக் கைப்பற்றிய வேளையில் ஐக்கிய தேசியக்கட்சி நாட்டுப்புறத்தைக் கைப்பற்றியுள்ளது எனக் கூறுவதைவிட, நாட்டின் தலைநகரத்தையும், நாட்டுப்புறத்தை யும் ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றியுள்ளது எனவும் நகரின் சுற் றுப்புறங்களை எதிர்க்கட்சியினர் கைப்பற்றியுள்ளனர் எனவும் கூறுவது பொருத்தமாகும்.

ஊவா மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டம் போன்ற மிகவும் வறுமையானதும், முன்னேற்றமடையாததுமான நாட்டுப்புற பகுதிகளில் ஐக்கிய தேசியக்கட்சி பெற்ற மகத்தான வெற்றி அங்கு வாழும் மக்களில் பெரும்பாலானோர் சனாதிபதி பிரேமதாசா அவர்களின் கொள்கையினால் நன்மை பெற்றதை எடுத்துக்காட்டுகின்றது. இதுகாறும் கவனிப்பாரற்று இருந்து வந்த இந்தப்பகுதிகளை அபிவிருத்தி செய்தும், இங்கு வாழும் மக்களுக்கு வாழ்வு அளித்தும், வரலாறு ரீதியாக அம்மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதியையும் இந்தப்பகுதிகளில் இயற்கை ரீதியான உருவமைபின் காரணமாக அவர்கள் அடைந்துவரும் துன்பங்களையும் நீக்குவதற்குச் சனாதிபதி பிரேமதாசா அவர்கள் விரும்பியிருந்தார். இதன்பின் நகரங்களையும், நகர்ப்புறங்களை யும் அபிவிருத்தி செய்ய அவர் எண்ணியிருந்தார். அவர் எண்ணி யிருந்ததைச் செய்து முடிக்குமுன் கொல்லப்பட்டார். அவர் எண்ணியிருந்ததுபோல் மே நாள் உரையை நிகழ்த்தியபின் இறு திவாரத்தில் தனது தேர்தல் கோட்பரப்பு உரையை மேல் மாகா ணத்தில் நடாத்தியிருப்பாராயின், தேர்தல் முடிவுகளில் குறிப்பி டத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும்.

நாட்டுப்புறத்திற்கும், நகரத்திற்கும் இடையே காணப்படும் பாரிய அபிவிருத்தி இடைவெளியை நிரப்புவதற்கு நகரத்தின் சுற் றுப்புறத்தை வேறாக்கி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு நீதியானதும், முன்னேற்றகரமானதும், சமநிலையிலுள்ளதுமான சமுதாயம் ஒன்றைக்கட்டியெழுப்புவதே சனாதிபதி பிரேமதாசா அவர்களின் கொள்கையாகவிருந்தது. இவரின் இந்தக் கொள்கை நல்ல பலனைக் கொடுத்துள்ளதை அண்மையில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலின் பெறுபேறுகள் தெரியப்படுத்துவதால் இவற்றைத் தொடர்ந்தும் பின்பற்றுவது அவசியமாகும். இருப்பி னும் நகரங்களுக்கும் நகரங்களின் சுற்றுப்புறங்களுமான பிறிதான தொரு திட்டம் வகுக்கப்படவேண்டியது அவசியமாகும், நகரத்

97567

திலும் அதன் சுற்றுப்புறத்திலும் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் யாவும் இனங்காணப்படுவதுடன், அவற்றைத் தீர்த்து வைப்பதற்கும் கவனம் செலுத்தப்படவேண்டும். நாட்டுப்புறத்தில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு சிறப்பு கவனம் செலுத்துவதையும் நகரத்தில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட சிக்கல்களுக்கு வேறு ஒரு தருணத்தில் கவனம் செலுத்துவதையும் விடுத்து ஒரே நேரத்தில் இந்த மக்களின் சிக்கல்களை அணுகவேண்டும். "இரண்டு கால்களாலும் நடப்பது" என்ற சீனத்தலைவர் மாவோ அவர்களின் கொள்கையே பின்பற்றப்பட வேண்டிய சரியான கொள்கை ஆகும்.

## கற்பனை சிதறடிக்கப்பட்டது.

எதிர்க்கட்சியினரின் பல கற்பனைகளை மாகாணசபைத் தேர்தல் பெறுபேறுகள் சிதறடித்துவிட்டன. ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக நாட்டில் 1956 ஆம் ஆண்டில் எப்படியான அலை வீசியதோ அதைப்போன்ற அலை இட்பொழுதும் வீசுகின்றது என்பது அவர்களுடைய முதலாவது கற்பனையாகும். ஆனால் தேர்தல் முடிவுகள் அப்படியான ஒரு நிலை இல்லை என்பதை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. இடது சாரிக்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தாலும் கூட இலங்கைச் சுதந்திரக்கட்சியால் ஐக்கிய தேசியக்கட்சியை தோற்கடிக்கமுடியாது என்பதையும் தேர்தல் முடிவுகள் தெரியப்படுத்தியுள்ளன. மக்களின் ஆதரவு சுதந்திரக்கட்சியைவிட ஐக்கிய தேசியக்கட்சிக்கே அதிகமாக உள்ளதென்பதே உண்மை நிலையாகும்.

சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முடிவின் ஆரம்பத்தை இந்த மாகாணசபைத் தேர்தல்கள் எடுத்துக் காட்டுகின்றது. பல மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியை மூன்றாம் இடத்திற்கு ஒதுக்கிவிட்டு வடமேல் மாகாணத்தையும் அது வெற்றிகொள்ளும் எனக்கருதியிருந்த அதன் உறுப்பினர்களை மாத்திரமின்றி அதற்குச் சார்பான நாளேடுகளையும் அது தழுவிக் கொண்ட படு தோல்வி அதிர்ச்சியுறச் செய்துள்ளது. வடமேல் மாகாணத்தில் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் எதிர்மாறாக 50 விகிதமான வாக்குகளுக்குக் குறைவான வாக்குகளைப் பெற்று மூன்று தேர்தல் தொகுதிகளில் மாத்திரம் அது வெற்றிக்கொள்ள முடிந்தது. ஐக்கிய தேசியக்கட்சியை வடமேல் மாகாணத்தில் தோற்கடித்து அதை மூன்றாவது இடத்திற்கு ஒதுக்கி வெற்றிவாகைசூடும்! என எதிர்பார்க்கப்பட்ட இக்கட்சி, வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 16. 7 விகிதத்தை மாத்திரம் பெற்று ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் மக்கள் முன்னணி ஆகிய இருகட்சிகளுக்கும் பின் தள்ளப்

யட்டு மூன்றாவது இடத்தை மாத்திரம் பெற்றுக் கொண்டது. மத்திய மாகாணத்தில் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் முதலாவது இடத்தைப் பெற்றிருந்த திரு. காமினி திசநாயகா அவர்களே படுதோல்வியைத் தழுவிக் கொண்டவராவார். திரு. பிரேமதாசா அவர்களுக்கு எதிராகக் காழ்ப்புணர்வுடனும், நேர்மையற்ற முறையிலும் கோட்பரப்பை மேற்கொண்டிருந்ததும் மற்றைய கட்சிகளைவிடக் கூடுதலான நேரத்தைத் தனது தேர்தல் கோட்பரப்புக்காகச் செலவிட்டதுமான இக்கட்சி லக்கலையிலும், கங்குறங்கெட்டவிலும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு இரண்டாவதாகவும், கண்டி மாவட்டத்திலுள்ள மற்றைய தேர்தல் தொகுதிகள் யாவற்றிலும் மூன்றாவது இடத்தையுமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

1977 ஆம் ஆண்டிலிருந்து திரு. காமினி திசநாயக்கா அவர்களின் தேர்தல் தொகுதியாக விளங்கும் நுவரெலியா - மஸ்கெலியாவில் 8.7 விகித வாக்குகளை மாத்திரம் பெற்ற சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நாலாம் இடத்திற்குத் தள்ளப்பபட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் திரு. காமினி திசநாயக்கா அவர்களின் தலைமையில் வழிநடாத்தப்பட்ட இக்கட்சி 17.71 விகிதமான வாக்குகளை மாத்திரம் பெற்ற அதேவேளையில், மலை நாட்டின் தனிப்பெரும் தலைவராக வரவேண்டும் என்று விரும்பும் திரு. காமினி திசநாயக்கா அவர்களின் மனைவி திருமதி. சிறிமா திசநாயகா அவர்களால் வழிநடாத்தப்பட்ட இக்கட்சி நுவரேலியா மாவட்டத்தில் 11.14 விகிதமான வாக்குகளை மாத்திரம் பெற்றுக்கொண்டது. திசநாயகா குடும்பத்தின் கோட்டை எனக்கருதப்பட்ட மத்திய மாகாணத்தில் ஐக்கிய தேசியக்கட்சி 53 விகிதமான வாக்குகளையும், மக்கள் முன்னணி 26.5 விகிதமான வாக்குகளையும் பெற்ற அதேவேளையில் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 16 விகிதமான வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பகட்டுத் தன்மைக்கு மாகாணசபைத் தேர்தல் ஒரு முடிவை ஏற்படுத்தியுள்ளது. ஆட்சி பீடத்தை இக்கட்சி கைப்பற்றிவிடும் என நினைத்து அதற்குத் தங்கள் ஆதரவை வழங்கிய பலர் எதிர்வரும் சில திங்களுள் இதைவிட்டு வெளியேறிவிடுவர். 'சுதந்திரக்கட்சிக்கு ஆதரவாக மாத்திரம் விளங்கக்கூடிய நிலையிலிருக்கும் இக்கட்சியின் முக்கியத்துவம் ஒவ்வொரு தேர்தலின் பின்பும் குறைய ஆரம்பித்து விடும். இக்கட்சி மேலோங்கிச் செல்லாது கீழ்நோக்கிச் செல்லுவதுடன் அதன் அரசியல் வாழ்வும் முடிவடைந்துவிடும்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## திருமதி சந்திரிகா அவர்கள் சதித்திட்டம் தீட்டுகின்றாரா?

திரு. காமினி திசாநாயக்கா அவர்கள் சந்தித்த தோல்வியைப் போல் பெரும் தோல்வியைச் சந்தித்த மற்றையவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா ஆவர். திருமதி சந்திரிகா அவர்களே 1994 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலில் மக்கள் முன்னணியின் வேட்பாளராக நிறுத்தப்படுவார் என அவருக்கு விசுவாசமாக உள்ளவர்கள் வெளிப்படையாகக் கூற ஆரம்பித்துள்ளார். திருமதி சந்திரிகா அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும் இலங்கைச் சுதந்திரக்கட்சியின் ஆளுமையைக் கைப்பற்றுவதற்கும் இரண்டாவது கட்ட நடவடிக்கையாகவே இது அமைந்திருக்கின்றது. இலங்கைச் சுதந்திரக்கட்சிக்குள் குடும்பப்பூசலும், பகைமையும் அடுத்த சில திங்களுள் தோன்றுவதை நாம் காணக் கூடியதாகவிருக்கும். திரு. அனுரா அவர்களின் ஆதரவாளர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்குத் திருமதி. பண்டாரநாயக்கா அவர்கள் தேர்தல் பெறுபேறுகளைப் பயன்படுத்துவார். கட்சிக்கும் திருமதி சந்திரிகா அவர்களுக்கும் எதிராகச் செயற்பட்டதற்காகத் திருவாளர்கள் திலக் கருணாரத்தினாவும், நெவில் பெர்னாந்து அவர்களும் தண்டிக்கப்படுவதுடன் தெற்கில், குறிப்பாக திரு. மகிந்தா ராசபக்ச அவர்களின் கோட்டைகளாக விளங்கும் முல்கிரிகலையிலும், பெலியத்தையிலும் சுதந்திரக்கட்சி தோல்வியைத் தழுவியதற்கு திரு. மகிந்தா ராசபக்ச அவர்கள் பதிலளிக்க வேண்டியிருக்கும். ஏழு மாகாணங்களில் ஆறில் தோல்வியைத் தழுவியதற்காகக் கட்சியின் அமைப்பாளராக விளங்கும் திரு. அனுரா அவர்களும் தண்டிக்கப்படுவார். திரு. அனுரா அவர்களுக்கு எதிரானவர்களைக் கொண்ட கட்சியின் விசாரணைக்குழு திரு. அனுரா அவர்களும் அவரின் ஆதரவாளர்களும் குற்றவாளிகள் எனக்காணுவதைத் தொடர்ந்து கட்சியிலிருந்து பலரை நீக்கும் பணி ஆரம்பமாகும். திருமதி சந்திரிகா அவர்களை அவரது தாயாரின் உண்மையான வாரிசாக ஆக்குவதற்கும், நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலில் கட்சியின் வேட்பாளராக அவரை நிறுத்துவதற்கும் மேற்கொள்ளும் முயற்சியில் பெரும் பங்கை "ராவய" என்ற நாளேடு ஏற்கும் என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது. திரு. அனுரா அவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றும் வரை திருமதி சந்திரிகா அவர்களைச் சார்ந்தவர்கள் திருப்தியடையப் போவதில்லை. ஆகவே இவரும், திரு. காமினி திசநாயகா அவர்களும் அரசியலிலிருந்து ஒதுங்கவேண்டிவரும்.

ஜனதா விமுக்திப் பெரமுனையைப் பற்றி மக்கள் கவனம் செலுத்தவில்லை.

மாகாணசபைத் தேர்தலில் பெரும் எண்ணிக்கையான வாக்குகளை ஐக்கிய தேசியக்கட்சி தெற்கில் பெற்றது அது ஈட்டிக் கொண்ட சிறப்பம்சமாக விளங்குகின்றது. "இளைஞர்களை" அழித்ததனாலும், மக்கள் பயங்கரமான ஆட்சிக்கு உட்படுத்தப் பட்டதாலும் ஐக்கிய தேசியக்கட்சியின் மீது வெறுப்புக் கொண்டிருப்பர் எனவும், ஜனதா விமுக்திப் பெரமுனைக்கு அங்கு நல்ல செல்வாக்கு உண்டெனவும் நம்பியிருந்தவர்களை தேர்தல் முடிவுகள் அதிர்ச்சியுறச் செய்திருக்கும். ஜனதா விமுக்திப் பெரமுனையின் அச்சுறுத்தலிலிருந்து தங்களைக் காப்பாற்றியதற்கு ஐக்கிய தேசியக்கட்சிக்குத் தெற்கிலுள்ள மக்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பதை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன. ஜனதா விமுக்திப் பெரமுனையினரின் கொடுமைக்கு ஆளாக்கப் பட்டு இன்னலுற்ற மக்கள் அவர்கள் எப்படியானவர்கள் என்பதை நன்கு அறிந்துள்ளதால் மீண்டும் அவர்கள் இயங்குவதை விரும்பவில்லை. ஜனதா விமுக்திப் பெரமுனையைச் சார்ந்தவர்கள் வீரம் மிக்கவர்கள் எனப் பெருமையாக எதிரணியினரும், தொடர்பு சாதனங்களைச் சேர்ந்த பொறுப்பற்றவர்கள் கூறிவந்த போதிலும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அவர்களின் வன் செயல்களுக்கு உள்ளாகியிருந்த தெற்கிலுள்ள மக்கள் அவர்களின் உண்மை வடிவத்தை நன்கு அறிந்திருந்தனர். இதன் காரணமாகவே தங்காலை மற்றும் திசமகாறாம போன்ற ஜனதா விமுக்திப் பெர முனையினரின் கோட்டையாக விளங்கும் இடங்கள் உட்பட அம்பாந்தோட்டைத் தேர்தல் தொகுதியிலுள்ள அனைத்து இடங்களிலும் வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக்கட்சி தெற்கில் வெற்றிவாகை சூடியுள்ளது. ஜனதா விமுக்திப் பெரமுனையினருக்குச் சார்பான "லக்தீப" என்ற செய்தித்தாளின் ஆசிரியரான திரு. டல்லசு அலகப்பெருமா அவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் மூன்று வேட்பாளர்களைவிடக் குறைவான விருப்பு வாக்குகளைப் பெற்றதன் மூலம் தெற்கிலுள்ள பெரும்பான்மையான மக்கள் ஜனதா விமுக்திப் பெரமுனையை முற்றாக நிராகரித்துள்ளமை தெளிவாகின்றது. ஜனதா விமுக்திப் பெரமுனையினரின் வன்செயல்களை மூடிமறைத்து அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறவர்கள் தாங்களே எனக்காட்டி தேர்தலில், குறிப்பாகத் தெற்குப்பகுதிகளில் தாங்கள் வெற்றிகொள்ள முடியாது என்பதை எதிர்க்கட்சியினருக்கு இது உணரவைக்கும் என நம்புகின்றோம்.

# நகர்ப்புறங்களிலும் நாட்டுப்புறங்களிலும் ஏற்பட்ட திடீர்த் திருப்பங்கள்.

— கௌடில்யா —

(ஐலண்ட் - 23. 5. 1993.)

மாகாணசபைத் தேர்தலில் தாங்கள் வெற்றிவாகை சூடு வார்களென எதிர்க்கட்சியினர் நம்பியிருந்தனர். சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவாளர்களே மற்றவர்களைவிட இதில் அதிகமான நம்பிக்கை வைத்திருந்தனர். சனாதிபதி பிரேமதாசா அவர்கள் கொல்லப்பட்ட செய்தியைக்கேட்ட நாட்டின் பல பாகங்களிலும் வாழும் மக்கள் பட்டாசு கொழுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததை நோக்குகையில், 15 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி பீடத்திலிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி மக்களின் ஆதரவை இழந்துள்ளதை எடுத்துக்காட்டுவதாக மேலும் பலர் நம்பினர்.

பக்கச்சார்பற்ற நடுநிலையாளர்களும் இந்தக் கருத்தைக் கொள்ள ஆரம்பித்தனர். தனிப்பட்ட முறையி ் கருத்துக்கணிப் பொன்றை மேற்கொண்டதன் மூலம் பெரும்பாலான மக்கள் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவாக வாக்களிக்கவிருப்பதை ஒரு ஆய்வு நிறுவனம் அறிந்து கொண்டது, இதற்கு ஒரு உதாரணமாகும்.

தேர்தல் நடாத்தப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன் தான் காலிக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டதாகவும், அங்கு தான் சென்ற 32 வீடுகளுள் 31 வீடுகளிலுள்ள மக்கள் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கே தாங்கள் வாக்களிக்கப்போவதாகக் கூறியதாகவும் அந்தத் தேர்தலைப் பற்றிக்கருத்தறிவிப்பவர் ஒருவர் கூறியுள்ளார். சனநாயக ஐக்கிய முன்னணியின தலைவரான திரு. லலித் அத்துலத்முதலி அவர்கள் கொல்லப்பட்டதனால்

தோன்றிய எதிர்மாறான சூழ்நிலை காரணமாக ஐக்கிய தேசியக்கட்சியினர் மௌனமாகவிருக்க ஒருவேளை தீர்மானித்தார்களோ தெரியாது.

பிரித்தெடுக்க முடியாதவை.

இந்த நாட்டின் அரசியலைத் தீர்மானித்துவரும் உணர்ச்சி அலை மற்றைய அம்சங்கள் யாவற்றையும் மறக்கச் செய்கின்றது ஐக்கிய தேசியக்கட்சியும், சுதந்திரக்கட்சியும் சென்ற முப்பது ஆண்டுகளாக ஒவ்வொன்றிற்கும் 30 விகிதத்திற்குக் குறையாத வாக்குகளை நிரந்தரமாகப் பெறக்கூடிய நிலையில் உள்ளன. கடும் போக்காளர்களான இந்த வாக்காளர்கள் வேறு எந்தக் கட்சிக்கும் வாக்களிக்கமாட்டார்கள். எஞ்சியிருக்கும் 30 – 40 விகித வாக்குகளே தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கக் கூடியவைகளாகவுள்ளது.

ஆகையால், பக்கம்சாராது இருக்கும் இந்த 40விகித வாக்காளர்களின் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதை இந்த விடயத்தைத் தர்க்க ரீதியாக ஆராயும் எவரும் அறியக்கூடியதாகவிருக்கின்றது. ஐக்கிய தேசியக்கட்சியுடனும் இலங்கைச் சுதந்திரக்கட்சியுடனுமான மும்முனைப் போட்டி மூலமே இந்த வாக்குகளை இந்த முன்னணி பெறவேண்டியுள்ளது. கட்சியை ஆரம்பித்த இரண்டு ஆண்டுகளுக்குள் ஐக்கிய தேசியக் கட்சியினதும், இலங்கைச் சுதந்திரக்கட்சியினதும் கடும்போக்காளர்களை சனநாயக ஐக்கிய தேசியக்கட்சி தன்பால் ஈர்த்துக்கொள்ளும் என எதிர்பார்த்திருந்தவர்கள் உண்மை நிலையை அறியாதவர்களே. சனநாயக ஐக்கிய தேசியக்கட்சி மூன்றாவது இடத்தைப் பெறுவது தவிர்க்கமுடியாததாகவிருக்கும்.

இதையே சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் செய்துள்ளது. பக்கம் சாராத வாக்காளரின் வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் செல்வதைத் தடுத்தும், அந்த வாக்குகளில் கணிசமானவற்றைப் பெற்றும், ஐக்கிய தேசியக்கட்சியின் கடும் போக்காளர்களின் வாக்குகள் சிலவற்றைப் பெற்றும் 7 மாகாணக்களில் அதுவும் செல்வம் மிகுந்ததும், அதிக சனத்தொகையைக் கொண்டதுமான மேற்கு மாகாணம் உட்பட மூன்று மாகாணங்களில் ஐக்கிய தேசியக்கட்சி. அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியாதவாறு சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி செய்தது. புதிதாக ஆரபிக்கப்பட்ட இக்கட்சி செய்த ஒரு சாதனையாகும்.

எதிர்விளைவை ஏற்படுத்தும் பண்பு.

சனாதிபதி றணசிங்கா பிரேமதாசா அவர்களின் 4 ஆண்டுக் கால ஆட்சியே சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உருவாகு வதற்குக் காரணமாகவிருந்தது. மேலாண்மையை (அதிகாரத்தை) அவர் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பாததும் கருத்து வேறுபாடுகளை புரிந்துணர்வுடன் நீக்குவதற்கும், பொறுத்துக் கொள்ளவும் விரும்பாததும் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பி னர்களான திறமைசாலிகளையும், துணிவுள்ளவர்களையும் அக் கட்சியிலிருந்து வெளியேறச் செய்தது. இதன் காரணமாக அக் கட்சியின் செயல்திறன் பலவீனப்படுத்தப்பட்டதுடன் அது மக்க ளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையையும் இழந்தது.

அரசியல் விழிப்புடைய மக்களையும், சிந்திக்கும் ஆற்றல் வாய்ந்த மக்களையும் இழிவுபடுத்தக் கூடியவகையில் சனாதிபதி பிரேமதாசா அவர்கள் நடந்துகொண்டதும் இத்தேர்தலில் ஐக் தேசியக்கட்சி பாதிப்புக்குள்ளாவதற்குக் காரணமாகவிருந்தது.

எயர் லங்கா கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த வானூர் திகள் பற்றி மக்களுக்கு விளக்கம் கொடுத்தமுறை, திரு. றிட் சாட் த சொயிசா அவர்களின் கொலை மூடிமறைக்கப்பட்டமை கோட்டைப்புகையிரத நிலையத்தில் பத்திரிகை ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குக் கொடுத்த விளக்கம், 200 ஆடைத் தொழிற்சாலைகள் உருவாக்கும் திட்டம், மணிக்கூட்டுக் கோபுரம் கட்டுவதற்கான திட்டம், தொலைக்காட்சியில் தெரி விக்கப்படும் செய்திகள் யாவற்றையும் நியாயப்படுத்தியமை ஆகி யன விவேகமாகச் சிந்திக்கும் ஆற்றல்வாய்ந்த எந்தவொரு மனி தனையும் கேலி செய்வதாகவிருந்தது'

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு ஒருபுறமிருக்க, மக்களின் அறிவாற்றலை அவமதிக்கத்தக்கவகையில் இந்த அரசாங்கம் நடந்துகொண்டதே அதற்கு எதிரான வெறுப்பை, குறிப்பாக அரசசார்பற்ற வட்டாரங்களிலும், தனிப்பட்ட முறையில் தகவல் களைப் பெறக்கூடிய வாய்ப்பைப் பெற்ற மக்களின் வெறுப்பை அது சம்பாதித்துக் கொண்டது.

இப்படியான வாய்ப்பைப் பெற்ற மக்கள் மேற்கு மாகாணத் திலும் மற்ற மாகாணங்களின் தலைநகரங்களிலுமே உள்ளனர். இந்தப் பகுதியிலேயே ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியைச் சந்தித்துள்ளது. இப்படியான பாரிய எதிர்விளைவுகளை ஏற் படுத்தக் கூடிய இயல்புகளைக் கொண்டிருந்த சனாதிபதி பிரேம

தாசா அவர்களிடம் ஐக்கிய தேசியக்கட்சியின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய நல்லியல்புகளும் இருந்தன.

அவருடைய நல்லியல்புகளே எதிர்கட்சிகள் எதிர்பார்த்த தற்கு முற்றிலும் எதிர்மாறாக ஐக்கிய தேசியக்கட்சி படுதோல் வியைத் தழுவிக் கொள்வதிலிருந்து அதைக் காப்பாற்ற உதவி யது. இருப்பினும் அவருடைய இந்தப் போக்கைத் தாங்கள் பின்பற்றப் போவதில்லையென இவருக்குப் பின் பதவி வகிப்ப வர்கள் தீர்மானித்துள்ளதாகத் தெரிகின்றது.

தங்கள் தொகுதிகளில் குறிப்பிடத்தக்க வாக்கு வித்தியாசத் தில் ஐக்கிய தேசியக்கட்சியின் தற்போதைய தலைவர்கள் தோல் வியைச் சந்தித்ததை நோக்குகையில், இவர்கள் தங்கள் தேர்தல் தொகுதிகளிலுள்ள மக்களுடன் தொடர்பு எதையும் வைத்திருக்க வில்லை என்பது புலனாகின்றது. தங்களுக்கு வாக்களித்த மக் களை இவர்கள் உதாசீனம் செய்யாது இருக்கவேண்டியது அவ சியமாகும்.

## நல்லியல்புகள்.

நகரங்களில் வாழ்பவர்களையும் கல்வி கற்றவர்களையும் கொண்ட தேர்தல் தொகுதிகளில் அதிக கவனம் செலுத்தும் தற்போதைய அரசியல் தலைவர்களைப் போலல்லாது, நகரங் களிலும், சிற்றூர்களிலும் உள்ள ஏழைமக்களின் நலனில் அக் கறை கொண்டவராகவிருந்த சனாதிபதி பிரேமதாசா தானே அவர்களின் பாதுகாவலர் எனக் காட்டிக் கொண்டார்.

கிராம எழுச்சி வைபவங்களின் போதும், நடமாடும் செயல கங்கள் இயங்கும் போதும் சாதாரண மக்களுடன் கலந்து உரை யாடி அவர்கள் என்னென்ன செய்யவேண்டும் எனக் கூறுவதில் அவர் மகிழ்வுற்றார். அப்படிச் செய்யும் பொழுது நாட்டின் தலைவர்கள் சாதாரணமாக ஈடுபடாத முக்கியமற்ற உள்ளூர் விடயங்களிலும் அவர் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அத னால் தங்களைக் கவனிப்பாரற்றிருந்த ஏழைமக்களிடையே இது ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தியது. தங்கள்பால் சனாதிபதி அக் கறை கொண்டுள்ளார் என்ற உணர்வை அவர்களுக்கு கொடுத் தது.

"சிற்றூர்களில் வாழும் சாதாரண மக்கள் மற்றவர்கள் செய்யும் செயலை உணர்ந்து அதற்குப் பதிலாக நல்லதைச் செய் யும் பாங்குடையவர்கள்" என மகாத்மா காந்தி அவர்கள் கூறி யுள்ளார். 1970 ஆம் ஆண்டின் முற்பகுதியில் எதிர்க்கட்சிப்

பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த பொழுதுதனது நண்பனாக இருந்த சர்வோதயத்தின் தலைவரான திரு. ஏ. ரி ஆரியரத்தினா அவர்களிடமிருந்து தனது வாழ்நாளின் முக்கிய காலப்பகுதியை நகரத்தில் கழித்த சனாதிபதி பிரேமதாசா அவர்கள் ஒருவேளை இந்த உண்மையை அறிந்திருக்கக்கூடும்.

சர்வோதைய இயக்கம் எப்படி வளர்ச்சித்திட்டப் பணிகளை மேற்கொள்கின்றது என்பதை அதனிடமிருந்து கற்றறிந்து கொண்ட சனாதிபதி அதன் வேலைத்திட்ட முறையை அப்படியே பின்பற்றி அரச ஆதரவினூடாக அப்படியான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதோடல்லாமல் அது தனது திட்டம் எனவும் கூறிக்கொண்டார்.

கைவிடப்பட்ட நிலையிலிருந்த நாட்டுப்புற மக்களின் உள்ளங்களைத் தன்பால் ஈர்க்கும் இரகசியத்தை சர்வோதைய இயக்கத்திடமிருந்து கற்றுக்கொண்ட அவர், அந்த இயக்கம் தனக்குச் சவாலாக இருக்கக்கூடாது என்பதற்காக நான்கு ஆண்டுக்காலமாக அதைச் செயலிழக்கச் செய்தார்.

படிப்பினை.

நாட்டின் சிற்றூர்களில் எதிர்கட்சியினர் தாங்கள் நினைத்ததற்கு முற்றிலும் எதிர்மாறாக நல்ல பெறுபேறுகளைப் பெற முடியாது இருந்ததற்கு காரணமாயிருந்த சனாதிபதி பிரேமதாசா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆட்சிப்பரவலாக்கம் மற்றும் வறுமை ஒழிப்புத்திட்டம் ஆகியவற்றிற்கு, எதிர்க்கட்சியினரும், ஐக்கிய தேசிபக்கட்சியினரும் மதிப்பளிக்கத் தவறியதை உணர்ந்து இவற்றிற்கு இவர்கள் மதிப்பளித்து ஊக்குவிக்க வேண்டியது அவசியமாகும்.

இவற்றில் பல குறைபாடுகள் இருந்தபோதிலும், கேளிக்கைகள் போன்றவற்றிற்குப் பணத்தை வீணே விரயம் செய்யப்பட்டதை மன்னித்துவிட முடியாதபோதிலும், தங்களை அரசாங்கம் கைவிடவில்லை எனவும், தங்களில் அது அக்கறையாக இருக்கிறது எனவும், சனாதிபதியும் அவரின் அரசாங்கமும் தங்களுக்கு உதவிசெய்ய வருவார்கள் எனவும், இவற்றின் மூலம் அவர்களுக்குக் காட்டப்பட்டதால், சிற்றூர் மக்களின் வாக்குக்களை ஐக்கிய தேசியக்கட்சியால் பெறமுடிந்தது.

தேசிய வாதியான சனாதிபதி பிரேமதாசா அவர்கள் மற்றைய சமூகங்களையும் பரந்த அத்தேசிய கோட்பாட்டுக்குள் உள்ளடக்கியதின்காரணமாக ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலில், குறிப்

பாக மத்திய மாகாணத்தில், வெற்றிபெற்றது. மற்ற நாடுக ளுடன் பேரம் பேசும் போது தனது நாட்டின் மதிப்பை விட்டுக்கொடுக்காதவராகவும் அவர் விளக்கினார்.

100% அரச மேலாண்மையை பெறவேண்டும் என்ற அவரது எண்ணம் உள்நாட்டு போரை தீர்க்க செய்யவேண்டிய செயல்களுக்கு எதிராக இருந்தது. இந்தக் குறை பாட்டைத் தெரிந்து கொண்டபோதும் அவர் இனவாரியாகத் தங்களைப் பிரித்து பாகு பாடாக நடாத்தமாட்டார் எனச்சிறுபான்மை இனமக்கள் கருதியதன் காரணமாகவே அவரின் இந்தக் குறைபாட்டையும் பொருட்படுத்தாது அவருக்குத் தங்கள் வாக்குகளை அவர்கள் வழங்க முன்வந்தனர்.

எதிர்காலத்தில் நடாத்தப்படவிருக்கும் தேர்தலில் வெற்றி பெற விரும்புபவர்கள் சனாதிபதி பிரேமதாசா அவர்களின் இந்த நல்லியல்புக்ளையும், அவர் உளரீதியாக விட்டுச்சென்ற கட்டமைப்பையும் கருத்தில் கொள்வதுடன், அவரைப் போல் தாங்களும் அடிமட்டத்திலுள்ள மக்களைத் தங்கள்பால் கவரக்கூடிய வகையில் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதுடன் அம்மக்களும் சிறுபான்மை இனமக்களும் நாட்டின் பிரதான நீரோட்டத்தின் ஒரு பகுதியினர் என்று உணரத்தக்கவகையில் செயலாற்ற வேண்டும்.

---

அறிவு என்பது நதியைப்போன்றது. அது எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அமைதியாக இருக்கும்.

— பேகன்.

# மகத்தான சேவைபுரியும் ஊர்காவற்படையினர்

—இயம்பதி செயசிங்க—

(ஒப்சேவர் 5.6. 93)

வடக்கிலும், கிழக்கிலுமுள்ள விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை மீட்டெடுப்பதற்குக் காப்புப் படையினர் போரில் ஈடுபட்டிருக்கும் வேளையில், தெற்கில் நல்ல காப்புடன் வாழும் மக்கள் இப்படியொரு மக்கள் குழு இருக்கின்றதென அறியாத ஒரு குழு சேவைக்கு அழைக்கப்படுகின்றது.

காப்புப் படையினர் எதிரியின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் முன்னேறிச் சென்று மீட்டெடுக்கும் இடங்களில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேவையாகவிருக்கும் இக்குழுவினரே ஊர்காவற்படையினர் ஆவர்.

காப்புப் படையைச் சேர்ந்தவர்களாலும், எல்லைப்புறங்களில் பணியில் ஈடுபடுத்தப்படுவர்களாலும் "கம்பட்டாஸ்" (Gam Battas) என அன்பாக அழைக்கப்படும் ஊர்காவற்படை, அது ஆரம்பிக்கப்பட்ட 82 ஆம் ஆண்டு மே திங்கள் முதலாம் நாளிலிருந்து செயற்பட்டுவருகின்றது.

கண்காணிப்பு நடவடிக்கை, காவற்கடமை மற்றும் இவை போன்ற, கடமைகளை மேற்கொள்ள காவல்துறையினருக்கு அதிக எண்ணிக்கையானவர்கள் தேவைப்படும் பொழுது அவர்களுடைய தேவையை நிறைவு செய்து உதவுவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஊர்காவற்படை தெற்கில் ஜனதா விமுக்திப் பெரமுனையினர் வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிட்ட போதும், வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெறும் போர் சூடுபிடிக்க ஆரம்பித்தபோதும் தேசிய காப்பின் ஒரு முக்கியமான உறுப்பாக மாறியது.

நாட்டின் வடக்கையும், கிழக்கையும் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஆரம்பத்தில் 3000 பேரைக் கொண்டதாகவிருந்த ஊர்க் காவற்படை, காலப்போக்கில் வளர்ச்சியுற்று தற்போது 16,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையானவர்களைக் கொண்டுள்ளது.

பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு அடிக்கடி உள்ளாகிவரும் எல்லை சிற்றூர்களுக்கு படையினராலும், காவல்துறையினராலும் வழங்கப்படும் காப்பை வலுப்படுத்துவதற்காகக் கடமைக்கு அழைக்கப்பட்டுவந்த ஊர்காவற்படை, தனது பிரிவிலிருந்து 13,000 பேரை வவுனியாவிலிருந்து திரிகோணமலைவரை வட மத்திய மாகாணத்திற்குக் குறுக்காகச் செல்லும் காப்பு வேலி ஒன்றை அமைப்பதற்கு ஈடுபடுத்தியுள்ளது.

மூத்த காவல்துறை மேலாளரான எஸ். பி. சேனாரத்தினா (S.P) அவர்களின் தலைமையின் கீழ் காவல்துறை தலைமையகத்தில் சிறிய எண்ணிக்கையிலானவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரிவு, அவரின் இடத்தை ஏற்ற காலஞ்சென்ற எச்.எல்.பியசேனா அவர்களின் காலத்திலிருந்து வளர்ச்சி பெற்றது.

திரு. அனுரா பசுதியான் அவர்களிடமிருந்து கடமையைப் பொறுப்பேற்ற பொது சனக் காப்பு மற்றும் துணைப்படைக்குப் பொறுப்பாகவும், மேலதிகக் காப்புச் செயலாளராகவும் கடமையாற்றிய பிரிகேடியர் லோறி பெர்னாந்து அவர்கள் இதன் வளர்ச்சியில் மிகவும் அக்கறைகாட்டி வந்தார். கைத்துப்பாக்கியைக் கையாள்வதில் திறமைசாலியெனச் கருதப்படுபவரும், காவல்துறையினருக்குப் பயிற்சியளிப்பவரும், இதன் தற்போதைய தலைவராக விளங்குபவருமான காவல்துறை மூத்த மேலாளரான சுமித் லியனகே (SSP) அவர்கள் 1987 ஆம் ஆண்டில் அந்தப் பிரிவைப் பொறுப்பேற்றபின் எல்லையோர சிற்றூர்களில் திறமையுடன் பணிபுரியும் இவ் இளைஞர்களுக்குப் பல நன்மைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

கிழிந்த கந்தல் உடைகளை அணிந்தவர்கள் போல் ஆரம்ப காலத்தில் தோற்றமளித்த இந்த ,இளைஞர்கள் தற்பொழுது சீருடை அணிந்து கம்பீரமாக நடைபோடுகின்றார்கள்.

அனுராதபுரத்திலும், கும்புக்காவிலும் அமைந்துள்ள இரண்டு பாசறைகளில் ஐந்து நாட்கள் வழங்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியை முன்னர் பெற்றதற்குப் பதிலாகக் கொரனை, அம்பாறை, மிகிந்தலை மற்றும் கல்பிட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள நான்கு பாசறைகளில் ஒன்றில் காடுகளில் போர்புரியும்

அடிப்படைப் பயிற்சியையும், சுடுகலன்களைக் கையாளும் பயிற்சியையும் ஒரு திங்கள் வரை பெறும் இவர்கள், இந்தப் பயிற்சி காரணமாக மிகவும் திறமையாகச் செயற்படக்கூடியவர்களாக விருக்கின்றார்கள்.

கேணல் பிரான்சிஸ் சாப்மன் அவர்களின் கண்காணிப்பின் கீழ் காப்பு அமைச்சின் பொதுசனக் காப்புப் பிரிவினரால் இந்தப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஊர்காவற்படையினரின் நான்கு பாசறைகளுக்கும் கூடுதலான தொடர்பு வசதிகள் வழங்கியதன் மூலமும், தேவைப்படும் இடங்களுக்கு அவர்களைக் கொண்டு செல்வதற்கு வாகனங்களை வழங்கியதன் மூலமும் இந்த அணி ஒரு மதிப்பு வாய்ந்த படையாக ஆக்கப்பட்டுள்ளது.

மற்றைய படையணிகளில் இருப்பதுபோல் ஊர்காவற்படையிலும் குறையும் நிறையும் உண்டு. வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஊர்காவற்படையினரில் எல்லை சிற்றூர்களில் கடமையாற்ற விரும்பாததன் காரணமாக, அந்த எல்லைச் சிற்றூர்களிலிருந்தே அண்மைக்காலத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

சிற்றூரைச் சேர்ந்த இளைஞர்கள் துணிவுடன் காப்புப் பணியில் ஈடுபடவும், பயங்கரவாதிகளுக்கு எதிராக முழு மூச்சாகப் போர்புரிந்து சிற்றூர்கள் மீது அவர்கள் (தீவிரவாதிகள்) மேற்கொண்ட பல தாக்குதல்களை முறியடிக்கவும் இந்த முறை பெரிதும் உதவியது என ஊர்காவற்படையினரின் பயிற்சிக்குப் பொறுப்பாகவுள்ள காவல்துறை மேலாளர் சரத் விஜய சுந்தரா (ASP) அவர்கள் கூறினார்.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரில் ஈடுபட்டிருக்கும் மற்றைய படையணிகளிலுள்ள இளைஞர்கள் போல் இந்த அணியிலுள்ள இளைஞர்களும் தங்கள் உயிர்களைத் தற்கொடை செய்ய வேண்டியிருந்தது. அப்படித் தற்கொடை செய்த 149 பேரில் 123 பேர் தெற்கிலும் மற்றும் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் 1988 ஆம் ஆண்டிலிருந்து 1989 ஆம் ஆண்டுவரை கொல்லப்பட்டவர்கள் ஆவர் என இப்படைக்குப் பொறுப்பாகவுள்ள தளபதி லியனகே அவர்கள் கூறினார்.

27726.6

சாவைத் தழுவியவர்களின் உறவினர்களுக்கு 11 மில்லியன் ரூபாவுக்கு கூடுதலான தொகை நட்டஈடாக வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

50 பெண்களையும், ஆண்களையும் கொண்ட கலைபண்பாட்டுக் குழுவொன்று இந்த ஊர்காவற்படையுடன் இணைக்கப்பட்டது. காவல்துறையின் மூத்த மேலாளரான லியனகே (SSP) அவர்களால் உருவாக்கப்பட்டு கண்டிக் கவின்கலைகளிலும், மற்றைய நடனங்களிலும் சிறந்து விளங்கும் இக்குழுவிற்குக் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராசதந்திரிகளிடையே நல்ல வரவேற்பு உண்டு.

ஊர்காவற்படையில் பெண்களும் பணியாற்றிய போதிலும், போருக்கான பயிற்சி அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை எனவும், பணிமனையில் அவர்கள் எழுதுவினைஞர்களாகக் கடமையாற்றுவதாகவும் இப்படையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்குப் பொறுப்பாகவுள்ள காவல்துறை மேலாளர் உபாலி சில்வா(SP) அவர்கள் கூறுகின்றார். 50 அகவைக்கு குறைவான எவரும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்ட போதிலும், கொள்கை ரீதியாக 35 அகவைக்கு உட்பட்டவர்களையே போர்ப்பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதாகவும் இவர் கூறுகின்றார்.

கொரனையிலுள்ள கும்புக்கா என்ற இடத்தில் அமைந்துள்ள அதனது பாசறையில் அதன் பதினொராவது ஆண்டு நிறைவு விழாவை மே திங்கள் முதலாம் நாள் கொண்டாடியபோது இரத்த தானம் செய்த இந்தப்பிரிவினர் அதில் பெருமையடைந்தனர். அன்று காலை 125 பேர் 80 பைன்ற் இரத்தத்தை தானம் செய்ததாகக் காவல்துறை மூத்தமேலாளர் லியனகே அவர்கள் கூறினார். சனாதிபதி அவர்களும், வேறு பலரும் சாவைத் தழுவுவதற்குக் காரணமாகவிருந்த ஆமர் வீதிக் குண்டு வெடிப்பில் காயமுற்ற 60 திற்கும் அதிகமானவர்களுக்கு வழங்குவதற்காக அன்று மாலை இந்த இரத்தம் உபயோகிக்கப்பட்டது.

"அந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தைக் கேள்வியுற்ற நாம் அதிர்ச்சியும், கவலையும் அடைந்தபோதிலும், நாங்கள் சேகரித்த இரத்தம் அதில் காயமுற்ற பலரின் உயிர்களைக் காக்கப் பயன்படுத்தப்பட்டதை அறிந்து மகிழ்வுற்றோம்'' எனவும் திரு.லியனகே அவர்கள் கூறினார்.

# பழமைவாய்ந்த தந்திரிமலை இளம் பௌத்தமத குரு ஒருவரால் எழுச்சி பெறுகின்றது.

— டபிள்யூ. ஜீ. குணரெட்ணா —

(ஒப்சேவர் 27. 6. 93.)

வில்பத்துவின் வடமேல் எல்லையில் அமைந்துள்ளதும், வன விலங்குகளும், தமிழீழ விடுதலைப்புலிகளும் நிறைந்துள்ளதுமான தந்திரிமலையில் வாழும் இளம் பௌத்தமதகுரு ஒருவர், வறியவர்களுக்கு நல்வாழ்வை அளிப்பதற்குத் தன் வாழ்நாளை காணிக்கையாக்கி வருகின்றார்.

அங்குவாழும் 3000 குடும்பங்களும் அவரை ஒரு வழிகாட்டும் ஒளியாகவும், தங்களைக் காக்கும் ஒருவராகவும் மதித்து வருகின்றனர்.

அநுராதபுரத்திற்கு வடமேல் பாகத்தில் 28 மைல்களுக்கு அப்பாலுள்ள தந்திரிமலை என்ற இச்சிற்றூர் படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற அச்சம் தரும் போர்கள் பலவற்றைக் கண்டுள்ளது. மன்னார் மற்றும் வவுனியாவை எல்லையாகக் கொண்டதும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததுமான மல்வத்தை ஆற்றுப்படுக்கையில் அமைந்துள்ள இச்சிற்றூரை படையம் இரவுபகலாகக் காத்துவருகின்றது.

32 வயதான வணக்கத்துக்குரிய தந்திரிமலை சாந்தரத்தின தேரர், தந்திரிமலையிலுள்ள வரலாற்றுப்பெருமைமிக்க இராசமகா விகாரையின் விகாராதிபதியாக விளங்குகின்றார். மக்கள் வழங்கும் தானங்களை ஏற்கவும், கோவில் நிர்வாகத்தை நடாத்தவும் மாத்திரம் அவர் அங்கு இருக்காது, மலேரியா நோய் பரவியுள்ள அந்தக் காட்டுக்குள்ளிருக்கும் சிற்றூரில் நிம்மதியாக உறங்குவதற்குக்கூட வசதியான இடமொன்றும் இல்லாதபோதிலும், மற்றவர்களுடைய

துயரைத்துடைக்கும் பணியில் தினமும் காலை 5 மணியிலிருந்து இரவு 12 மணிவரை ஈடுபட்டுவருகின்றார். பெரதேனியாவி லுள்ள பல்கலைக்கழகத்தில் பட்டப்பிடிப்பை முடித்துக் கொண்ட பின் சிலகாலம் ஆசிரியராகக் கடமையாற்றிய அவர் சமூக சேவையில் தனது முழுநேரத்தையும் செலவிடுவதற்காக அந்தப் பதவியை விட்டு விலகினார்.

தந்திரிமலை வளர்ச்சித் திட்டத்தின் குழுவுக்குத் தலைமை தாங்கும் வீடமைப்பு மற்றும் கட்டிட அமைப்புக்கு பொறுப்பாக வுள்ள மந்திரியான சிறிசேன குரே அவர்கள் உபதிசகம என்ற சிற்றூர் ஒன்றை உருவாக்கி அதில் 100 வீடுகளைக் கட்டுவதற்கு ஆரம்பித்ததுடன், தந்திரிமலையையும், அங்கு வாழும் மக்களை யும் பெரிதும் நேசித்த மறைந்த லெப்ரினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவா அவர்களின் நினைவாக அங்கு ஒரு பாலமும் கட்டப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டில் வாழும் சுமார் 15 000 ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் கொண்ட பின்தங்கிய சிற் றூர்களை முன்னேற்றுவதே அவரின் முதன்மைக் குறிக்கோளாக விருக்கின்றது.

களிமண்ணால் ஆனதும், காய்ந்த இலுக்கு ஓலைகளால் வேயப்பட்டதும், எச்சிமோவர் வாழுகின்ற இக்லூ போன்ற சிறிய குடிசைகளிலேயே இச் சிற்றூரிலுள்ள பல மக்கள் வாழ்கின் றார்கள். வறண்ட பிரதேசங்களில் பயிரிடப்படும் தானியமான குரக்கன் மாவில் தயாரிக்கப்படும் கூழும், குளத்தில் பிடிக்கப்படும் மீனுமே அவர்களின் முதன்மை உணவாகவிருக்கின்றது.

இந்தப் பகுதியை முன்னேற்றும் பொறுப்பு இந்த இளம் பௌத்த குருவையே சார்ந்துள்ளது. மகிந்ததேரரின் சகோதரி யான சங்கமித்தை 2300 ஆண்டுகளுக்குமுன் இந்தியாவிலுள்ள மகாபோதி சக்கத்தின் தெற்கத்தைய கிளையின் உறுப்பினர்களு டன் மாந்தோட்டையை வந்தடைந்தபின் அனுராதபுரத்திற்குச் செல்லும்பொழுது தந்திரிமலையில் தனது ஒரு இரவைக் கழித்த தாக இந்த இடத்திற்கு வரலாற்று பெருமை உண்டு.

ஒரு ஆண்டுக்குமுன் இந்த இளம் பௌத்த பிக்குவின் குரு வான குடா கொங்கசு கட சிறி விமலஞானதேரர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தந்திரிமலையிலுள்ள மக்களின் வளர்ப்புத் தந்தையாக இவரே விளங்குகின்றார்.

அயல் சிற்றூரான மதவாச்சியிலிருந்து தந்திரிமலைக்கு 1961 ஆம் ஆண்டில் விமலஞானதேரர் வந்து அங்கிருந்த கோவிலில் தங்கியிருந்தபோது அந்த இடம் காடுகளால் சூழப்பட்டிருந்தது துடன், யானைகளும், சிறுத்தைகளும், கரடிகளும் அங்கு அடிக்கடி சுற்றித்திரிந்தன.

வேட்டையாடுபவர்களையும், தேன் சேகரிப்பவர்களையும் தவிர வேறெந்தவொரு மனிதனையும் அவரால் அங்கு காண முடியவில்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய நினைத்த அவர் 63 குடும்பங்களை கொண்ட சிற்றூர் ஒன்றை வெகுவிரைவில் உருவாக்கினார். பல நூற்றாண்டுக் காலமாகக் கைவிடப்பட்ட நிலையிலிருந்த பல குளங்களைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கையை மேற்கொண்டார். மக்களைப் பட்டினிச்சாவிலிருந்து காக்கும் அமைப்பிடமிருந்து (Freedom from hunger) பெற்ற உதவியைக் கொண்டு 197? ஆம் ஆண்டில் 54 குளங்களைத் திருத்தியமைத்ததன் மூலம் யாரும் இலகுவில் செய்ய முடியாத ஒரு அரிய பணியை இவர் ஆற்றியுள்ளார். எஞ்சியிருக்கும் குளங்களையும் திருத்தியமைத்து வறண்ட காட்டு நிலத்தைச் சோலைவனமாக மாற்றுவதற்கு இந்த இளம் பௌத்த மதகுரு திட்டமிட்டுள்ளார்.

விமலஞானதேரர் போன்று அவரின் மூத்த மாணவரான சாந்தரத்னதேரரும் அங்குள்ளமக்களின் ஆன்மீகத் தலைவராகவும், அறிவுரை வழங்குபவராகவும், பொருளாதார ஆலோசகராகவும், நடுவராகவும் விளங்குகின்றார். சிற்றூர் மக்களும் கோயிலும் பின்னிப்பிணைந்து இருப்பதால் கோயிலிலிருந்து அவர்களைப் பிரிக்க முடியாதிருக்கின்றது.

சிற்றூர் மக்கள் கோவிலை ஒரு மருத்துவ மனையாகவே கருதுகின்றார்கள். தங்களுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்வதற்கு அங்கே வரும் அவர்கள் கோவிலின் பிரதமகுருவின் தீர்ப்பை மரியாதையுடன் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இந்த சிற்றூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்தப் பௌத்த மதகுரு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க அரசாங்கமும், வடமத்திய மாகாணசபையும் அரச சார்பற்ற நிறுவனங்களும், வேறு பல துறையினரும் முன்வந்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான படையினரை தங்கவைத்தும், தங்கள் முன்னணி காப்பு எல்லையை விரிவாக்கியும் படையம் அந்தப் பகுதியின் காப்பை உறுதிசெய்துள்ளது.

அகில உலகெங்கணும் வாழும் குழந்தைகளின் அவசர தேவைக்காக ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்படுத்தப்பட்ட நிதியம் (UNICEF) மற்றும் கனடாவில் தனது தலைமையகத் தைக் கொண்டதும், அகில உலகெங்கணும் வாழும் மக்களுக்கு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தும் அமைப்பின் தென் ஆசியப்பிரிவு (South Asia Partnership of the Canada based Hope International) உட்பட பல வெளிநாட்டு நிறுவனங்கள் தந்திரிமலையில் வாழும் மக்களின் வாழ்வை மேம்படுத்த பல உதவிகளைச் செய்ய முன் வந்துள்ளன.

"நீர்ப்பாசனத்திற்குத் தேவையான நீர் இல்லாமையே சிற் றூர் மக்களுக்குப் பெரிய சிக்கலாகவிருக்கின்றது. இந்த நீரை வழங்கினால் வேறொன்றையும் அவர்கள் கேட்கமாட்டார்கள்" எனப் பல ஆண்டுகளாக நீர் வற்றி வறண்டிருக்கும் பல குளங் களைக் காட்டிய சாந்தரத்னதேரர் கூறினார்.

"நீர் வளங்கப்பட்டால் நாங்கள் எங்கள் வாழ்க்கையைச் செவ்வனே அமைத்துக் கொள்வோம்" என ஒன்பது பிள்ளை களின் தந்தையான எம். செனவிரத்தினா என்பவர் கூறினார்.

விவசாயிகளுடன், அல்லது முன்னணிக் காப்பு எல்லை யிலுள்ள படைவீரர்களுடன், அல்லது அரச சார்பற்ற நிறுவனங் களுடன் அல்லது அரச மேலாளர்களுடனான சந்திப்புக்கள் போன்ற பல பணிகளைத் திட்டமிட்டபடி அவர் ஒரே நேரத்தில் செய்துவருவதால் சாந்தரத்னதேரர் எப்பொழுதும் சுறுசுறுப் பாகவேயிருப்பார். அவரின் பணிமனையில் அவர் இல்லையெனில் ஒன்றில் அவர் அனுராதபுரத்தில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருப்பார் அல்லது விவசாயிகளு டன் காட்டில் கலந்துரையாடிக் கொண்டிருப்பார். அவரின் சொந்தத் திட்டங்களான தானியச் சேகரிப்பு வங்கியும், பால் சேகரிப்பு வங்கியும், (Seed Bank and Milch Cattle Bank) சிற்றூர் மக்களுக்கு நல்ல வருவாயைத் தேடிக்கொடுத்துள்ளன.

14 கிலோ எள்ளுடன் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தானியச் சேகரிப்பு வங்கி தற்போது ரூபாய் 115, 000 /- க்கு அதிகமான பெறுமதியுள்ள தானியத்தைக் கொண்டுள்ளது. "விவ சாயிகளுக்கு விதைகளைப் பகிர்ந்தளித்த நாம் அவர்களுக்கு வழங்கிய விதையையும் அதற்குரிய வட்டியையும் பொருளாகவே பெற்றோம். இதன்மூலமே ஒரு நிலையான கையிருப்பை நாம் பெறமுடிந்தது" எனக்கூறிய சாந்தரத்ன தேரர் இப்படியாகப் பெறப்படும் நிதி அகில உலகிலும் வாழும் குழந்தைகளின் அவ

சர தேவைக்காக ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்படுத்தப்பட்ட நிதியத்தால் இந்த ஆண்டு அன்பளிப்பாக வழங்கப்படவிருக்கும் குழந்தைகளுக்கான கல்விநிலையங்கள் ஐந்திற்கு உதவுவதற்குப் பயன்படுத்தப்படும் எனவும் கூறினார்.

கிராமத்தவர்கள் ஒருவரில் மற்றவர் தங்கியிருக்கும் நிலை இருக்கக்கூடாதென்பதில் சாந்திரத்தினதேரர் மிகவும் கவனமாக விருக்கின்றார்.

சட்ட விரோதமாக கடத்திச் செல்லப்பட்டும், காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டும் விசாரணை ஒன்றை மேற்கொண்டு தீர்மானம் எடுக்கும்வரை அவற்றைப் பராமரிக்கும் பொருட்டு வங்கியிடம் கையளிக்கப்படும் கால்நடைகளைக் கொண்டே பால் சேகரிப்பு வங்கி ஆரம்பிக்கபட்டது. இந்தக்கால்நடைகளை உரிமையாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டால் அவற்றின் உணவுக்காக வங்கி செலவிட்ட பணத்தை அந்த உரிமையாளர்கள் வங்கிக்குக் கொடுக்க வேண்டும். உரிமையாளர்கள் வழக்கில் தோல்வியடைந்தால் அந்தக் கால்நடைகள் வங்கிக்குச் சொந்தமாகிவிடும். வங்கியிடம் தற்போது 400 கால்நடைகள் உள்ளன. கிராமத்தவர்கள் இவற்றில் பால் கறந்து பணம் சேகரிக்கலாமேயன்றி அவற்றை விற்கமுடியாது. இப்படி பசுக்களைப் பெற்றவர்கள் இந்த விதிமுறையை மதிக்காது நடப்பார்களேயாகில் அவர்கள் அபராதம் செலுத்த வேண்டிவரும்.

''நம் முன்னோர்கள் கையாண்ட சாதாரணமான வழிமுறைகள் சிலவற்றை இந்த பௌத்தமதகுரு நடைமுறைப்படுத்தியுள்ளார்'' என தந்திரிமலையிலுள்ள படைய பாசறையின் பொறுப்பதிகாரியான லெப்ரினன்ட் கேணல் செல்ரன் கனேகொட அவர்கள் கூறினார்.

விவசாயத்தை மேற்கொள்ளுவதற்காக 47 கிணறுகளையும் 500 மலசலகூடங்களையும் 1 . 5 மில்லியன் ரூபாய் செலவில் கட்டுவதற்கு அகில உலகிலும் வாழும் குழந்தைகளின் அவசர தேவைக்காக ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்படுத்தப்பட்ட நிதியம் ஏற்றுக்கொண்டுள்ளது. தங்களை விளம்பரப்படுத்தாத வேறுபல அரச சார்பற்ற நிறுவனங்களும் பல நன்மைகளைச் செய்து வருகின்றன. ''எங்களுக்கு விளம்பரம் தேவையில்லை. போதுமான நிதிவசதி எங்களிடம் உண்டு'' என இந்தப் பௌத்த குருவுக்குப் பாரிய உதவியை வழங்கிவரும் அரச சார்பற்ற நிறுவனத்தின் மேலாளர் ஒருவர் கூறினார்.

அச்சம்தரும் தந்தங்களையுடைய யானைகளும், கன்றுகளும் சுற்றித்திரியும் உபதிசகம சிற்றூரில் சுமார் 50 வீடுகளைக் கட்டுவதற்கு கடன் வழங்கப்பட்ட சிற்றூர் மக்கள் அந்த வீடுகளைக் கட்டுவதில் ஈடுபட்டுள்ளனர். மிகுதிக் கடனை வழங்குவதில் சிறு தாமதம் ஏற்பட்டுள்ளதாகச் சிற்றூர்வாசி ஒருவர் கூறினார்.

பல சிற்றூர்களிலுள்ள குடிசைகளை, மாலையிடப்பட்ட மறைந்த சனாதிபதி ரணசிங்க பிரேமதாசா, வணக்கத்துக்குரிய விமலஞானதேரர் மற்றும் லெப்ரினன்ட் ஜெனரல் கொப்பேகடுவா ஆகியோரின் நிழற்படங்கள் அலங்கரிக்கின்றன. சில குடிசைகளில் இந்தப் படங்களுக்கு முன் பூத்தட்டுகள்வைக்கப்பட்டுள்ளன.

"அவர்களே எங்கள் வணக்கத்துக்குரியவர்கள், காவலர்கள். அவர்களுக்கு நாம் என்றும் நன்றிக்கடன் செலுத்தவேண்டியவர்களாயிருக்கின்றோம்." என ஐந்து பிள்ளைகளின் தந்தையும், ஏழைச் சிற்றூர்வாசியுமான கே. கே. கிரியா என்பவர் கூறினார்.

வனவிலங்குகளையும், தாவரங்களையும் காப்பதன் முக்கியத்துவத்தை படையினர் சிற்றூர் மக்களுக்கு உணர்த்திவருகின்றார். "சூழலைக்காப்பதன் அவசியம் பற்றி அவர்களுக்கு நாம் இடைவிடாது அறிவுறுத்தி வருகின்றோம்' என லெப்ரினன்ட் கேணல் கனேகொட அவர்கள் கூறினார்.

தந்திரிமலையிலுள்ள பல சிற்றூர் மக்கள் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தில் இருந்தவேளையிலும் தங்கள் இருப்பிடத்தைவிட்டு நீங்காது படையினருடனும், இந்த பௌத்த குருவுடனும் சிற்றூரிலேயே தங்கியிருந்தனர்.

"சில மீற்றர் தொலைவில் விடுதலைப்புலிகள் இரு திங்களுக்கு முன் நிலைகொண்டிருந்தபோதிலும் நாங்கள் இவ்விடத்தைவிட்டு ஓடவில்லை. நாங்கள் பதுங்கு குழிகளில் எங்கள் பிள்ளைகளுடன் இருந்தபோது படையினர் எங்களுக்கு வேண்டிய காப்பை வழங்கினர்" என நாமல்வேவாவில் வாழ்ந்துவரும் கே. சிறியாவதி என்பவர் கூறினார் "ஐந்காண்டுக் காலமாக விடுதலைப்புலிகளை மிகவும் துணிவுடன் எதிர்கொண்ட நாம், எங்கள் எஞ்சிய வாழ்நாளையும் அப்படியே கழிப்போம்" என மேலும் கூறிய அவர் தனது முகத்தில் அந்த உறுதியை வெளிப்படுத்தினார்.

தங்கள் கூடுதலான நேரத்தை மரங்களின் கீழும், குகைகளிலும், கூடாரத்திலும் கழிக்கும் படைவீரர்களுக்குத் துணிவை ஏற்படுத்தும் ஆற்றலாக இந்த சிற்றூர் மக்கள் விளங்குவதாக படைய மேலாளர் ஒருவர் கூறினார்.

# மட்டக்களப்பு பாரம்பரியங்களின் மிளிர்ச்சித் தொகுப்பில் கண்ணகி வணக்கம் . . .

- க. தங்கேசுவரி (வீரகேசரி - 26. 06. 93)

சிந்துவெளிக் காலத்திலிருந்து சிறந்து விளங்கிய தாய் தெய்வ வழிபாடு சிலப்பதிகாரக் காலத்திலிருந்து 'பத்தினி வழிபாடு' என்ற பண்பிணைப் பெற்று, கற்புக்கரசியாம் கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டு இன்றுவரை வேரூன்றி வளர்ந்துள்ளது. கண்ணகி வழிபாட்டை ஈழநாட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தவன், இலங்கை அரசன் கஜவாகு வேந்தன். ஆனால் அது இன்றும் நிலைத்து நிற்பது ஈழத்தின் தமிழ்ப்பிரதேசங்களில்தான். அதிலும் பத்தினி வழிபாடும், அதன் பாரம்பரியங்களும் சிறப்புப் பெற்று வேரூன்றி நிற்பதோ கிழக்கிலங்கையிலேதான்.

பத்தினி வழிபாட்டுடன் தொடர்புறும் பாரம்பரியங்களான கொம்புமுறி, கொடும்பாவி எரித்தல், குரவைக்கூத்து, மழைக் காவியம், வசந்தன் கூத்து, கோலாட்டம் போன்றவை பண்டு தொட்டு இன்று வரை பேணப்பட்டுவரும் கிராமியக்கலைகளாகும். பாரம்பரியக் கலைகளில் சிறப்பானதும் குறிப்பிடத்தக்கதுமான 'கலையாடல்' கொம்புமுறி ஆகும். இது சிலப்பதிகாரக் காலத்திலிருந்து சிறந்து விளங்கிய ஒரு சமயக் கலையாடல் ஆகவும், கண்ணகி வழிபாட்டுடன் தொடர்படும் விளையாட்டாகவும் அமைந்துள்ளது.

சோழ நாட்டில் பிறந்து, பாண்டி நாட்டில் செங்கோல் தவறிய மன்னனைப் பழிவாங்கியும், மதுரை நகரைத் தீக்கிரையாக்கியும் கோபம் தணியாத கண்ணகியின் உக்கிரத்தைக் குளிர்விக்கும் பொருட்டு இடைக்குல இளைஞர்கள் இதனை ஒரு விளையாட்டாக நடத்தினர் என "சிலப்பதிகாரம்" கூறுகிறது.

கண்ணகி வழிபாடு இடம்பெறும் கிராமங்களில் எல்லாம் கொம்புமுறி விளையாட்டும் இடம் பெற்று வந்திருப்பதை மரபு வழியாகவும் இலக்கியங்கள் மூலமாகவும் அறியமுடிகிறது. வரட்சிக் காலத்தில் மழைவேண்டி நடைபெறும் இவ்விளையாட்டு கண்ணகி வழிபாடு நடைபெறும் கிராமங்களில் பெரும்பாலானவற்றில் அருகிவிட்டது. கிழக்கிலங்கையில் தெற்கே திருக்கோவில் முதல் வடக்கே வாகரை வரை உள்ள எல்லாத் தமிழ்க்கிராமங்களிலும் கண்ணகி வழிபாடு இடம்பெறுகிறது எனலாம். இக்கிராமங்களில் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புறும் பாரம்பரியங்களும் வேரூன்றி இருந்து வந்துள்ளன.

கொம்பு விளையாட்டு தொடங்குவதற்கு முன்னர், கிராம மக்கள் இருபிரிவாகப் பிரிந்து கொள்வர். இப்பிரிவுகளை 'வடசேரி', 'தென்சேரி' என அழைப்பர். வடசேரி கோவலன் கட்சி எனவும் தென்சேரி கண்ணகிகட்சி எனவும் கருதப்படும். இவ்வுரிமை தாய்வழி இல்லாது தகப்பன் வழியாகத் தொடரும். இது கவனத்துக்குரிய ஒரு சங்கதி. கிழக்கிலங்கைக் கிராமங்களில் 'வகுத்துவார்' எனப்படும் தாய்வழி உரிமை பேணப்படுவது மரபு. ஆனால் கொம்பு விளையாட்டுக்கு மட்டும் தகப்பன் வழி உரிமை பேணப்படுவது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. இது பாண்டி நாட்டு வழக்கையும் அதனால் ஏற்பட்ட தொடர்புகளையும் நினைவுறுத்துகின்றன. மேற்குறித்த 'சேரி' என்னும் பிரிவு 'வாரம்' எனவும் அழைக்கப்படும். இப்பகுப்பில் கணவன் ஒரு பிரிவிலும் மனைவி ஒரு பிரிவிலும் இடம் பெறும்போது அதனால் ஏற்படும் போட்டியும் வாக்குவாதமும் சமயற் கட்டுவரை எதிரொலிக்குமாம்.

கொம்பு விளையாட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மரக்கொம்புகள் மிகவும் வலுவான மரங்களிலிருந்து எடுக்கப்படும். இவை பெரும்பாலும் நன்கு உறுதி வாய்ந்த கரையாக்கன் மரத்தின் வேர்ப்பகுதியில் இருந்து பெறப்படும். இம்மரத்தின் இலக்கியப் பெயர் 'கருவீரம்', 'வெட்சி' என்பதாகும். இதில் கொம்பின் தலைப்பகுதி வேராகவும், உடற்பகுதி மரமாகவும் அமைந்திருக்கும். அதற்கேற்ப மரத்தைத் தெரிவு செய்து கொம்பு வெட்டி எடுக்கப்படும். முன்பு குறிப்பிட்டபடி வடசேரிக் கொம்பு கோவலனுக்குரியது. தென்சேரிக் கொம்பு கண்ணகிக்குரியது. வடசேரிக் கொம்பு 90 பாகை செங்கோணமுடையதாகவும், தென்சேரிக் கொம்பு அதைவிடச் சற்றுக் குறைந்த கோணம் உடையதாகவும் அமைந்திருக்கும். இக்கொம்புகளை "பில்லி" எனப்படும் குறுந்தடியுடன் இணைத்துப் புரிகளினால் (காட்டுக்

கொடி) வரிந்து கட்டுவர். இப்படி வரிந்து கட்டப்படும் கொம்புகள் பனிச்சரிகாய் பசைபூசிக் காயவிடப்படும். கொம்பின் இரு புறமும் இரு பில்லிகள் இணைத்துக் கட்டப்படும். பில்லி கட்டப்பட்ட கொம்புகள், கொம்பு விளையாட்டுக்குத் தயார் நிலை பெறும். பில்லி வரியும்போது மந்திர உச்சாடனங்கள் செய்வதும் உண்டு.

ஒரு மரத்தில் பூட்டிய 'அரிப்பு' (சிறுவடம்) எனும் கயிற்றில் தென்சேரிக் கொம்பு தொங்கவிடப்படும். அக்கொம்பில் கொழுவிய வடசேரிக் கொம்பில் இன்னொரு வடத்தினைப் பிணைத்துப் பெரிய வடம் ஒன்றை மாட்டுவர். அவ்வடத்தினைப் பற்றி பலர் இழுக்கும்போது இருசேரியையும் சேர்ந்த சிலர் தத்தம் கொம்புகளில் ''பல்வாய்" (கொம்பின் தலைப்பகுதி) ''குச்சு'' (கொம்பின் வளைவு) ''பில்லி'' (கொம்பின் இருபுறமும் அணைத்துக் கட்டிய தடிகள்) ''முதுகு'' (கொம்பின் தலைப்புப் பகுதி) ஆகிய பகுதிகளை முறைப்படி பிடித்துக்கொள்வர்.

ஒரு ஊரில் கொம்பு விளையாட்டு நடத்த வேண்டும் என்று ஊர் கூடித் தீர்மானம் செய்த பின்னர் முதற் கட்டமாக கொம்புகளை எடுத்துப் பிரார்த்தனை செய்து தேங்காய் அடித்து ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்வர். அதன்பின் இரு 'சேரி'களுக்கும் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 'போர்த்தேங்காய்' அடிக்கும் விளையாட்டு இடம்பெறும். ஒரு பகுதியினரால் உருட்டப்படும் தேங்காய்களை மறுபகுதியில் உள்ள ஒருவர் தமது கையில் உள்ள வலுவுள்ள தேங்காயின் கூர்ப்பகுதியினால் ஒவ்வொன்றாக உடைப்பார். அதேபோன்று மற்றப்பகுதியினர் உருட்டிவிடும் தேங்காய்களை எதிர்ப்பகுதியில் உள்ள ஒருவர் தனது போர் தேங்காயினால் உடைப்பார். அதிகமான தேங்காய்களை உடைத்த பகுதியினர் வெற்றிபெற்றவராவர்.

அவர் முதற்குறியாக ஒரு கொம்பை முறித்து கொம்பு விளையாட்டை ஆரம்பித்து வைப்பார். முதல் முதல் உடைக்கும் தேங்காயிலும் போர்த்தேங்காய் உடைத்தபின் முறிக்கும் முதற் கொம்பிலும் அம்மனின் தென்சேரிக்கே வெற்றி கொடுத்தல் மரபாகும்.

இக்கொம்புகள் பலவகைப்படும். கொழுக்கொம்பு, கொம்புத் தட்டு கொம்பு, கூடாரக் கொம்பு, ஏடகக் கொம்பு, தண்ணீர்க் கொம்பு என்பன அவற்றுட் சிலவாகும். இவைகள் முறையே ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது எனப் பதிவேழு இணைக் கொம்புகள் பூட்டி இழுக்கப்படுதல் ஒரு விதிமுறையாகும்.

மேற்கண்டவாறு கொம்பு விளையாட்டுக்கு இருசேரியாரும் தயாரானதும் 'வாரம்பிரிதல்' இடம்பெறும். வடசேரியார் 'செவ்வாய்க்குற்றி' என ஒரு மரக்குற்றியைக் கொம்பு இழுக்கட்படும் இடத்திற்கு கொண்டு வருவார்கள். இப்படிக் கொண்டு வரும் போது ஊர்மக்கள் நிறைகுடம் வைத்து, நீர்தெளித்து வரவேற்பர். இம்மரக்குற்றி கொம்பு இழுக்கும்போது பயன்படும்.

மறைபொருளாகக் கொண்டு வரப்பட்ட கொம்புகள் சபையின் பார்வைக்கு வைக்கப்படும். கொம்புகள் நன்கு ஆராயப்பட்டு இரு கொம்புகளின் அரிப்புக்கயிறுகளும் இடையே மரக்கட்டைகளையும் சேர்த்து வரிந்துகட்டுவர். இம்மரக்கட்டை ''அடை'' என அழைக்கப்படும். இரு கொம்புகளின் அரிப்புக் கயிறுகளையும் இணைத்துக் கொம்புகளை முறைப்படி கொழுவியபின்னர், அவ்விடத்திலிருக்கும் ஒரு பெரிய மரத்தில் சுற்றிக் கட்டப்பட்ட மர வளையத்தினுள் தென்சேரிக் கொம்பின் அரிப்புக் கயிறு நுழைக்கப்படும். அதில் ''வடம்தாங்கி'' மாட்டப்படும். பின் இரு தரப்பினரும் செவ்வாய்க்குற்றியில் மாட்டப்படும் வடக்கயிற்றினைப் பிடித்து இழுப்பர். இப்படி இழுக்கும்போது இரண்டில் ஒரு கொம்பு முறியும். இப்படிக் கொம்பு முறிக்கப்பட்டதும், உடைந்த கொம்பின் ஏடகத்துக்குரிய முடியைக் கழற்றி அந்த ஏடகத்துக்குள் இருக்கும் விளக்கும் அணைக்கப்படும். வெற்றிக் கொம்பிற்கு மாலை அணிவித்து வீதி வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். அதனை மஞ்சள் நீராட்டி மக்கள் வரவேற்பர். அப்போது பாடப்படும் கொம்பு முறிப்பாடல்கள் சில வருமாறு:

1. ஆற்றோரம் போற மயில் - அது
   ஆண்மயிலோ பெண்மயிலோ
   பார்த்துவாடா வடசேரியான் - உனக்கு
   பாவற் பழம் போல் மாலை தாறேன்

2. ஆற்றோரம் சிறாம்பி கட்டி
   அங்கே நின்று வடமிழுத்து
   வேர்த்து வாரான் தென்சேரியான் - அவனை
   வெள்ளிமடல் கொண்டு வீசுங்கடி

3. வடசேரியான் கொம்பு எங்கே எங்கே?
   மணமுள்ள தாழையின் மேலே மேலே
   தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே?
   செம்பரப் பற்றைக்குக் கீழே கீழே

வடசேரிக் கொம்பு வெற்றிபெற்றால் வேளாண்மை விளைச்சல் அதிகரிக்கும் என்றும், தென்சேரிக் கொம்பு வெற்றிபெற்றால், கொடிய நோய்கள் பரவாது நீங்கப்பெறும் என்றும் நம்பிக்கை நிலவுகிறது. எந்தக் கொம்பு வெற்றிபெற்றாலும், இறுதியில் புதுப்பானையில் பால் பொங்கி, பூசை செய்யும் போது மஞ்சள் தேறினால் ஆன இரு கொம்புகளை எடுத்து உடைத்து தென்சேரிக்கு வெற்றி கொடுப்பது வழக்கிலுள்ளது. இதனால் கண்ணகி அம்மன் கோபம் நீங்கி குளிர்ச்சி அடைவாள் என்பது மக்களின் நம்பிக்கை. இவ்விளையாட்டுக்கள் எல்லாம் கண்ணகி அம்மன் குளிர்த்திக்கு முன்னர் நடைபெறும். கண்ணகி அம்மன் கோயில் குளிர்த்தி ஆடல் நிகழ்ச்சியுடன் சகல அனுஷ்டானங்களும் நிறைவெய்தும்.

ஏடகம்!

ஒவ்வொரு நாளும் இரவு தோறும் இரு கட்சியினருக்கும் பொதுவான ''ஏடகம்'' எனப்படும் சிறிய தேர்களில் கொம்புகளை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வர். இத்தேர் பலவர்ணச் சேலைகளாலும் பூக்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஊர்வலம் மாலை நேரத்தில் இடம்பெறும். ஊர்வலம் செல்லும் போது ''உடுகுச் சிந்து'', ''ஊர் சுற்றுக்காவியம்'' முதலிய அம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய காவியங்களைப் பாடிச்செல்வர். "வசந்தன்கூத்து" ஆடி அம்மன் புகழ் பாடுவதும் கொம்புமுறிப்பாடல்களைப் பாடி மகிழ்வதும் இடம் பெறும். இவ்வைபவம் ஏழு நாட்கள் நடைபெறும்.

இறுதியாக நடைபெறும் ''ஏடகக் கொம்புமுறி'' நிகழ்ச்சியில் இரு கட்சியாரும் ஒன்றிணைந்து மிகவும் பயபக்தியுடன் ஈடுபடுவர். ஏடகக் கொம்புகள், முந்திய கொம்புகளை விட இரு மடங்கு குறையாத பருமனுடையது. இந்த ஏடக மரங்களை முறிக்க ஊர்மக்களே ஒன்று கூடி வடம் இழுத்துச் செல்வதுண்டு. இரு சேரியாரும் இதற்கு இரு தேர் கட்டுவர். இதில் தென் சேரி ஏடகத்தைவிட வடசேரி ஏடகம் சற்று உயரமாக அமைய வேண்டும். இத் தேர்களை வைக்கும் கூடம் தேர்ப்புரை எனப்படும். ஏடகக் கொம்புகளை வைத்துப் பூசை செய்யும் தேரும் ஏடகம் என்றே அழைக்கப்படும்.

பூசைசெய்தபின்னர், ஏடகங்களை வடத்திற்பூட்டி இழுத்துச் செல்வர். இந்தக் கொம்புமுறியில் இடம் பெறும் கொம்பு சாதாரண மரக்கொம்பாக இருந்த போதும், இந்தக் கொம்பு

முறி விளையாட்டின் வெற்றி தோல்வியில் மக்கள் காட்டும் உற்சாகமும் உணர்ச்சி வசப்படுதலும் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத ஒன்று. இக்காலத்தில் ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்றதுபோல் அல்லது சர்வதேச கிரிக்கட் போட்டியில் ''ஆஷ்'' (சாம்பல்) பெற்றது போன்ற பெருமையையும் பெரு மிதமும் இக்கொம்புமுறி வெற்றியிலேயே ஏற்படுவதுண்டு.

ஏடகக் கொம்புமுறியின் கடைசி நாளன்று ''தண்ணீர்க் கொம்பு முறி'' இடம்பெறும். கண்ணகி அம்மன்பேரால் இக்கொம்பு முறி இடம்பெறுவதால் இதற்கு முன் இரு கட்சியாக நின்று ஏட்டிக்குப் போட்டியாக கொம்பு முறியில் ஈடுபட்டு வசைப் பாடல்கள் பாடி இரு பிரிவாக நின்ற மக்கள் அனைவரும் தண்ணீர்க்கொம்பு முறியில் ஒன்று கூடி ஒற்றுமைப்பட்டு விடுவர். இக்கொம்புமுறி கண்ணகி அம்மனுக்கு (தென்சேரி) வெற்றியாக முறிக்கப்படும். அதன் பின்னர் வட சேரித்தேர் அதற்குரிய தெரு விலும் தென் சேரித்தேர் அதற்குரிய தெருவிலும் இழுத்துச் செல்லப்பட்டு இறுதியில் இவை ஒரு பொது இடத்தில் சந்திக்கும். அதன்பின் இருதேர்களும், ஒன்றாகத் தம் புரைகளை நோக்கிச் செல்லும். இத் தேர்களின் ஊர்வலம் நிறைவெய்திய மறுநாள் கண்ணகிஅம்மன் குளிர்த்தி நடைபெறும்.

கண்ணகி காலத்தில் இடையர் குலத்தில் நடை பெற்ற விளையாட்டுக்களை நினைவுகூர்ந்து கண்ணகி அம்மனைக் குளிர்விப்பதுடன் இருகட்சி, சேரி, வாரம், வசைப்பாடல் எல்லாம் ஊரில் ஊர்மக்கள் தம்முள் உண்மையாக ஏற்பட்டுள்ள கோப தாபங்களை மறந்து கண்ணகி அம்மன் குளிர்த்தியுடன் ஒற்றுமைப் படவேண்டும் என்பதும் இவ் விளையாட்டின் உட்பொருளாக அமைந்திருப்பதைக் காணலாம்.

---

தெரிந்ததைத் தெரியுமென்றும், தெரியாததைத் தெரியா தென்றும் கூறுவதுதான் அறிவு.

— கன்பசியசு.

# போர்க் கைதிகளான காவல்துறையினர் மூலம் விடுதலைப் புலிகள் தங்கள் புகழை நிலைநாட்ட முயலுகின்றனர்.

(சண்டே ரைம்சு - 27. 6. 93 - காப்புச் செய்தியாளர்)

யூன் திங்கள் 15-ம் நாளில், வில்பத்துக் காடுகளின் எல்லைகளுக்கு, அப்பாலுள்ளதும், செட்டிகுளத்திற்கு அண்மையாகவுள்ளதுமான கந்தசாமி நகர் என்ற சிற்றூரின் பத்தொன்பது குடும்பங்களைச் சேர்ந்த 65 ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், அடுத்த இரு நாட்களில் முறையே 68 பேரும், 11 பேரும் கூட்டம் கூட்டமாக காப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் குடியமர விரும்புவதாகத் தெரிவித்துக் கொண்டுவந்தனர். அவர்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் தாங்கள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடவரவில்லை என்பதை வெளிக்காட்டும் வகையில் சோதனைச் சாவடிகளை அண்மித்தபோது தடிகளில் சுற்றிய வெள்ளை நிறத்துணிகளைத் தங்கள் தலைக்கு மேலாக உயர்த்திப் பிடித்தவண்ணம் வந்துள்ளனர். வவுனியாவுக்கு வடக்கே முன்னணிப் பகுதியிலுள்ள படையினரின் சோதனைச் சாவடிகளிலிருந்து கிடைத்த இச் செய்தியை வன்னியிலுள்ள படைப்பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள பிரிகேடியர் தேவிந்த களுபகான அவர்களால் நம்பமுடியவில்லை.

படையினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறு பிரிகேடியர் களுபகான தனது படைவீரர்களுக்குப் பணித்தார். அவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்ததாகவும், காப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில், குறிப்பாக வவுனியாவிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் வாழ்க்கைத் தரம் சிறப்பாக இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

படையினரால் விசாரிக்கப்பட்ட இந்த ஒவ்வொருவரும், உணவு மற்றும் எரிபொருள் உட்பட அத்தியாவசிய நுகர் பொருட்கள் கிடைக்காமையே தங்களுக்குள்ள பாரிய சிக்கல் எனத் தெரிவித்துள்ளனர். அத்துடன் தங்கள் ஊதியத்திலிருந்து குறிப்பிட்ட தொகை ஒன்றை விடுதலைப் புலிகளுக்கு வரியாக செலுத்தவேண்டியிருந்தது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

காப்புப் படையினரிடம் அடைக்கலம் கோரிய இந்த 151 பேர்களும் ஏதிலிகள் தங்ககங்களில் தங்க வைக்கப்பட்டுப் பங்கீட்டுப் பொருட்களை ஒழுங்காகப் பெற்றுவருகின்றனர். கந்தசாமி நகர் மற்றும் அதைச் சூழவுள்ள பகுதிகளில் வாழும் ஏனைய பொதுமக்களும், அவர்களைப் பின்தொடர்ந்து செல்லவிருந்த போதிலும், விடுதலைப் புலிகளால் அவர்கள் தடுக்கப்பட்டனர். அந்த 151 பேரும் தப்பியோடிய செய்தியை அறிந்த விடுதலைப் புலிகள் சிற்றாரை விட்டுச் செல்பவர்கள் கொல்லப்படுவர் என எச்சரித்ததை அடுத்து மற்றையோர் செல்லாது நின்றுவிட்டனர் இது பிரிகேடியர் களுபகான அவர்களுக்குப் பெரும்ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

### உணர்ச்சிகரமான காட்சிகள்.

எப்படியான கடினமான வாழ்க்கையை யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்கள் வாழ்கின்றார்கள் என்ற உண்மையை அனுராதபுரத்தில் தனது தலைமையகத்தைக்கொண்ட கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் அறிந்துகொள்ள முன்னெப்போதும் இடம்பெறாத அந்த நிகழ்ச்சி உதவியது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து தப்பியோடியவர்கள் கூறியிருப்பதுபோல பொதுமக்களின் கோபம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மாறிவருகின்றது.

இந்தச் சம்பவம் இதற்குப் போதிய சான்றாக இல்லாதுவிடின் ஒரு வாரத்திற்குப் பின் நடைபெற்ற வேறு ஒரு சம்பவம் இதற்குச் சான்றாகவிருப்பதுடன், விடயங்களை உரியமுறையில் கையாளாது விடின் அவை அதிக சிக்கல்களை உருவாக்கக் கூடிய நிலையைத் தோற்றுவிக்கும் என்பதையும் உணர்த்துகின்றது. விடுதலைப் புலிகளால் சென்ற மூன்று ஆண்டுகளாகப் பணயக் கைதிகளாக வைத்திருக்கப்படும் 38 காவல்துறையினரையும், படைய சார்ஜன்ற் ஒருவரையும் வீடுவிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே அந்த நிகழ்ச்சியாகும்.

பணயக்கைதிகள் தங்களை விடுவிக்கக்கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக எழுதிய கடிதங்களை அவர்கள் பெற்றோர்களும், உறவினர்களும் பெற ஆரம்பித்ததைத் தொடர்ந்தே இந்நிகழ்ச்சி தொடங்கியது. இலங்கையிலிருந்து இந்திய அமைதிகாக்கும் படையினர் வெளியேறவேண்டுமென்ற தங்கள் பொதுவான குறிக்கோளை அடைந்ததன்பின் 14 திங்களாக சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஆரம்பித்த இரண்டாவது ஈழப்போரின் ஆரம்பத்தில் கைதுசெய்யப்பட்ட இவர்களின் கைதுசெய்யப்பட்ட மூன்றாவது ஆண்டு நினைவுதினமான யூன் திங்கள் 13-ம் நாள் அந்த உண்ணாவிரதம் ஆரம்பமாக இருந்தது.

இந்த விடயத்தைப் பற்றிப் பணயக்கைதிகளின் பெற்றோர் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்க மேலாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது அவர்கள் பணயக்கைதிகளைச் சந்தித்து அப்படிச் செய்யவேண்டாம் எனக் கோரினர். இருப்பினும் அவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதாகக் கொழும்புக்குச் செய்தி எட்டியது.

அதன்பின் அவர்களின் பெற்றோர்களும், உறவினர்களும் வெவ்வேறு மதத்தைச் சார்ந்த இரு குருமார்களின் கவனத்திற்த இந்தவிடயத்தைக் கொண்டுவந்தார்கள். அத்துடன் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் மேலாளர்களிடம் மீண்டும் சென்ற அவர்கள், சங்கம் இதில் தலையிட வேண்டுமெனக் கோரினர். பணயக் கைதிகளைப் பார்வையிடுவதற்குத் தாங்கள் கூட்டிச் செல்லப்படாவிடின் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாகச் சிலர் பயமுறுத்தினர்.

பணயக்கைதிகளின் குடும்பங்களை ஒன்றிணைப்பதற்காக அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்ற கட்டாய நிலையை இது உருவாக்கியது. அவர்கள் திட்டங்களை வகுத்துக்கொண்டிருந்தபோது, ஒரு பணயக்கைதியைப் பார்வையிட குடும்பத்தில் இருவர் மாத்திரம் அனுமதிக்கப்படுவரென அவர்களின் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

ஜெனிவாவிலுள்ள அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலகத்திலிருந்து இரு மேலாளர்கள் கொழும்புக்கு வந்

தைத் தொடர்ந்து பணயக்கைதிகளின் குடும்பங்கள் ஒன்று சேரும் தினம் வெள்ளிக்கிழமை யூன் திங்கள் 19-ம் நாள் எனத் தீர்மானிக்கப்பட்டது. பணயக்கைதிகளைப் பார்வையிடச் செல்பவர்களைத் தெரிவுசெய்யும்பொழுது அவர்களின் தாய், தந்தையர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. பிரயாணம்செய்ய அவர்கள் விரும்பாவிடில் அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட இருவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பெற்றோர்களுடனும், உறவினர்களுடனும் கைதிகள் மூவரின் பெண் சினேகிதிகளும் பிரயாணம் செய்ய ஏற்பாடாகியிருந்தது. கைதியாகப் பிடிக்கப்படமுன் அவர்களில் ஒருவர் காவல்துறையைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்யத்தீர்மானித்திருந்தார்.

பணயக்கைதிகள் யாவரும் ஒரு நாளிலேயே விடுவிக்கப்பட்டு தங்கள் குடும்பங்களுடன் இணைந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்பட்டது. பிரயாணத்தை மேற்கொள்ளவிருந்தவர்கள் செய்யவேண்டியது என்னவென்பது பற்றியும், செய்பத்தகாதவை என்னவென்பது பற்றியும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

பணயக்கைதிகளின் உறவினர்கள் 78 பேரும், இந்தக் குழுவுக்கு இணைப்பாளராகச் செயற்பட்ட திருமதி எலிசபெத் ரீவிச் அவர்களும், சுவிற்சலாந்திலுள்ள அனைத்துலக செஞ்சிலுவைச் சங்க செயலகத்திலுமுள்ள இரண்டு மேலாளர்களும், கொழும்பிலுள்ள அனைத்துலக செஞ்சிலுவைச்சங்கப் பணிமனையிலுள்ள இருவரும், செயலாளர் ஒருவரும், மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் கப்பல் மூலம் வந்ததன்பின் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தரைமார்க்கமாக வந்துசேர்ந்த குழுவில் அடங்குவர்.

பணயக்கைதிகள் தங்கள் உறவினர்களைக் கட்டியணைத்து முத்தமிட்ட காட்சி உள்ளத்தை உருகச் செய்வதாகவிருந்தது. யாழ்ப்பாணத்திற்கு முதன்முதலாக வருகை தந்த இந்த உறவினர்களின் உள்ளங்களைக் கவரத்தக்கவகையில் விடுதலைப்புலிகள் நடந்துகொண்டனர். அவர்களுக்குச் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. முதல் நாள் புரியாணி வழங்கப்பட்டதுடன் குளிர்பானங்களும், சிற்றுண்டிகளும் தாராளமாக வழங்கப்பட்டது.

உணர்ச்சிகள் உச்சக்கட்டத்தை அடைந்தபோதுதாங்கள்காண வந்த கைதிகள் இல்லாது கொழும்பு திரும்பப் போவதில்லை எனச் சில உறவினர்கள் கூறினர். தங்களை விடுதலைப்புலிகள் தங்க வைத்திருக்கும் சுபாஸ் விடுதியில் சாகும்வரை உண்ணா விரதம் ஒன்றை மேற்கொள்ளப்போவதாக இதில் உறுதியாக விருந்த சிலர் அச்சுறுத்தினர். ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டையிலிருந்து பார்க்கக்கூடிய தொலைவிலுள்ளதும், ஒரு காலத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததுமாயிருந்த இந்தவிடுதி, கோட்டையில் படையினர் நிலைகொண்டிருந்தபோது கைவிடப் பட்டிருந்தது. பீரங்கிகளிலிருந்து ஏவப்பட்ட குண்டுகளினால் ஏற்பட்ட அடையாளங்கள் இதன் சுவர்களில் காணப்பட்டன. இருப்பினும் இந்தப்பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற் குள் வந்ததைத் தொடர்ந்து அதன் கட்டிடம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது.

அரசாங்கத்தைத் தங்கள் பால் ஈர்ப்பதற்கு உணர்ச்சிகர மாக நடைபெற்ற ஒன்றுகூடலை விடுதலைப்புலிகள் பயன்படுத் திக் கொண்டனர். 39 பணயக் கைதிகளையும் நிபந்தனை எதுவு மின்றி விடுவதாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் மூலம் தெரியப்படுத்திய விடுதலைப்புலிகள், தாங்கள் அப்படி விடுபவர் களைப் பொறுப்பேற்றுக் கொழும்புக்குக் கூட்டிச் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள அரசாங்கப் பிரதிநிதி ஒருவர் யாழ்ப் பாணத்திற்கு வரவேண்டுமென அழைப்பு விடுத்தனர்.

பணயக்கைதிகளை அவர்களுடைய உறவினர்களுடன் ஒன்று சேர்ப்பதைப் பற்றியும், அவர்களை விடுவிப்பதற்கான வாய்ப் புக்களைப் பற்றியும் அனைத்துலக செஞ்சிலுவைச்சங்க மேலா ளர்கள் பேச்சு நடத்தியபோது விடுதலைப்புலிகள் கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கும், அவர்கள் தற்போது அனுப்பிய செய்திக்கும் இடையே பெரும் முரண்பாடு இருப்பதைக் காணக்கூடிய தாகவிருந்தது. அரசாங்கத்தால் சிறைவைக்கப்பட்டிருக்கும் தங்கள் உறுப்பினர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியலை விடுதலைப்புலிகள் கோரியபோது, 60 பெயர்களைக்கொண்ட பட்டியல் ஒன்றைக் கூட்டுப்படைத் தலைமையக மேலாளர்கள் வழங்கியிருந்தனர். விடுதலைப்புலிகள் விடுவிக்கும் பணயக்கைதி களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையானோரை அர சாங்கம் விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது. விரும்பத்தகாத சிக்கல்கள் எதையும் இது தோற்று விக்குமாகில், பட்டியலிலுள்ள 60 பேரையும் விடுதலை செய்யக்

கூட்டுப்படைத் தலைமையக மேலாளர்கள் தயாராகவிருந்தனர். சிறைவைக்கப்பட்டிருக்கும் அனைவரது பெயர்களைக் கொண்ட பட்டியல் ஒன்றை விடுதலைப் புலிகள் கோரியபோது அந்தக் கோரிக்கையை ஏற்கக் கூட்டுப்படைத் தலைமையகத்தால் முடிய வில்லை தங்கள் முக்கியஉறுப்பினர்கள் எவரேனும் சிறையிலுள்ள ளார்களா என்பதை அறிந்துகொள்வதற்கு விடுதலைப்புலிகள் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகக் கூட்டுப்படைத் தலைமை யகத்தால் அறியமுடிந்தது.

இது நடந்துகொண்டிருந்தவேளையில் பணயக் கைதிகள் அனைவரையும் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் விரும்புவதாகச் செய்தி கிடைத்தது. இந்தத் திடீர் மனமாற்றமும் எவரும் எதிர்பாராத நல்லெண்ணச் சமிக்கை யும் ஏன் ஏற்பட்டதெனக் காப்பு மூத்த மேலாளர்கள் சிலர் எண்ணிப்பார்த்தனர். சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான லலித் அத்துலத்முதலி அவர்களையும், முன்னாள் சனாதிபதி இரணசிங்க பிரேமதாசா அவர்களையும் கொன்ற தாகக் குற்றச்சாட்டப்பட்டு தென் இலங்கையில் தங்கள் செல் வாக்கை இழந்த விடுதலைப்புலிகள் அந்தச் செல்வாக்கை மீண் டும் பெறுவதற்காகவே இப்படியான நடவடிக்கையை மேற் கொள்வதாக விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட யோசனை உண்மையானது எனக்கருதிய ஒருவர் கூறினார். பலவீனமுற்றி ருக்கும் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தாங்கள் தயார் என்பதைத் தெரியப்படுத்தவே இப்படியான நடவடிக் கையை மேற்கொண்டதாக வேறுசிலர் கருதினர்.

இந்தச்செய்தி மூலம் குறுகிய காலத்திற்கே காப்பு மேலா ளர்கள் மனநிறைவு பெற்றிருந்தனர். படையத்தின் மூத்த மேலா ளரும், புனர்வாழ்வு பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருப் பவருமான பிரிகேடியர் ஆனந்தா வீரசேகரா அவர்களை கூட் டுப்படை நடவடிக்கைக்குப் பொறுப்பான தலைமையகம் யாழ்ப் பாணத்திற்கு அனுப்பி வைத்தது.

நன்கு மதிக்கப்படுபவரும், யாழ்ப்பாணத்தின் முன்னாள் படையத்தளபதியாக விளங்கியவரும், யாழ்ப்பாணத்தைப்பற்றி நீண்ட பட்டறிவை உடையவருமான பிரிகேடியர் வீரசேகரா அவர்கள் மூன்று படைவீரர்களை விடுவிப்பதற்காகத் தீவிரவாதி களின் கட்டுப்பாட்டிலிருந்த குடாநாட்டிற்குள் 1986ம் ஆண்டு சென்றிருந்தார். அப்போது அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள படை களுக்கு தளபதியாக இருந்தார். தன் சொல் வன்மையாலும்,

செயலாற்றலாலும் விடுதலைப் புலிகளைத் தூண்டி நல்ல பெறு பேற்றை எட்டக்கூடிய படைத்துறை சாராத அரச மேலாளர் ஒருவரை விடுத்து படைய மேலாளராகக் கடமையாற்றும் ஒருவர் ஏன் அனுப்பப்பட்டார் என்பது விளங்கவில்லை.

பிரிகேடியர் வீரசேகரா அவர்களை விடுதலைப்புலிகள் வரவேற்ற பின்பும், விடுதலைப் புலிகளின் செய்தித் தாளாகிய ஈழநாதத்தைச் சேர்ந்தோர் அந்தநிகழ்ச்சியைப் படம் எடுத்தபின்பும், பிரிகேடியர் வீரசேகரா விடுதலைப்புலிகளால் யாழ்ப்பாண நகரிலுள்ள ஒரு கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் திரு. பிரபாகரன் அவர்களின் பிரதம ஆலோசகராகவும், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராகவும் விளங்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களான 'தினேஸ்' மற்றும் 'தமிழ்ச்செல்வன்' ஆகியோரும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

வரையறுக்கப்படாத கால எல்லை.

பணயக்கைதிகள் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்ற கவலைதரும் செய்தியை பிரிகேடியர் வீரசேகரா இங்கே கேட்டார். "இது மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட தவறென்றும், அதனாலேயே தப்பபிப்பிராயம் ஏற்பட்டதென்றும் விளக்கக்கூறிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு முன்னதாக நிறைவேற்றப் படவேண்டிய புதுக் கோரிக்கைகளை முன்வைக்க ஆரம்பித்தார். இந்த விடயத்தை பிரிகேடியர் வீரசேகரா காப்புச் செயலாளர் வால்ரர் பெர்னாந்து அவர்களுக்கு உடனே அறிவித்தார்.

விடுதலைப் புலிகள் வேண்டிக்கொண்டபடி பணயக்கைதிகளைப் பொறுப்பேற்கவும், அவர்களுடைய பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்வதற்காகவுமே பிரிகேடியர் வீரசேகரா அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டாரே அல்லாது பேச்சுவார்த்தையில் ஈடுபட அல்ல. ஆகையால் அவரைக் கொழும்புக்குத் திரும்பிவரும்படி உடனடியாக அழைக்க வேண்டுமென பிரிகேடியர் வீரசேகரா அவர்களால் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்ட பதிலை ஆராய்ந்த கூட்டுப்படை நடவடிக்கை தலைமைப் பீடத்தினதும், காப்பு அமைச்சினதும் மேலாளர்கள் கருதினர்.

சனிக்கிழமை மாலை கொழும்புக்குத் திரும்பிச் சென்ற பிரிகேடியர் வீரசேகரா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விடயங்களை கூட்டுப்படை நடவடிக்கைக்குப் பொறுப்பாகவுள்ள தளபதி கமிஸ்ரன் வணசிங்கா அவர்களிடம் எடுத்துரைத்தார். பணயக்கைதிகளை விடுவிக்க விடுதலைப்புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளையும், பணயக்கைதிகளின் உறவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தபின் தோன்றியுள்ள நிலையையும் அவர் விபரமாகத் தெரியப்படுத்தினார்.

அதன்பின் இவ்விருவரும் சனாதிபதி டி. பி. விஜேயதுங்கா அவர்களுடன் கலந்தாராய்ந்தனர். தேசிய புலனாய்வுத்துறையின் பணிப்பாளரான துணைக் காவல்துறை மா அதிபர் சேர்னி விஜயசூரியா அவர்களும் இதில் கலந்துகொண்டார்.

அரசாங்கத்தின் பதிலுடன் பிரிகேடியர் வீரசேகரா மீண்டும் யாழ்ப்பாணம் சென்றார். விடுதலைப் புலிகளின் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என அதன் தலைவர்களுக்குக் கூறிய அவர், இவர்கள் கோரிய சில பொருட்களின் தொகை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் அவர்களால் தீர்மானிக்கப்படும் எனவும் கூறினார்.

புதிதாகத் தோன்றிய சூழ்நிலை காரணமாக விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை ஏற்கவேண்டியது தவிர்க்க முடியாததாகவிருந்தது. பணயக் கைதிகள் மாத்திரமன்றி அவர்களின் உறவினர்களும் யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ளனர். பேச்சுவார்த்தையில் ஈடுபட அரசாங்கம் விரும்பாவிடின் காப்புப் படையில் உள்ள மற்றையவர்களின் கட்டுப்பாட்டமைதியை அது அவ்வளவாகப் பாதிக்காது எனினும், காவல்துறையினரையும், படைவீரனையும் விடுவிப்பதில் அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை என்ற எண்ணத்தைத் தோற்றுவித்திருக்கும். விடுதலைப் புலிகள் கோரிய பொருட்களை அனுப்புவதற்கு ஒரு கால எல்லையை நிர்ணயிப்பது தவிர்க்கமுடியாத ஒன்று எனக் கருதப்பட்டது. பணயக் கைதிகள் அனைவரும் விடுதலைசெய்யப்பட்டால் வரையறுக்கப்படாத கால எல்லைக்குப் பொருட்களைக் கோருவதற்கான வாய்ப்பை விடுதலைப் புலிகள் இழந்துவிடுவார்கள் என்பதனால் இப்படிக் கருதப்பட்டது.

அவர்களின் கோரிக்கைகளை அரசாங்கம் வழங்குவதற்கான அதன் விருப்பத்தை பிரிகேடியர் வீரசேகரா அவர்கள் அறிவித்தபொழுது விடுதலைப்புலிகள் மிகவும் கவனமாக நடந்து கொண்டனர். முதலாவதாகத் தாங்கள் ஐந்து காவல்துறையினரை மாத்திரம் விடுவிப்பதாகவும், தாங்கள் கோரிய பொருட்கள் வந்து கொண்டிருப்பதை அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் அவர்கள் உறுதிசெய்தபின் மிகுதியாகவுள்ளவர்களை விடுவிப்பதாகவும் அவர்கள் கூறினர்.

பணயக்கைதிகளுடனும், அவர்கள் உறவினர்களுடனும் புதன்கிழமை கொழும்புக்குச் சென்ற திரு. மாணிக்கவாசகர், அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் நாயகமான கிறிஸ்தி சில்வா அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இதன் காரணமாகப் பெற்றோலைக் கொண்ட 500 தகரப் பீப்பாக்களை ஏற்றிக்கொண்டு 15 லொறிகள் யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டன. இயந்திரத்திற்குப் பாவிக்கப்படும் நெய் (Engine Oil) யைக் கொண்ட 100 தகரப் பீப்பாக்கள், தேங்காய் நெய்யைக் கொண்ட 200 தகரப் பீப்பாக்கள், மண்நெய்யைக் கொண்ட 1500 தகரப் பீப்பாக்கள், டீசலைக் கொண்ட 500 தகரப் பீப்பாக்கள், 50 மெற்றிக் தொன் யூரியா உரம், 100,000 தீப்பெட்டிகள், 50,000 அப்பியாசக் கொப்பிகள் மற்றும் 500 ஈருருளிகள் எம் வி.ருகுண என்ற கப்பலில் நேற்றையதினம் ஏற்றப்பட்டது.

குடாநாட்டிற்குள் எரிபொருள் எடுத்துச் செல்வது இது வரை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. நிலக்கண்ணிவெடிகளையும், வெடிக்க வைக்கக்கூடிய ஏனையவற்றையும் உற்பத்திசெய்வதற்கு யூரியா உரம் பெரிய அளவில் உபயோகிக்கப்படுவதால் இதுவும் ஒரு தடைசெய்யப்பட்ட பொருளாகவிருக்கின்றது.

மருந்து மற்றும் வானொலிப்பெட்டிகள் உட்பட பல பொருட்கள், தடைசெய்யப்பட்டிருந்த பொருட்களைக்கொண்ட அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டதாக அரசாங்க வர்த்தமானி மூலம் சென்ற இரவு அறிவித்தது. தடைசெய்யப்பட்ட பொருட்களின் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டதாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பொருட்களை படைய சோதனைச் சாவடிகள் ஊடாக எவரும் எடுத்துச் செல்வதை இது சட்ட மூலம் அனுமதிக்கின்றது.

பென்ரோச் பற்றறிகளைக் கொண்டு இயங்க வைக்கும் சிறிய வானொலிப்பெட்டிகளைக் கொண்டுவர விடுதலைப் புலிகள் அனுமதி கோரியபோதிலும், சாதாரண பற்றறிகளைக்கொண்டு இயங்கும் வானொலிப்பெட்டிகள் அனுமதிக்கப்பட்டன. வெடிக்க வைக்கும் கருவியாக பென்ரோச் பற்றறிகள் பயன்படும் எனக் கருதியதாலேயே அவை தடுக்கப்பட்டன. வேறு வழிமுறைகளைக் கையாண்டு தங்கள் தேவைகளை முழுமைசெய்யும் ஆற்றலை விடுதலைப்புலிகள் கொண்டுள்ளதால் சாதாரண பற்றறிகளையும் கொண்டும் அவர்கள் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள் என படைய மேலாளர்கள் கூறியுள்ளனர்.

சிறிய வானொலிப் பெட்டிகளுக்கு விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கை குடாநாட்டிலுள்ள மக்களுடன் அவர்கள் தொடர்பு கொள்ள இயலாதிருக்கும் உண்மையை வெளிக் கொணர்ந்தது. பற்றறி இல்லாததன் காரணமாக விடுதலைப் புலிகளால் நடாத்தப்படும் வானொலிச்சேவையான "புலிகளின் குரலை" மக்கள் கேட்கமுடியாதிருக்கின்றது. தாங்கள் விடுக்கும் செய்திகளை மக்கள் கேட்பதை இதன்மூலம் அவர்கள் உறுதி செய்து கொள்ளமுடியும்.

தாங்கள் கோரியவற்றை வழங்குவதற்கு அரசாங்கம் இணங்கி யுள்ளதென்ற செய்தி குடாநாட்டிற்குக் கிடைத்ததும், வடக்கில் வாழும் மக்களிடையே மங்கிவரும் தங்கள் செல்வாக்கை மேம் படுத்துவதற்கு விடுதலைப்புலிகள் ஆரம்பித்தனர். பணயக்கைதி களின் விடுதலைமூலம் தங்கள் மக்கள் அவலுடன் எதிர்பார்த் திருந்த அவர்கள் நாளாந்த தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பெறுவதில் தாங்கள் வெற்றிகண்டுள்ளதாக அவர்கள் அறிவித்தனர். புதிய ஈருருளிகள் கொழும்பிலிருந்து வரவிருப்பதால் கால்நடையாக மக்கள் இனிமேல் செல்லத் தேவை யில்லை எனவும், மக்கள் ஓய்வுநேரத்தை மகிழ்ச்சியாகக் கழிப் பதற்கு வானொலிப்பெட்டிகள் வரவிருக்கின்றனவென்றும், இன் னோரல்ல பல நன்மைகளை மக்கள் அடையவிருக்கிறார்கள் என் றும் அவர்கள் அறிவித்தனர்.

அவர்களுடைய இந்த நடவடிக்கை யாழ்ப்பாண மக்களை மாத்திரம் கவரவில்லை. பணயக்கைதிகள் தங்கள் உறவினர் களைச் சந்தித்தபொழுது விடுதலைப்புலிகள் நடந்துகொண்ட விதமும் அவர்களுக்குப் பல நன்மைகளைக்கொடுக்க ஆரம்பித்தது.

விடுதலைப்புலிகளால் விடுவிக்கப்பட்டு தெற்குக்குத் திரும்பிய காவல்துறையினர் ஐந்துபேரினதும் உறவினர்களுடன் நான் கதைத்தேன். ''யாழ்ப்பாணத்து இளைஞர்கள் எங்களைக்கவனித்ததுபோல் தெற்கிலுள்ள எங்கள் மக்கள்கூட எங்களைக் கவனிப்பார்களா? எனத் தாங்கள் நடத்தப்பட்ட விதத்தால் பெரிதும் கவரப்பட்ட ஒருவர் வினவினார்.'' யாழ்ப்பாணத்தில் இனிமையான கறுத்தக்கொழும்பான் மாம்பழங்கள் இருப்பதைத் தாங்கள் அறிந்ததாக இளைஞர்களிடம் கூறியபொழுது அடுத்தநாள் ஒரு கூடை நிறைய மாம்பழம் கொண்டுவரப்பட்டது. எங்களுக்குத் தாகமாயிருக்கிறது எனக்கூறியபோது இளநீர் குலைகுலையாகக் கொண்டுவந்து வழங்கப்பட்டது என அவர் கூறினார்.

அறைகளில் தாங்கள் வெவ்வேறாகத் தங்கவைக்கப்பட்டதாகவும், தங்களுக்கு நல்ல உணவு வழங்கப்பட்டதாகவும் அந்த உறவினர் கூறினார். ''அவர்கள் எங்களுடன் இனிமையாகப் பேசியதுடன், அரசாங்கத்துடனேயே தங்களுக்குச் சிக்கல் இருக்கிறதேயன்றி எங்களுடன் அல்ல எனவும் கூறினார்கள்'' என அவர் மேலும் கூறினார்.

பணயக்கைதிகளின் உறவினர் மாத்திரம் விடுதலைப்புலிகளின் அன்பு உபசாரத்தால் கவரப்படவில்லை. அன்புடன் பழகுபவரும் தற்பெருமை இல்லாதவருமான பிரிகேடியர் வீரசேகரா அவர்கள் கூடக்கவரப்பட்டார் போலத் தோன்றுகிறது. அதனாலேயே சமாதானத்தில் விடுதலைப் புலிகள் உண்மையான அக்கறை கொண்டுள்ளதாக ''லங்கா புவத்'' செய்தி நிறுவனத்திற்கு அவர் கூறியுள்ளார். "போரை எவரும் விரும்பவில்லை'' எனக் கலாநிதி பாலசிங்கம் அவர்கள் கூறியதாக அவர் கூறினார்.

அந்தச் செய்தியைப் பிரிகேடியர் வீரசூரியா கூட்டுப்படைய நடவடிக்கைக்குப் பொறுப்பாகவுள்ள மூத்த மேலாளர்களுக்குத் தெரியப்படுத்தினார். ஆனால் அவர்களும், அரசாங்கத்தலைவர்களும் அதை நம்பமறுத்ததன் காரணமாக மிகுதியாகவுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு யாழ்ப்பாணத்திற்குச் செல்லவிருந்த பிரிகேடியர் வீரசேகரா அவர்களை அப்படிச்செல்லாது கொழும்பில் தங்கியிருக்கும்படி அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் வாய்ப்பைப் பெறும் பத்திரிகையாளர்களுக்கு ''போரை எவரும் விரும்பவில்லை'' எனக் கலாநிதி பாலசிங்கம் அவர்கள் தன்னை அவர்கள் நேர்காணும் போது அடிக்கடி கூறுவது ஒன்றும் புதுமையானதல்ல.

விடுதலைப் புலிகள் பல படைய மற்றும் அரசியல் தலைவர்களைத் தங்கள் இலக்குக்கு ஆளாக்கியிருக்கிறார்கள்; சென்ற இரண்டு திங்களில் மாத்திரம் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலி அவர்களும், சனாதிபதி இரணசிங்க பிரேமதாசா அவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

''போரை எவரும் விரும்பவில்லை'' என்று கலாநிதி பாலசிங்கம் அவர்கள் கூறியிருப்பதைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த கூட்டுப்படைத் தலைமையகத்தைச் சேர்ந்த மேலாளர் ஒருவர் ''பயங்கரவாதத்தையோ அல்லது வன்செயலையோ எவரும் விரும்பவில்லை'' எனக் குறிப்பிட்டார். கரந்தடிப் போர் மூலமும் அரசியல்வாதிகளைக் கொல்வதன் மூலமும், தங்களை விளம்பரப் படுத்துவதற்கு மேற்கொள்ளும் திட்டங்கள் மூலமும் தாம் போரை விரும்பவில்லை எனக் கூறுவதிலும் பார்க்க போரை விரும்பவில்லை என நிரூபிக்க புலிகளுக்கு வேறு பல வழிவகைகள் உண்டு என அவர் கூறினார்.

*பொறுத்திருப்பதன் மூலம் எந்தக் காரியத்தையும் சாதித்து விடலாம். தண்ணீரை ஒரு சல்லடையில்கூட எடுத்துச்செல்ல முடியும்; அது உறையும்வரை பொறுத்திருப்போமானால்.*

- சாமுவேல் இசுமைல்சு

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# அடக்கு முறையாளனைக் கண்டுபிடித்தல்

(ஐலண்ட் - 13- 04- 93)

''கண்டுபிடித்தல்'' என்ற போர்வையில் தற்பொழுது கொண்டாடப்பட்டுவரும் 500 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் மூலம் அமெரிக்கர்களைத் தம்வசப்படுத்தியதால் பலியாகிய மக்களின் கருத்துக்களைத் தனது படைப்புக்களில் பெரும் பகுதியை லத்தீன் அமெரிக்க நாடுகளின் வரலாற்றைப் படைப்பதில் செலவிட்டவரும், உருக்குவே நாட்டின் எழுத்தாளரும், வரலாற்று ஆசிரியருமான திரு. எடுவாடோ கலினோ அவர்கள் இக்கட்டுரையில் முன்வைக்கின்றார்.

இசுபானிய நாட்டு மன்னர்களினதும், ஜெனோவா நாட்டு வங்கியாளர்களினதும் நிதியுதவியுடன் கிரித்தோப்பர் கொலம்பசு கரீபியன் தீவுகளுக்குக் கொண்டுவந்த புதுமையான விடயம் 1492 ஆம் ஆண்டு ஒத்டோபர் திங்கள் 12 ஆம் நாள் அமெரிக்கா முதலாளித்துவத்தைப் பின்பற்ற வழிவகுத்தது. ''கண்டுபிடித்தல்'' என்ற தனது சஞ்சிகையில் அந்தக் கப்பல் தளபதி ''தங்கம்'' என்ற பதத்தை 139 தடவைகளும், ''கடவுள்'' அல்லது "எமது ஆண்டவர்'' என்ற பதங்களை 51 தடவைகளும் உபயோகித்திருந்தார். எந்தக் கறையும் படாதிருந்த கடற்கரைகள் அவருக்கு உற்சாகத்தை அளித்ததன் காரணமாக நவம்பர் 27ல் ''கிறித்தவ அரசுகள் யாவும் இங்கே வர்த்தகம் செய்யும்'' என்று அறிவித்தார். அவ்விடயத்திலேனும் அவர் சரியாகவே இருந்தார். கெயிட்டியை யப்பான் என்றும், கியூபாவைச் சீனா என்றும், சீனாவின் குடி மக்களே இந்தியாவின் இந்தியர்கள் என்றும் நம்பியிருந்த அவர் வியாபாரம் தொடர்பான விடயங்களில் தவறெதையும் இழைக்கவில்லை.

ஐந்து நூற்றாண்டுக்காலக் கிறித்தவ அரசுகளின் வியாபாரப் போக்கான நடவடிக்கைகளின் பின்னர் அமெரிக்காவின் மூன்றில் ஒரு பங்கு காட்டுப்பகுதிகள் அழிக்கப்பட்டுவிட்டது. முன்னர் வளம் நிறைந்துகாணப்பட்ட நிலப்பரப்பின் குறிப்பிடத்தக்க பகுதிகள் இன்று வளம்குன்றிவிட்டன. இந்தப்பகுதியில் வசிக்கும் மக்களில் அரைவாசிப்பேருக்கு மேல் நாளொன்றுக்கு ஒருவேளை உணவையே உட்கொள்கின்றார்கள். உலக வரலாற்றிலேயே தங்கள் உடமைகளை மற்றவர்கள் கவர்ந்ததன் காரணமாகப் பலியான இந்தியர்கள், அவர்களுக்கு எஞ்சியிருந்த நிலங்களிலிருந்தும் விரட்டியடிக்கப்படுகின்றார்கள். அவர்களுடைய இனத்தையும் ஏற்றுக்கொள்ள மறுக்கப்படுகின்றது. அவர்கள் தம் சொந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆரம்பத்தில் கடவுளின் பெயரால் கொள்ளையும், துன்பகரமான நிகழ்வுகளும் தலைவிரித்தாடின. இவை வளர்ச்சி என்ற போர்வையில் இப்பொழுது நடைபெறுகின்றன.

இந்த மறுக்கப்பட்டதும், வெறுக்கப்பட்டதுமான இனத்தின் மூலம், இனவாதத்தால் அறிவு மயங்கியுள்ள தற்போதைய அமெரிக்காவின் கண்களுக்குத் தெரியாத இன்னொரு அமெரிக்கா தோன்றக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

இந்தியர்கள், பேசப்பழகுவதற்காக அவர்களில் சிலரைத் தான், இசுபானியாவிற்கு அழைத்துச் செல்லப்போவதாகக் கொலம்பசு தனது சஞ்சிகையில் 1492 ஆம் ஆண்டு ஒக்டோபர் திங்கள் 12ம் நாள் எழுதியிருந்தார். இதற்கு ஐந்து நூற்றாண்டுகளின் பின் அதாவது 1989 ஆம் ஆண்டு ஒக்டோபர் திங்கள் 12ம் நாள் மெச்சிக்கோவின் ஒவாசாகா பிராந்தியத்தைச் சேர்ந்த இந்தியக்சலப்பினத்தவரும், கலிபோனியாவில் சட்டவிரோதமாகக் கமத்தொழிலில் ஈடுபட்ட வருமான இலடிசுலாலோ பசுறானா என்பவர் முறையான காசுற்றிலன் (இசுபானிய) மொழியைப் பேசத் தெரியாதவர் என்ற காரணத்திற்காகச் சித்த சுவாதீன மற்றவர் என்று அமெரிக்க நீதிமன்றம் ஒன்றினால் தீர்ப்பளிக்கப் படடும், சித்த சுவாதீனமற்றோர் மருத்துவமனைக்கு அனுப்புமாறு சிபார்சு செய்யப்பட்டுமுள்ளார். அதுவும் வாழ்நாள் முழுவதும் அவர் அங்கேயே இருக்கவேண்டுமென்றும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இசுபானிய மொழிபேசும் மொழிபெயர்ப்பாளரைப் புரிந்துகொள்வதில் பசுறானாவிற்குச் சிரமமாயிருந்தது. இதை மனோதத்துவ வல்லுனர் புத்திக்கூர்மைப் பற்றாக்குறை எனக்கணித்துள்ளார். இறுதியாக மனிதவியல் நிபுணர்கள் இந்த விடயத்தை பரிசிலனை செய்து நல்லதொரு முடிவுக்கு

வந்தனர். 2000 ஆண்டுக்காலப் பண்பாட்டுத் தொன்மைமிக்க இந்தியர்களால் பே சப்பட்டுவரும் அவர்களின் சொந்த மொழி யான மிச்சுரெக் மொழியில் பசுறானா மிகத்தெளிவாகவும், திற மையாகவும் கருத்து வெளியிட்டார். பராகுவேயில் ஆக்கிரமிக் கப்பட்ட இந்தியர்களின் மொழியான கௌவபரணி பொதுவான தேசிய மொழியாக விளங்குவது உலகவரலாற்றில் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு விடயமாகும். இசுபானிய மொழி பேசத்தெரியா தவர்கள் மிருகங்களுக்கு ஒப்பானவர்கள் எனப் பறகுவே நாட்டு மக்களில் பெரும்பாலானோர் கருதுவதாகக் கருத்துக் கணிப் பொன்று தெரிவிக்கின்றது.

பெருவிய நாட்டில் வாழும் மக்களில் 50% விகிதத்தினர் அதாவது இருவருக்கு ஒருவர் இந்தியராவார். அந்த நாட்டின் அரசியல் யாப்பின்படி குவேச்சுவா மொழி ஒரு தேசிய மொழியாக விளங்குவதுடன், இசுபானிய மொழிக்குள்ள தகுநிலை அதற்கும் உண்டு. இருப்பினும் அரசியல் யாப்பில் கூறப்பட்டது போன்று நடைமுறையில் இல்லை. தென் ஆபிரிக்க அரசு கறுப்பினத்தவர்களை எப்படி நடாத்துகின்றதோ, அப்படியே இந்தியர்களைப் பெரு அர சாங்கம் நடாத்துகின்றது. பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற மொழி இசுபானியமொழி ஒன்றுதான். நீதிபதிகள், காவல்துறை யினர் என்போர் புரிந்து கொள்ளக்கூடிய மொழியும் இதுதான். தொலைக்காட்சியில் மாத்திரம் இசுபானிய மொழியோடு ஆங்கி லத்தையும் கேட்கலாம். ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஆஜென்ரீனா வின் தலைநகரான புவனசு அயசில் ஒரு பிள்ளையின் பிறப்பைப் பதிவு செய்ய நகரத்திலுள்ள பதிவாளர்கள் மறுத்துள்ளார்கள். இயுயிய் (Jujuy) என்ற பிரதேசத்தைச் சேர்ந்த அந்தக் குழந் தையின் பெற்றோர் அதன் முதல் பெயரைத் தங்கள் சொந்த மொழியான குவேரி வமஞ்சா என்பதிலிருந்து சூட்ட விரும்பினர். அது ''வெளிநாட்டுப்பெயர்'' என்று கூறிய ஆஜென்ரீனாவிலுள்ள பதிவாளர்கள் அவர்களுடைய விருப்பத்தை ஏற்க மறுத்துள்ளனர்.

தங்கள் சொந்த நாட்டிலேயே அமெரிக்க இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டவர்களைப் போல் வாழ்கின்றார்கள். அவர்களது சொந்தமொழி அவர்களை இனங்காட்டுவதற்குப் பதிலாக ஒரு சாபக்கேடாகவிருந்து வருகின்றது. ஒரு மனிதன் யார் என்பதை இனங்காட்டுவதற்குப் பதிலாக அவருடைய மொழி அவர்களை இழிவு படுத்தும் ஒரு கருவியாக உள்ளது. தமது மொழியைக் கைவிடத் தயாராகவிருக்கும் இந்தியர்கள் நாகரீகமடைந்தவர் ளகாக கருதப்படுவார்கள்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த தளபதிகள், ரியோ டிலா பிளாட்டா பிராந்தியத்தைச் சேர்ந்த கடைசி மக்களான சறுவா சுக்களை (Charruas) அழித்ததன் காரணமாகவே எங்களுடைய நாடு "உள் நாட்டு சிக்கலிலிருந்து" காப்பாற்றப்பட்டதென நான் சிறுவனாக இருக்கும்பொழுது உருக்குவேயிலுள்ள பாடசாலை களில் கற்பிக்கப்பட்டேன்.

அமெரிக்காக் கண்டத்தை முதல் முதலில் கண்டுபிடித்தவர் களுக்கு அங்கிருந்த இந்தியர்களின் சிக்கலே பெரியசிக்கலாகவிருந் தது. இந்தச்சிக்கலை இல்லாமல் செய்யவேண்டுமாயின் இந்தியர் கள் தங்களை இந்தியர்கள் எனக்கருதுவதை நிறுத்தவேண்டும்.

அவர்களை ஒன்றில் அழிப்பதன்மூலம் அமெரிக்காவில் அப்படி யான ஒரு இனம் இல்லை என்பதை உறுதிசெய்யவேண்டும் அல் லது அவர்கள் தாங்கள் இந்தியர்கள் எனறு உணர்வதை இல்லா மல் செய்தல் வேண்டும். இதற்கு மாற்றுவழியாயிருப்பது ஒன்றில் அவர்களை அழித்தல் அல்லது ஒன்று கலத்தல், இனப்படுகொலை செய்தல் அல்லது வேறுவிதமான வழிமுறைகளைக் கையாண்டு அவர்களை அழித்தலாகும்.

20ம் நூற்றாண்டின் இறுதியில் உள்நாட்டுச் சிக்கல்கள் அனைத்தும் முற்றுமுழுதாகத் தீர்த்து வைக்கப்படுமென்று பிரே சில்நாட்டின் உள்துறை அமைச்சர் 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அறிவித்திருந்தார். இந்தக்காலப் பகுதியின் போது, இந் தியர்கள் அனைவரும் பிரேசிலிலுள்ள மற்றைய சமூகங்களுடன் கலந்து இந்தியர்கள் என்று ஒரு இனமில்லாமலே போய்விடும். அவர்களுடைய காப்புக்கான உத்தியோகபூர்வமான] பொறுப்பு வழங்கப்பட்டுள்ள (தேசிய இந்திய அமைப்பு) அமைப்பின் பணி அந்த இனம் மறைந்து போகச் செய்வதுதான் என்று அமைச்சர் விளக்கிக் கூறியுள்ளார்.

தாதுப்பொருட்களுக்கும், மரங்களுக்கும் பேராசைப்பட்டு அமசோனியாவை ஆக்கிரமிக்க வந்தவர்களுடனேயே வெடிச்சத் தங்களும், வெடிப் பொருட்களும், நஞ்சூட்டப்பட்ட உணவுகளும், ஆறுகளை நஞ்சு மயமாக்குதலும், காடுகளை அழித்தலும், இந் தியர்கள் அறிந்திடாத நோய்களும் வந்து சேர்ந்தன. இத்தனைக் குப் பிறகும் தப்பிப்பிழைத்திருக்கும் இந்தியர்களை அவர்களின் காட்டுமிராண்டி வாழ்க்கை என சொல்லப்படும் வாழ்க்கையிருந்து தம்வாழ்க்கைக்கு ஏற்றவகையில் மாற்றாதவரை அவர்கள் இவர் களின் முழுமையான வன்கவர்வின் வெற்றிக்கு · தடையாக இருக்கின்றனர்.

"இந்தியனைக் கொன்று மனிதனைக் காப்பாற்றுங்கள்" என்று மத நம்பிக்கை கொண்ட அமெரிக்க ஆலோசகரான கென்றி பிரட் அறிவுறுத்தியுள்ளார். இந்தியர்களைப் பட்டினியிலிருந்தும், ஏழ்மையிலிருந்தும் காப்பாற்றவேண்டுமாகில் பண்பாட்டை அழித்தேனும் அவர்களை நாகரீகப்படுத்த வேண்டுமென்று பெருவிய நாவலாசிரியரான மரியோ வார்க்காசு இலோகா பல ஆண்டுகளுக்குப் பின்னர் இதை விளக்கியிருந்தார்.

ஒருவேளை உணவிற்குக் கூடப் போதாத சம்பளத்திற்காக அதிகாலையிலிருந்து இரவுவரை சுரங்கங்களிலும், பெருந்தோட்டங்களிலும் பணிபுரியச் செய்தலே இந்தியரைக் காப்பாற்றல் எனப்படுகிறது.

இந்தியர்களைக் காப்பாற்றுதல் என்பதில் அவர்களுடைய சமுதாய வாழ்வைச் சீர்குலைத்து குறைந்த கூலியைப் பெறும் தொழிலாளிகளாக நகரத்திற்குள் சுற்றித்திரிய விடுதலும் அடங்கும். இதனால் அவர்கள் தங்களுடைய மொழி, பெயர், பண்பாடு ஆகியவற்றை மாற்றவேண்டி ஏற்படுவதோடு, இறுதியில் பிச்சைக்காரர்களாகவும், குடிகாரர்களாகவும், பாலியற்சோரம் போகின்றவர்களாகவும் மாறவேண்டியதாகின்றது.

இதற்கு மேலும் இந்தியர்களைக் காப்பாற்றுவது என்பது அவர்களுக்குச் சீருடை வழங்கியும், துப்பாக்கியைத் தோளில் சுமத்தியும், ஒன்றில் அவர்களை ஏனைய இந்தியர்களை கொல்லவிடுவது அல்லது எந்த வாழ்க்கைமுறை அவர்களை இழிவான நிலைக்குக் கொண்டுவந்ததோ அதைக் காக்க போராடி இறக்கவிடுவதாகும். இரண்டாம் உலகப் போரின்போது படையிற் சேர்க்கப்பட்ட 25.000 இந்தியர்களில் 10.000பேர் கொல்லப்பட்டனர்.

"இந்தியர்கள் எங்கள் கட்டளைகளை ஏற்றுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதுடன் அது சம்பந்தமான மற்றைய வேலைகளைச் செய்வதற்கும், நகரங்களை அமைப்பதற்கும், எங்கள் பழக்கவழக்கங்களைப் பயின்று உடையணியப் பழகிக்கொள்வதற்கும் இருக்கின்றார்கள்" என 1492 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாள் கொலம்பசு தனது சஞ்சிகையில் எழுதியிருந்தார்.

இந்தியர்களைக் காப்பதென்பது அவர்கள் தன்மையை இழக்கச் செய்தல் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது, அவர்கள் தம் தன்மையை இழக்கச்செய்து அவர்கள் இந்தியர்கள் என்ற உணர்வை இழக்கும்வரை இது தொடரும்.

## பறதுவேயிலுள்ள சாமா கோக்கொகஃ

இந்தியர்களுடைய மதகுரு நட்சத்திரங்களைப் பற்றியும், சிலந்திகளைப் பற்றியும், காடுகளில் அலைந்து திரியும் தோற்றிலாக் (Totila) களைப் பற்றியும் பாடுகின்றார். "பட்டினியால் வாடாதே, தாகத்தினால் தவிக்காதே, எனது சிறகிலே தொற்றிக் கொள். நாம் ஆற்று மீனை உணவாகக்கொண்டு காற்றைக் குடிப்போம்'' என மீன்கொத்திப் பறவை கூறுவதாக அவர் பாடுகின்றார். ''உனது மக்கள் குளிரால் துன்பப்படாதிருப்பதற்கு உறையும் பனியை நீக்குவதற்காக நான் வந்துகொண்டிருக்கின்றேன்'' எனப் பனிப்படலம் கூறுவதாக அவர் பாடுகின்றார்.

''நாங்கள் சவாரி செய்துகொண்டுபோய் மழை எங்கிருக்றது எனப் பார்ப்போம்'' என ஆகாயத்திலுள்ள குதிரைகள் கூறுவதாக அவர் பாடுகின்றார்.

அவருடைய இறகுகள், மேளங்கள் மற்றும் பாடல்கள் ஆகியவை ''பிசாசிலிருந்து பெறப்படுவதால்'' அவற்றால் விசக்ஈடியை மாற்றமுடியாதென்றும், வரட்சியான காலங்களில் மழையைப் பெய்யச் செய்யமுடியாதென்றும், தான் காண்பவை யாவற்றையும் பற்றிப் பாடுவதற்கு நிலப்பரப்பின் மேல் பறந்து செல்லமுடியாதென்றும் கூறிய விவிலிய மதக்கோட்பாட்டை உடைய குருமார்கள், இந்திய மதகுருவை இவற்றைக் கைவிடச்செய்தன. "பாடுவதை நிறுத்தியதால் நான் நோய்வாய்ப்பட்டுவிட்டேன். என்னுடைய கனவுகளுக்கு இப்போது செல்ல இடமில்லை. நான் என்னுடையவர்களை விட்டுவிட்டதால் துன்பத்தை அனுபவித்ததைத் தவிர வேறு எந்த நன்மையும் எனக்குக் கிட்டவில்லை'' என ரிசியோ எசுகொபர் என்பவருடன் உரையாடியபோது இந்த இந்திய மதகுரு கூறியுள்ளார்.

இது நடந்தது 1986 ஆம் ஆண்டில். 1614 ஆம் ஆண்டில் இந்தியர்களுக்குச் சொந்தமான குவேனர்சு (quenas) எனப்படும் புல்லாங்குழல்களையும், வேறு இசைக்கருவிகளையும் எரிப்பித்த லிமாவின் ஆயர் "பிசாசுடன் கொண்ட உறவினால் செய்யப்படும் வேலைகள் இவை'' எனக்கூறி அவர்களுடைய நடனங்கள், பாடல்கள் மற்றும் வைபவங்கள் யாவற்றையும் தடைசெய்து அந்தத் தடையை மீறுபவர்களுக்கு 100 கசையடி தண்டனையாக வழங்கப்படும் என்றும் எச்சரித்தார்.

97567

இந்தியர்களது சுதந்திரத்தையும், சொத்துக்களையும் இழக்கச் செய்வதற்கு அவர்களது இன அடையாளம் இல்லாதொழிக்கப்பட்டது. இசுபானியர்கள் தாங்கள் இந்தப் பூமியில் தோன்றிய நாளிலிருந்து ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், இருந்த அதேவேளையில், இந்தியர்களுக்கு ஆடிப்பாடவோ அல்லது தாம் விரும்பிய தெய்வத்திற்கு வணக்கம் செலுத்தவோ முடியாதவாறு தடை விதிக்கப்பட்டிருந்தது உருவ வழிபாட்டில் ஈடுபட்டுள்ள பிறமதத்தினர் நரகத்திலிருந்து காப்பாற்றப்படுவதற்குக் கிறிஸ்துவின் போதனைகளை அவர்கள் ஏற்கவ்வண்டுமெனக் கூறி கிறித்துவின் போதனைகளை அவர்கள் ஏற்கவேண்டுமெனக் கூறி கிறித்துவின் பெயரால் இந்தியர்கள் முன்னரும் இப்பொழுதும் துன்புறுத்தப்பட்டுவருகின்றார்கள்.

கிறித்தவரின் கடவுளைச் சாட்டாக வைத்துக் கொள்ளையடிக்கப்படுகின்றது. அவர்கள் வந்தார்கள் அவர்களுடைய கைகளில் விவிலிய வேத நூல் இருந்தது. நிலப்பரப்பு எங்களுடைய கையில் இருந்தது. கண்களை மூடிக்கொண்டு பிரார்த்தனை செய்யுங்கள் என்று கூறினார்கள். நாங்கள் கண்களை திறந்த போது நிலப்பரப்பு அவர்களுடைய கையிலும் விவிலிய வேதநூல் எங்களுடைய கையிலும் இருந்தது, என தென் ஆபிரிக்காவின் பேராயரான டெசுமன் டூட்டு (Desmond Tutu) கூறியுள்ளார்.

இன்றைய அரசுகள் இந்தியர்களை அவர்களின் காட்டுமிராண்டி வாழ்க்கையை மாற்றி நாகரிகமுள்ளவர்களாக மாற்ற முயல்வதாக கூறுகின்றன. இதற்காக கல்வியை ஒரு கருவியாக பயன்படுத்துகின்றன. உண்மையில் காலனித்துவ, நவகாலனித்துவ கொள்கைகள் இனவாதத்தின் மூலம் நியாயப்படுத்தப்படுகின்றன. காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட மக்கள் மனிதர்களாக இல்லை, மூடநம்பிக்கை நிறைந்தவர்களாக, நாட்டுப்பாடல்களை பாடுபவர்களாக, பண்பாடற்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தகுதிக்கேற்ப அவர்கள் நடத்தப்படுகின்றார்கள் என அரசில் உள்ளவர்கள் கூறுகின்றனர். இலத்தீன் அமெரிக்கர்கள் இந்தியர்களை எப்படிக் கேவலமாக நடத்துகின்றார்களோ அதேபோல பெரிய வல்லரசுகள் இலத்தீன் அமெரிக்காவை நடத்துகின்றன.

## புகழ்மிக்க பொலிவிய வரலாற்று ஆசிரியர் ஒருவர்.

கடந்த நூற்றாண்டில் பொலிவிய நாட்டில் வாழ்ந்த புகழ் பூத்த வரலாற்று ஆசிரியர்களுள் கப்பிரியெல் றெனெ மொனோ (Gabriel Rene mono) என்பவரும் ஒருவராவார், இன்றுவரை

யும் அந்த நாட்டின் பல்கலைக்கழகம் ஒன்று அவரின் பெயரைத் தாங்கி நிற்கின்றது. ''சழுதைகளான இந்தியர்கள் வெள்ளையர்களைத் திருமணம் செய்யும் பொழுது கலப்பினக் கழுதைக் குட்டிகளையே ஈன்றெடுப்பார்கள்'' என ஒரு நாட்டின் மேன்மையான பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இவர் கருதினார். ஐரோப்பியர் அல்லாதவர்களினதும், கலப்பின மக்களினதும் மூளைகளை நிறுத்துப் பார்த்தபோது, இவர்களின் மூளை வெள்ளையர்களின் மூளையைவிட ஐந்து, ஆறு அல்லது ஏழு அவுன்சுகள் குறைவாக இருந்தது. இதன் மூலம் '' குடியரசின் சுதந்திரத்தைக் கிரகிக்கக்கூடிய திறமைவாய்ந்த கலன்கள் இவர்களுக்கு இல்லை'' என்ற முடிவுக்கு இவர் வந்தார்.

''இந்தியர்கள் பண்பற்ற இழிவான ஒரு இனம்'' என றெனெ மொரேனோ அவர்களுடன் சமகாலத்தில் வாழ்ந்தவரும் பெருவிய நாட்டிலுள்ள அவருடைய நண்பருமான றிகாடோ பாமா எழுதியுள்ளார். அவர்கள் விட்டுக்கொடுக்காதவர்களாகவும், இணங்கிப் போகாதவர்களாவும் இருப்பதால், ஐரோப்பிய பண்பாட்டைப் பின்பற்றுவதற்கும், அவர்களுடன் ஒன்று சேர்ந்து இணைவதற்கும் பொருத்தமானவர்கள் அல்ல'' என ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த டொமிங்கோ வோஸ்ரினோ சார்மியென்ரோ அவர்கள் அறவுக்கானோ இந்தியர்களின் சுதந்திரத்திற்கான நீண்ட காலப் போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் கூறியுள்ளார்.

லத்தீன் அமெரிக்க வரலாற்றின் மிகக் கொடூரமான இனவாதத்தை 19அம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மிகப் புகழ்வாய்ந்த கல்விமான்களின் வார்த்தைகளிலும், புதுப் பண்பு வாய்ந்த அரசுகளை அமைத்த முற்போக்கான அரசியல்வாதிகளின் செயல்களிலும் காணலாம். இந்தியர்கள் தாம் வழமையாக அணியும் பருத்தி உடைகளையும், செருப்பையும் கைவிட்டு, ஐரோப்பிய மாதிரியிலான நீளக்காற்சட்டைகளையும், சப்பாத்துக்களையும் அணிந்தாலொழிய அவர்கள் பிரதான வீதிகளில் நடக்கவோ, பொதுப் பூங்காக்களில் அமரவோ முடியாது எனத் தடைவிதித்தவரும் ''மெச்சிக்கோவின் முதலாளித்துவத்தை நவீனமயப் படுத்துதல்'' என்ற நூலை எழுதியவருமான போர்பிரியோ டயஸ் போன்ற இந்தியக் குடிமக்கள் சிலரும் இதில் அடங்குவர்.

இந்தியர்களை ''விஞ்ஞானப்படுத்துவது'' என்ற போர்வையில் அவர்களுடைய நிலப்பரப்பையும், தொழில் முயற்சிகளையும்

கொள்ளையடித்துக் கொண்டிருந்த காலப்பகுதியிலேயே பிரித் தானிய பேரரசின் ஆளுமைக்கு உட்பட்டிருந்த உலகச் சந்தை யோடு லத்தின் அமெரிக்கா தன்னைப் பிணைத்துக்கொண்டது.

உதாரணமாக, உலகச் சந்தைக்குக் கோப்பி தேவையாக விருந்தது. கோப்பி பயிரிடப்படுவதற்கு நிலமும் தொழிலாளரும் அதிகளவில் தேவைப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் தான் குவார்த்தமாலாவின் தாராள மனப்பான்மை உடையவரும், முற் போக்குவாதியுமான சனாதிபதி இயசுதோ ருவினோ பொறிசு அவர்கள் காலனித்துவ முறையிலான கட்டாயப் பணிமுறையை மீளவும் புகுத்தித் தனது நண்பர்களுக்கு இந்தியர்களின் நிலங் களையும் அதிக எண்ணிக்கையிலான இந்தியத் தொழிலாளர் களையும் வழங்கினார்.

குவாத்தமாலா போன்ற நாடுகளில், வேதனையைத் தரத் தக்க வகையில் இனவாதம் வளர்ந்து தொடர்ச்சியான இன அழிப்பு நடந்துகொண்டிருக்கின்ற போதிலும், இந்தியர்களே அங்கு பெரும்பான்மையினராக இருக்கின்றார்கள்.

ஒரு 100 கிராம் கோப்பியை அல்லது பருத்தியை அல்லது ஒரு தொன் கரும்பை வெட்டுவதற்கு ஒரு மாயா இந்தியனுக்கு 0.65 டொலர்கள் வழங்கப்படுவதைக் கொண்டு இது நாள்வரைக் கும் இந்தியர்களைப் போல் மிகக்குறைந்த வேதனத்திற்குத் தொழில்புரியும் பணியாட்கள் உலகில் வேறெங்கும் இருக்கமுடி யாது என்பதைக்காணலாம். படையினரின் அனுமதியில்லாமல் இந்தியர்கள் சோளம் பயிரிடமுடியாது. வேலைக்கான அனுமதி யின்றி அவர்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லமுடியாது. ஏற்றுமதிக்கான உற்பத்திப் பொருட்களை விதைப்பதற்கும், அறுவடை செய்வதற்கும் பெரும் எண்ணிக் கையான கூலியாட்களை படையம் திரட்டுகின்றது. பயிர்ச்செய் கையில் சாதாரணமாக உபயோகிக்கப்படும் கிருமிநாசினிகளை விட இந்தப் பெருந்தோட்டங்களில் உபயோகிக்கப்படும் கிருமி நாசினிகள் 50 மடங்கு கூடுதலான நச்சுத்தன்மை வாய்ந்தவையாக இருப்பதன் காரணமாக தாய்ப்பாலே மிகவும் நச்சுத்தன்மை கொண்டதாகவிருக்கின்றது.

1981 ஆம் ஆண்டிலிருந்து 1983 ம் ஆண்டுவரையிலான காலப் பகுதியில் மாத்திரம் கேட்பார் யாருமின்றி இந்தியர்களின் குடி யேற்றங்களில் 440 அழிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான ஆண் களும், பெண்களும் ஒன்றில் கொல்லப்பட்டனர். அல்லது

காணாமல்போயினர் என குவாத்தமாலாவின் அதிகாரபூர்வமான அறிக்கைகள் தெரியப்படுத்துகின்றன. "நிலத்தைத் துப்பரவு செய்தல்" என்ற நடவடிக்கைமூலம் மலைகளை துப்பரவு செய்த பொழுது எண்ணற்ற குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளார்கள். இதன்மூலம் பரம்பரையாக எழக்கூடிய கிளர்ச்சியை தாங்கள் இல்லாதொழித்துவிடலாம் என குவாத்தமாலாவின் படையத்தினர் நம்புகின்றனர்.

இந்தியர்களை பெருமளவில் அழிப்பவர்கள் முன்போல் அம்பு, வாள்களோடு இல்லை. தற்கால ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள். இவர்களின் தோல் வெள்ளையும் இல்லை. வெள்ளை இனத்தவரும், கறுப்பு இனத்தவரும் கலந்ததால் இவர்கள் நிறம் வெள்ளையாக இல்லை. தம்மவர்களையே அழிக்கின்றோம் என்று அறியாமலேயே அழிவுகளைச் செய்யும் அளவுக்கு இவர்கள் வளர்க்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஐரோப்பிய கணிதவியலாளிக்கு 1200 ஆண்டுகளுக்கு முன் இந்தத் தாழ்ந்த இனம் பஜ்யத்தைக் கண்டுபிடித்தது. எமது காலத்தைய வானவியலாளனுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்த இனமே உலகத்தின் வயதை மிகப்பிரமிக்கத்தக்க வகையில் துல்லியமாகக் கண்டுபிடித்தது.

## திரு. கென்றிபோட் அவர்களின் கூற்று

"காலம் பொன்னுக்குச் சமனானது என அவர்களுக்குத் தெரியாது" என திரு. கென்றிபோட் அவர்கள் கூறியுள்ளார். நிலத்தைப் போலவும், மனிதர்களைப்போலவும் வாங்கவோ, விற்கவோ முடியாததுமான நேரத்தை ஒருமகனைப் போலவும் நிலத்தைப்போலவும், அல்லது ஒரு மகளைப் போலவும் அல்லது ஒரு மனிதனைப் போலவும் அவர்கள் புனிதமாகக் கருதுகின்றார்கள். இது அப்படியல்ல என்று நாகரீகம் அவர்களுக்குக் கற்பிக்க முயன்றிருக்கின்றது.

யார் கூறுகின்றார்கள் என்பதைப் பொறுத்து வரலாறு மாறிக்கொண்டிருக்கின்றது. உரோமானியர்களுக்கு "மிலேச்ச ஆப்பிரமிப்பாக" இருந்த செயலை ஜெர்மனியர்கள் "தென்திசை நோக்கி குடிபுகல்வாக" கருதினர்.

அமெரிக்காவின் வரலாற்றை இந்தியர்கள் இதுவரை கூறவில்லை. "பேராசை ஒருமுடிவுக்கு வரும்போது உலகத்தின் முகம், கைகள், பாதங்கள் யாவும் விடுவிக்கப்படுகின்றன." என்று இசு

பானிய ஆக்கிரமிப்பு இருந்தவேளையில் கடவுள்களின் பேரால் பேசிய மாயா தீர்க்கதரிசி ஒருவர் கூறினார். வாய் விடுவிக்கும் போது அது எதைக்கூறும்? ஒருபோதும் கேட்டிராத இந்த மற்றக் குரல் என்ன கூறும்?

இந்தியர்களின் நடத்தை ஒன்றில் அவர்கள் பிசாசுகளால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் அல்லது உயிரியல் ரீதியாகத் தாழ்ந்த வர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது என இதுகாலவரை முன் வைக்கப்பட்ட ஒரே கருத்தான ஆக்கிரமிப்பாளர்களின் கருத்து தெரிவிக்கின்றது. காலனித்துவம் ஆரம்பிக்கப்பட்ட நாளி லிருந்து கீழே சொல்லப்பட்ட கருத்துக்களே சொல்லப்பட்டு வரு கின்றன.

அடிமைத் தொழில் செய்யவிரும்பாத கரிபியன் தீவுகளில் உள்ள இந்தியர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள். அவர் கள் சோம்பேறிகள் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

தங்கள் உடல்களே முகமெனக்கருதி அவர்கள் நிர்வாண மாகத் திரிந்தார்கள். அவர்களுக்கு வெட்கமில்லை என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

சொத்துரிமைகள் பற்றித் தெரியாத அவர்கள் தங்களிடம் உள்ள உடைமைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டதுடன், செல்வத்தின்மீது ஆசை வைத்திருக்கவுமில்லை அவர்கள் மனிதர் களாக அல்லாமல் குரங்குகள்போல் இருந்ததனாலேயே இப்படி நடந்துகொண்டார்கள்.

அவர்கள் தங்களை அடிக்கடி சுத்தம்செய்துகொண்டார்கள். முரண் சமயக்கோட்பாடுகளை ஒடுக்குவதற்கான சமயத்துறை சார்ந்த தண்ட உயர்முறைமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து எரிக்கப்பட்ட மத நம்பிக்கையற்ற முசுலிம்களை இது நினைவுபடுத்தியது.

அவர்கள் தங்களுடைய பிள்ளைகளைத் தண்டிக்காது சுதந் திரமாக நடமாடவிட்டனர். எப்படித் தண்டனை வழங்கவேண்டு மென்றும், என்ன கோட்பாட்டைக் கடைப்பிடிக்கவேண்டுமென் றும் அவர்கள் தெரியாதிருந்தனர்.

அவர்கள் கனவுகளில் நம்பிக்கை உள்ளவர்களாகவும், அசரீரி வாக்குகளுக்கு மதிப்புக் கொடுத்து அதன்படி நடப்பவர்களாகவும் இருந்தார்கள். இது சாத்தானின் செல்வாக்கால் அல்லது முட் டாள்தனத்தால் ஏற்பட்ட ஒன்றாகும்.

உணவை உட்கொள்ளவேண்டிய நேரத்தில் உண்ணாது பசித்தவேளைகளில் எல்லாம் அவர்கள் உண்டார்கள். தங்கள் புலன்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

அவர்களுக்கு ஆசைவரும்போது அவர்கள் காதல் கொள்கின்றார்கள். ஆரம்பத்தில் ஆதாமும், ஏவாளும் இழைத்த பாவத்தைச் செய்வதற்கு பிசாசு இவர்களைத் தூண்டுவதை இது எடுத்துக்காட்டுகின்றது.

தன் இனச் சேர்க்கையை அவர்கள் ஒரு வடுவாகக் கருதுவதில்லை. கன்னித் தன்மைக்குக் கொடுக்கப்படவேண்டிய சிறப்பு அவர்களால் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் நரகத்திற்குப் போக இருப்பதாலேயே இவை யாவற்றையும் செய்கிறார்கள்.

"உங்களுடைய தலைவனை யார் தேர்ந்தெடுத்தது" என 1523 ஆம் ஆண்டில் இந்தியத் தலைவரான நிக்காராகுவா வெற்றி கொண்ட போர்வீரர்களை நோக்கிக் கேட்டார். இவரை இவருடைய சமூகத்திலுள்ள மூத்தவர்கள் தெரிவுசெய்திருந்தார்கள்.

## அமெரிக்காவைக் கொலம்பசு கண்டுபிடிக்குமுன் அங்கு நிலவிய சனநாயகம்.

கொலம்பசு கண்டுபிடிப்பதற்கு முன்னர் இருந்த அமெரிக்கா உலகத்திற்கு ஐரோப்பா என்றும் கண்டிராததுமான பலவிதமான சனநாயக முறைகளைக் கொண்ட மிகப்பெரிய நாடாகவிருந்தது என்பது இன்றும் பலருக்குத் தெரியாது. அமெரிக்க பூர்வ குடி மக்களின் சிறந்த வாழ்க்கையை அறியாமல் இன்கா பேரரசர்களின் குடும்ப ஆட்சி முறையையும், அசெற்றிக் ஆட்சியின் இரத்தக்கறை படிந்த வாழ்க்கையையும் கொண்டு அவர்களை எடை போடுவது என்பது ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலத்தைத் தனியே அரசர்களின் கொடுங்கோன்மையையும், சமய முரண்பாடுகளையும் கொண்டு ஒப்பிடுதலுக்கு சமமாகும்.

கௌவாரனிய இனத்தவரின் மரபுவழிப்படி பெண்களையும் ஆண்களையும் கொண்ட சபைகளால் தெரிவுசெய்யப்படும் சமூகத் தலைவர்கள் மக்கள் ஆணையை மீறிச் செயற்படுவார்களாயின் பதவியிலிருந்து தூக்கி எறியப்படுபவர்கள். ஈராக்கோவிசு இனத்தவர்களின் மரபுவழிகளின்படி ஆண்களும், பெண்களும் சமநிலை

யில் ஆட்சிபுரிவார்கள். ஆண்களே தலைமைப் பதவியை வகிக்கின்றபோதும், பெண்களே அவர்களைத் தெரிவுசெய்யும் மற்றும் பதவியிலிருந்து அகற்றும் உரிமையுடையவராகவிருக்கின்றார்கள். இணைப்பாட்சியின் முக்கிய அம்சங்கள் அனைத்தையும் வகுக்கும் செயல் உரிமை இந்தப் பெண்களின் சபைக்கே உண்டு. 1600 ஆம் ஆண்டளவில், ஈராக்கோவிசு இனத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்களைக் கலந்தாலோசியாது தம் விருப்புப்படி போர் ஒன்றை ஆரம்பித்தபோது அவர்களுடைய மனைவியர்கள் அவர்களுடன் காதலில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொண்டனர். இதைத் தொடர்ந்து தனிமையாக நித்திரைசெய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட ஆண்கள் இணைப்பாட்சிக்குச் சம்மதித்தனர்.

இந்தியப் பெண்கள் மோலாசு என்ற தங்கள் மரபுவழியிலான உடையை இனிமேல் அணியமாட்டார்கள் என்றும் நாகரீகமான உடைகளையே அவர்கள் அணிவார்கள் என்றும் பனாமாவுக்கு அண்மையாக உள்ள தீவான சான்பிலாசின் இந்தியத் தலைவன் 1919 ம் ஆண்டில் அறிவித்தான்.

இதுவே தகுந்தமுறை என்பதால் பெண்கள் மூக்குகளின் மை தீட்டுவதை விடுத்து கன்னங்களிலேயே தீட்டிக் கொள்ள வேண்டும்மெனவும், மூக்குகளில் தங்க வளையல்களை அணிவதை விடுத்து காதுகளிலேயே அணியவேண்டுமெனவும் அவன் மேலும் அறிவித்தான்.

இதற்கு 70 ஆண்டுகளுக்குப் பின் அதாவது எங்கள் காலத்திலும் குனா வகுப்பைச்சேர்ந்த இந்தியப் பெண்கள் மூக்கிலே வளையல்களை அணிந்து கொள்வதுடன், அழகு மிளிருகின்ற பல நிறப்புடவையிலான மோலாசு எனப்படும் உடையை அணிவது மட்டுமல்லாது அவர்கள் இறக்கும் போதும் அவற்றுடனேயே புதைக்கப்படுகின்றார்கள்.

1989 ஆம் ஆண்டில் பனாமாவை அமெரிக்கா ஆக்கிரமித்தபோது பனாமா மனித உரிமைகளை மதிக்கின்ற நாடு என ஜெனரல் மனுவல் நொறிசகா அறிவித்திருந்தார். "நாங்கள் ஒரு இனத்தவர்கள்" என்றும் அவர் விளக்கினார்.

காடாக இருந்த அன்டீச மலைத் தொடரை இந்திய சமூகத்தவர்கள் தங்கள் தென்மையான கருவிகளை உபயோகித்து வளம் கொழிக்கச் செய்தார்கள். இதற்கு மாறாக ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பாரிய தனியார் பெருந்

தோட்டங்களில் கையாளப்பட்ட நவீன தொழிநுட்பங்கள் காரணமாக அன்டீசிலும் வேறு இடங்களிலுமுள்ள வளம் நிறைந்த நிலங்கள் வளமில்லாததாக மாறியுள்ளன.

உற்பத்தியைப் பெருக்குவதற்கு நவீனமயமான தொழில் நுட்பங்களைக் கையாள்வதை விடுத்து ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் கையாண்டா வழிமுறைகளைக் கையாள்வது எப்படி மடமைத்தனமானதோ, அதேபோல் குறைந்தளவு நேரத்தில் கூடியளவு செல்வத்தைப் பெறும் நோக்கில் மனிதர்களைக் கட்டாயப்படுத்தி வேலைவாங்கியும், காடுகளை அழித்தும், நிலப்பரப்பை வளமற்றதாக்கியும், ஆறுகளை மாசடையச் செய்வதுமான இந்த முறையினால் ஏற்படும் பேரழிவுகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாது இருப்பதும் மடமைத்தனமானதாகும். அனைத்துலக சந்தையைக் கட்டி யெழுப்புகின்றோம் என்ற பெயரில் இயற்கையையும், மனிதரையும் பலியிடுவது முட்டாள்த் தனமில்லையா? இந்த முட்டாள்த்தனத்தை எங்கள் தலைவிதி என ஏற்றுக்கொள்கின்றோம்.

பொது அறிவு அல்லது பொது அறிவென்பதின் இயல்பான விரிவாக்கம் எல்லோருக்கும் பொதுவான சமூக உணர்வும் இருக்கிறது என்ற அர்த்தத்தைத் தருகிறது. காற்று எல்லோருக்கும் சொந்தமானால் எவ்விதம் நிலம் தனிநபர்களின் சொத்தாக இருக்கமுடியும்? நாம் நிலத்திலிருந்து உற்பத்தியாகி நிலத்தினுள் இறுதியில் சங்கமமாகிறோம் என்றால் நிலத்தை தனிநபர்களின் சொத்தாகக் கருதுவது நிலத்துக்கு எதிரான குற்றம் அவ்விதமாயின் அது நமக்கு நாமே இழைக்கும் குற்றமாகாதா? நிலம் பிறப்பிடமாகவும் புதைப்பிடமாகவுமாய் அமைந்து தாய்போலும் துணைவன் போலும் விளங்குகிறது. அது முதல் கவனத்தைப் பெறுகிறது. அதற்கு நாம் ஆறுதல் கொடுக்கிறோம். அத்துடன் அரிபட்டுப் போகாமல் இருப்பதற்கு காப்பும் கொடுக்கிறோம்.

தான் விளங்கிக்கொள்ள முடியாததை (சமுதாயம்) அமைப்பு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அதற்குக் காரணம் தான் அறிந்து கொள்ளப் பயன்படும் ஒன்றை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பமின்மையேயாகும். ஆகவே இனவாதம் பயத்தின் முகமூடியாக விளங்குகிறது.

சுதேச பண்பாடுகளைப்பற்றி நாம் என்னத்தை அறிந்துள்ளோம்? மாட்டு மந்தை பையன்கள் அல்லது அமெரிக்காவின் காட்டுமிராண்டி மேற்குப் பிரதேசங்களைச் சித்தரிக்கும் சினிமப்பா

படங்களில் வருபவைதான் எமக்குத் தெரியும். ஆபிரிக்கப் பண்பாடுகளைப்பற்றி எமக்கென்ன தெரியும்? எமக்குப் பேராசிரியர் தாசன் போதித்தவையே தெரியும்.

கடந்த நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் ஆங்கில டாக்டராக டவுண் (Jhon Down) என்பவர் அவரது பெயரால் அழைக்கப்படும் நோய்க் குறிக் கண்டுபிடிப்பொன்றைக் கண்டுபிடித்தார். இனமரபுப் பண்புகளைக் கொண்ட இனக் கூற்றின் இழைபோன்ற பகுதிகள் மாற்றம் அடைவது தாழ்ந்த அல்லது குறைபாடு உடைய இனங்களுக்கு மீழ இழுத்துச்செல்வதாக அமைந்து 'மொங்கோலிய, நீக்கிரோ அல்லது அசெற்றிக் இனமடையர்களை உருவாக்கும் என்று அவர் நம்பினார்.

அதே காலகட்டத்தில் இத்தாலிய டாக்டரான சிசர் லொம்புறோசோ என்பவர் "பிறப்பின் இயல்பாக குற்றச்செயல் செய்பவர்கள்" எனயோரின் வடிவமைப்பு கறுப்பர்கள் அல்லது செவ்விந்தியர்களின் தோற்ற அமைப்பைக் கொண்டிருக்கும் என வர்ணித்தார்.

ஆகவே கறுப்பர்களும் செவ்விந்தியர்களும் இயல்பாகவே குற்றச் செயல் புரிபவர்களாகவும் இருப்பார்கள் என்ற தப்பபிப்பிராயம் அல்லது தப்பெண்ணம் ஒரு அறிவியல் முலாம் பூசப்பட்ட அடிப்படையிலேயே உருவாகிறது. கறுப்பர்களும் செவ்விந்தியர்களும் பாரம்பரியமாக தொழிலாளிகளாகவும் அறிவியல் ஆய்வுகளுக்கு உபயோகிக்கப்படுபவர்களாகவும் இருந்துவருகிறார்கள.

லொம்புறோலோசையும், டவுணையும் அடுத்து பிறேசிலிய டாக்டர் றெய்மன்டோ நினா எறாட்டிறிக்ஸ் (இவர் ஒரு கலப்பு இனத்தவர்) "இரத்தக் கலப்பு தாழ்ந்த அல்லது குறைந்த இனத்தினரின் குணாம்சங்களையே தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும்" என்ற முடிவுக்கு வந்தார். மேலும் "மக்கள் குறைந்த நிலைப்பாட்டில் இருப்பதற்கு கறுப்பு இனம் எப்போதும் ஒரு காரணியாக இருக்கும் என்றும் கூறினார். இம்மனநோய் நிபுணர் பிரேசிலியப் பண்பாட்டில் ஆபிரிக்கமூலம் பற்றிய ஆராய்ச்சியை முதலில் செய்தவராவார். இவர் பிரேசிலியப் பண்பாட்டை நுணுக்கமான சத்திரசிச்சைபோன்று ஆய்வுசெய்தபோது கறுப்பர்களின் மதங்களை நோய்க்கிருமிகளைப் போன்றும், உருவருவதை ஒருவகை வாய்வுக்கோளாறு போன்றும் பாவனைப்படுத்தி ஆய்வுகளைச் செய்தார்.

இதற்குச் சிறிது காலத்திற்குப்பின்னர் ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த ஜோஸ் இன்ஜெஎறியோஸ் என்ற டாக்டர் "மனித வர்க்கத்தின் இழிந்தவரான கறுப்பர்கள் நாகரீகமடைந்த வெள்ளையர்களை ஒத்தவர்களல்ல குரங்கை ஒத்தவர்கள்" என்று எழுதினார். அவர்களின் நிவர்த்திசெய்யமுடியாத குறைபாட்டை எடுத்துக்காட்டுவதற்கு இன்ஜென்றியோஸ் "கறுப்பர்களுக்கு மதக் கருத்துக்கள் இல்லை" என்று கூறினார்.

உண்மையில் மதக்கருத்துகள் கடல் மூலம் கறுப்பு அடிமைகளுடன் தான் வந்தது. ஆபிரிக்காவிலிருந்து பலாத்காரமாகப் பிரித்து எடுக்கப்பட்டு பொருட்களைப்போல விற்பனை செய்யப்பட்ட கோடிக்கணக்கான மக்களுக்கு உதவி செய்வதன் பொருட்டு மதக்கருத்துக்கள் வெள்ளையர்களான சாதுக்களால் வேறுவகையில் கொண்டுவரப்பட்டன. ஒகம் என்ற நெருப்புக்கடவுள் பரிசுத்த ஜோர்ஜ் அல்லது பரிசுத்த அந்தோனி அல்லது பரிசுத்த மைக்கல் ஆசவும் இடி மின்னலோடு கூடிய சங்கோ என்ற கடவுள் யேசு கிறிஸ்து போலவும் அமைதியான சலனமற்ற நீரின் கடவுளான ஓசன் மெழுகுவர்த்திக் கன்னியாகவும் மீண்டும் தோன்றினர்.

ஏகாதிபத்திய அரசுகளின் காலணிகள் எல்லாவற்றிலும் கடவுள்கள் தடைசெய்யப்பட்டிருந்தனர். அடிமை உடமை இல்லாது ஒழிக்கப்பட்டபின்னரும் ஆங்கிலேயரின் கரிபியன் தீவில் காற்றுடன் இசைந்து ஒலி எழுப்பும் ஒருவகை ஆபிரிக்க இசைக் கருவியை இசைப்பது தடை செய்யப்பட்டிருந்தது. ஆபிரிக்கக் கடவுள் ஒன்றின் உருவச்சிலையை வைத்திருப்பதே சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும்.

திருத்தமுடியாதென கணிக்கப்படும் பிழைகள் யாவற்றிற்கும் கறுப்புத்தோல் ஒரு கவசமாகக் கருதப்பட்டது. இனவாதததின் ஒரு அம்சமான சமூக சம இன்மை மனிதர்களிடையேயுள்ள குறைபாடுகளுடன் சம்பந்தப்படுத்தப்பட்டு நியாயப்படுத்தப்படுகிறது.

அமெரிக்கா முழுவதும் பிரமிட் போன்ற அமைப்பில் இயங்குகிறது என்று கம்போல்ற் என்பவர் 200 வருடங்களுக்கு முன்னர் குறிப்பிட்டுள்ளார். பிரமிட்டின் அடித்தளம் கறுப்பாகவும் உச்சி வெள்ளையாகவும் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். உதாரணத்துக்கு பிரேசிலில் வெள்ளையர்கள் உச்சியில் இருப்பதையே சமூக சனநாயகம் என்கிறார்கள். இப்போதும் அதேநிலைதான் தொடர்கின்றது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள கறுப்பர்களைப்பற்றி எழுதும் போது ஜேம்ஸ் பல்ட்வின் என்பவர் "நாம் மிஸ்சிசிப்பியை விட்டு வடக்கே சென்றபோதும் நாங்கள் சுதந்திரத்தைக் காணவில்லை. தொழில் சந்தையில் உள்ள மிகக் கேவலமான தொழில்களைத் தான் நாம் செய்தோம். அப்படித்தான் இப்போதும் இருக்கிறோம்.

வட ஆர்ஜன்ரீனாவிலுள்ள அசன்கியன் ஒன்ரிவெறோஸ் யுல்கிற்றா என்ற செவ்விந்தியர் ஒருவர் தன்னுடைய இளமைக் கால வேதனைகளை பற்றிக் கூறும்போது "யேசுவையும் கன்னித் தாயையும் போல் உள்ளவர்களே நல்லவர்களும் அழகானவர்களு மாவர் என்பதே என் எண்ணமாக இருந்தது. அப்றாபம்பாவி லுள்ள திருக்கோவிலில் நான் கண்ட யேசுவினதும் கன்னித்தாயின் உருவங்களைப்போல் எந்தவிதத்திலும் என்னுடைய தந்தையும் தாயும் தோன்றவில்லை" என்று கூறுகிறார்.

பிறப்பின் காரணமாக குறைந்த இனத்தவர் இயல்பாகவே சோம்பேறித்தன்மை, வன்முறை, ஏழ்மை ஆகியவற்றிடையே தள்ளப்பட்டவர்கள் என்ற தாழ்வு மனப்பாங்கு எமது குழப்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும் எவை உண்மையான அடிப்படைக்காரணங்களென்று கண்டுகொள்ள அனுமதிப்பதில்லை. அத்துடன் இழிநிலைக்குள்ளாக்கப்பட்ட பண்பாடுகள் வியக்கத்தக்க வகையில் காக்கப்பட்டு வருகின்றன. அவை நூற்றாண்டுக் கணக்காக கால இடைவிடாதுயரம், அவமானம், கீழ்நிலை ஆகியவற்றின் மத்தியில் தாக்கிப்பிடித்துவருவதற்கான மூலாதார காரணங்களை அடையாளம் கண்டுகொள்வதற்கும் தடையாக இருக்கிறது. இம் மூலாதார காரணங்கள் அரும் பொருட்காட்சிச்சாலைகளில் வைக்கப்படும் காட்சிப்பொருட்கள் அல்ல. அவையே அடிமைகள் ஆளுபவர்கள் என்ற பிரிவினை அற்ற அமெரிக்காவை நாம் கண்டுபிடிப்பதற்கு முக்கியமாக தேவைப்படும் வரலாற்று சான்றுகளாகும்.

சிறிது காலத்துக்கு முன்னர் இக்நேசியோ எலக்கூரியா என்ற ஸ்பானிய பாதிரியார் ஒருவர் (1989 இல் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட யேசு சபைப்பாரதியார்) அமெரிக்காகாவைக் கண்டுபிடித்தது என்ற கதை ஒரு புரட்டு என்று என்னிடம் கூறினார். ஒடுக்கு முறையாளன் கண்டுபிடிக்கும் ஆற்றல் அற்றவன். "ஒடுக்கப்படுபவனே யார் ஒடுக்குகிறவன் என்பதை காணமுடியும்." ஒடுக்குபவனால் தன்னையே அறியமுடியாது ஒடுக்கப்படுவதனால்தான் உண்மையை கண்டுகொள்ளமுடியும் என்றும் நம்பினார்.

# உலகவிவகாரங்கள்- சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் போராடிய மாபெரும் தலைவர் ஒருவரின் இறப்பு.



— சிதாராம் இயேசூர் —

(புதன்லைன் - 7. 5. 93)

தென் ஆபிரிக்க கம்யூனிசக் கட்சியின் பொதுச் செயலாளராக விளங்கிய கிறிசு காணி (Chris Hani) அவர்கள், 19 3 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ம் நாள் சனிக்கிழமை அன்று கொல்லப்பட்டார். தென் ஆபிரிக்க மக்களின் உணர்வுகளின் சின்னமாக விளங்கிய அவரின் அதிர்ச்சிதரும் இழப்பு காரணமாக விடுதலை வேண்டிப் போராடும் மக்கள் தங்கள் தனிப்பெருந் தலைவர் ஒருவரை இழந்துள்ளனர், சோசலிசக் கொள்கையைத் தீவிரமாக முன்னெடுத்துச் சென்ற ஒருவரை அனைத்துலக கம்யூனிச இயக்கம் இழந்துள்ளது.

தென் ஆபிரிக்காவுக்கும் சனநாயக ரீதியான ஒரு பேரவையை உருவாக்குவதற்காக நடாத்தப்பட்டுவரும் பேச்சுவார்த்தைக்குக் குந்தகம் விளைவிக்கும் நோக்கமாகவே இந்தக் கொலை மேற்கொள்ளப்பட்டது என்பது தெளிவான ஒன்றாகும். இக் கொலைக்கான காரணங்கள் தெளிவாகவுள்ளன. தென் ஆபிரிக்க மக்களின் விடுதலைவேட்கையை பிரதிபலித்த அவர், தனது குறிக்கோளைக் கைவிடாது மாற்றமடைந்து வரும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை ஆக்கிக்கொள்ளும் குணவியல்புகளைப் பெற்றிருந்தார். இதன் காரணமாகவே "தீவிரவாத கறுப்பின இளைஞர்களின் நர்பகத் தன்மையான தலைவன்" எனத் திரு காணி அவர்களை நோபல் பரிசைப்பெற்ற பேராயர் டெசுமன் டுற்று அவர்கள் வர்ணித்துள்ளார்.

கிறிசு என மிகவும் அன்பாக அழைக்கப்பட்டுவந்த அவரைச் சந்திக்கும் வாய்ப்பை இரு தடவைகள் நான் பெற்றேன். 1960 ம் ஆண்டில் தடைசெய்யப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரசு தென் ஆபிரிக்க மண்ணில் நடாத்திய முதலாவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காகத் தலைமறைவாகியிருந்த அவர் வெளிப்பட்டு வந்த 1991 ம் ஆண்டு யூன் திங்களில் அவரை நான் முதல் முதலாகச் சந்தித்தது எனது நினைவில் நிற்கின்றது. ஆபிரிக்க தேசிய காங்கிரசின் படைப் பிரிவான உம் கொன்ரோ வி சிஸ் வே -தேசத்தின் ஈட்டி (Umkhonto we Sigwo - mk) யின் படைத்தலைவர் என்ற முறையில் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வந்தார். திரு கிறிசு அவர்கள் வாழும் வரலாற்று நாயகனாக விளங்கினார். முப்பது ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட இடைவெளிக்குப்பின் பழைய தோழர்கள் அந்த மாநாட்டில் சந்தித்தனர். ஒன்றில் நாடுகடத்தப்பட்டு வெளிநாடுகளில் பல ஆண்டுகளாக வாழ்ந்த அவர்களால், அல்லது ஆபிரிக்க சிறைகளில் துன்புற்ற அவர்களால், ஒருவரை மற்றவர் அடையாளம் காண முடியவில்லை. இவர்கள் அனைவரும் தங்கள் இனத்தின் விடுதலைக்காக ஏதோ ஒரு வகையில் போராடியதன் மூலம் 1990 ஆண்டு பெப்ரவரித் திங்கள் 2ம் நாள் ஆபிரிக்க தேசிய காங்கிரசு, தென் ஆபிரிக்க கம்யூனிசக்கட்சி மற்றும் ஏனைய அமைப்புகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு இன ஒதுக்கலில் ஈடுபட்டிருந்த அரசாங்கத்திற்கு நிர்ப்பந்தத்தைக் கொடுத்துள்ளனர். தலைமறைவாக இயங்கிய இந்த அமைப்புக்களின் செயற்பாடுகளை திரு. கிறிசு அவர்கள் ஒன்றுபடுத்தி வந்தார். இரகசியமாக நடாத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது மிகவும் கூடுதலான வாக்குகளைப்பெற்ற அவர், ஆபிரிக்க தேசிய காங்கிரசின் செயற்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு, நெல்சன்

மண்டேலா அவர்கள் போட்டியின்றி அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். வாக்களிக்கப்பட்ட வாக்குகளில் 94.7 வீதத்தை திரு. கிறிசு அவர்கள் பெற்றிருந்தார்.

தென் ஆபிரிக்க கம்யூனிசக்கட்சியின் 8 ஆவது மாநாடு 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்றபொழுது இரண்டாவது தடவையாக நான் அவரைச் சந்தித்தேன். சோவியத் ஒன்றியமும், கிழக்கு ஐரோப்பாவிலுள்ள சோசலிச நாடுகளும் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து பல கம்யூனிசக்கட்சிகளுக்குள் நடைபெற்றது போல் தென் ஆபிரிக்க கம்யூனிசக் கட்சிக்குள்ளும் சூடான தர்க்கம் நடைபெற்றது. கட்சியின்பெயர் மற்றும் அதன் குறிக்கோள் ஆகிய இரு விடயங்களிலும் பெரும் கருத்து வேறுபாடு நிலவியது. தென் ஆபிரிக்க கம்யூனிசக்கட்சியின் (SACP) குறிக்கோள் சனநாயக சோசலிசம் என இருக்கவேண்டும் என தலைமையில் செல்வாக்கு மிக்கபகுதியினர் விரும்பினர். சனநாயகம் இன்றி சோசலிசத்தைக் கொண்டுவர முடியாதாகையால் சனநாயகம் என்ற சொல் தேவையற்றதென தலைமறைவாகியிருந்து முதல் முதலாக வெளியே வந்த மாநாட்டில் கலந்துகொண்ட பெரும்பாலானவர்கள் கருத்து வெளியிட்டனர். கோட்பாட்டைப்பற்றிய தர்க்கம் மிகவும் சூடாக நடந்தேறியபின் பெயரை மாற்றவேண்டிய அவசியம் இல்லையெனவும், சோசலிசமே எதிர்காலக்குறிக்கோள் எனவும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. மாக்சிச லெனினிச அறிவியல் தத்துவங்களைப் பின்பற்றுவது என்று இறுதியில் தீர்மானித்ததன் மூலம் தென் ஆபிரிக்க கம்யூனிசக்கட்சிக்குள் சோசலிச சனநாயகத்திற்கு இருந்த எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது. அங்கு நடைபெற்ற முழுவிவாதத்திலும் திரு. கிறிசு அவர்கள் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்படவேண்டும் என்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

பியுரோகிரேசி அமைப்பைக் கொண்ட இந்தியாவில் மாக்சிச கம்யூனிசக் கட்சி எப்படி மேற்கு வங்காளத்தில் தேர்தல்களில் பங்கு பற்றிய வெற்றியை ஈட்டிவருகின்றதென்பதை நேரில் கண்டறிவதற்காகத் திரு. கிறிசு அவர்கள் இந்தியாவுக்கு வர மிகுந்த ஆவல் கொண்டிருந்தார். கல்கத்தாவில் இந்த ஆண்டு மே திங்களில் நடாத்தத் திட்டமிட்டிருந்த அனைத்துலக கருத்தரங்கில் அவரை வரவேற்பதற்கு நாம் எண்ணியிருந்தோம். ஆனால் சோசலிசக் கொள்கையின் குறிக்கோளை மிகவும் துணிவாகவும் தீவிரமாவும் முன்னெடுத்துச் சென்றுவரும், அதன் காவலருமாகிய அவரை துர்ப்பாக்கிய வசமாக அனைத்துலக கம்யூனிச இயக்கம் இழந்துவிட்டது.

தொழிற்சங்கவாதியாகவும், தென் ஆபிரிக்க கம்யூனிசக் கட்சியின் உறுப்பினராகவும் விளங்கிய ஒருவரின் மகனான திரு. கிறிசு அவர்கள் 1943 ஆம் ஆண்டில் பிறந்தார். தலைமறைவாக இயங்கிய ஆபிரிக்க தேசிய காங்கிரசின் படைப்பிரிவுடன் 1962 ஆம் ஆண்டு இணைந்து கொண்ட திரு. கிறிசு அவர்கள், மிகவும் விரைவாகவே அதன் தீவிரமான தலைவர்களில் ஒருவரானார். தனது சொந்த நாட்டைவிட்டு வெளியெறி மற்ற நாடுகளில் புகலிடம் தேடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட திரு கிறிசு அவர்கள், சிம்பாப்வே நாட்டு மக்கள் நடாத்திய போராட்டத்துடன் 1967 ம் ஆண்டில் தன்னை இணைத்துக் கொண்டார். தென் ஆபிரிக்காவுக்கு வெளியே இருந்த வேளையிலும் தெற்கு ஆபிரிக்க நாடுகளின் கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கை வகித்தார். அதனால் அவர் பொற்சுவானாவில் இரு ஆண்டுகளாகச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அதன் பின் தென் ஆபிரிக்காவுக்குத் திரும்பிய அவர், மிகவும் நெருக்கடியான காலப்பகுதியான 1983 ஆம் ஆண்டிலிருந்து 1987 ம் ஆண்டுவரை தலைமறைவாக இயங்கிவந்த படையத்தில் ஆரம்பத்தில் அரசியல் கொமிசாராக செயற்பட்டார். அதன்பின் தென் ஆபிரிக்க கம்யூனிசக் கட்சியின் பொதுச்செயலாளராக வரும்வரை படையத்தின் தலைவராகச் செயற்பட்டார்.

தென் ஆபிரிக்க அரசின் இன ஒதுக்கல் கொள்கை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்பதையும், அதைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க முடியாதென்பதையும் அந்த அரசு உணரத்தக்க வகையில் அவரின் தலைமையின்கீழ் புரட்சிப்படையம் அந்த அரசுக்கு எதிராகப் பல வெற்றிகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. ஆயுதப் போராட்டம் ஏற்படுத்திய பாரிய தாக்கம், தென் ஆபிரிக்க அரசு பேச்சுவார்த்தைக்கு வரவும், ஆபிரிக்க தேசிய காங்கிரசு மீதும், தென் ஆபிரிக்க கம்யூனிசக் கட்சி மற்றும் தென் ஆபிரிக்க தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் மீதும் அது விதித்த தடையை நீக்கவும், நெல்சன் மண்டேலா அவர்களையும் மற்றைய கைதிகளையும் விடுதலைசெய்யவும் வழிவகுத்தது. அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களால் திரு.கிறிசு அவர்கள் எப்படி நேசிக்கப்பட்டாரோ அதேபோல் வலதுசாரிப் பிரிவினரால் அவர் வெறுக்கப்பட்டதன் காரணமாக அவரைக் கொல்ல அவை பல முயற்சிகளை மேற்கொண்டன. அவை பெற்ற வெற்றி, சமாதானத்தை விரும்பும் மனிதகுலத்தின் சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் போராடிய சிறந்த ஒரு மனிதனை இன்று இழக்கச் செய்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் தற்போது தோன்றியுள்ள அரசியல் நிலைமையையும் அதை ஏற்படுத்த திரு. கிறிசு அவர்கள் வகித்த பங்கையும் நோக்குகையில், அவரின் கொலைக்கும் இவற்றிற்கும் தொடர்பில்லை எனக் கூறமுடியாது.

இனவெறிகொண்ட சிறுபான்மையினராகவுள்ள வெள்ளையரின் அரசு, மேலாண்மையை குறிப்பாகப் பொருளாதாரத்துறையிலுள்ள மேலாண்மையை, தொடர்ந்தும் செலுத்துவதை உறுதி செய்யாது பெரும்பான்மையினராக விளங்கும் கறுப்பின மக்களுக்கு ஆட்சியுரிமை வழங்குவதற்கு விரும்பவில்லை. தங்கள் இந்தக் குறிக்கோளை அடைவதை நோக்கமாகக் கொண்டே தென் ஆபிரிக்காவுக்கு சனநாயகரீதியான ஒரு பேரவையை உருவாக்கும் முகமாக நடாத்தப்படவிருக்கும் பேச்சுவார்த்தைகள் காலம் கடத்தப்பட்டுவருகின்றன. அதேநேரத்தில் ஒன்றுடன் மற்றது தொடர்புடைய ஆனால் ஒரேவிதமான இரண்டு போக்குகள் உருவாகி வருகின்றன.

ஒரு புறத்தில் தீவிரமான போக்குள்ள வலதுசாரி சக்திகள் ஆபிரிக்கானார் வீர்சுரன்சு பீவெகிங் (Afrikaner Weerstansbeweging – AWB) போன்ற புதுமுறையான பாசிச அமைப்புகளுடன் இணைந்துகொண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரசு மற்றும் தென் ஆபிரிக்க கம்யூனிசக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களைத் திட்டமிட்டுத் தாக்கவும், கொலை செய்யவும் ஆரம்பித்துள்ளார்கள். தோழர் கானி அவர்களின் கொலை ஆபிரிக்க வீர்சுரன்சு பீவெகிங் அமைப்பின் உறுப்பினர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டது என தற்போது தெரியவந்துள்ளதுடன் கொல்லப்படவேண்டிய பலரின் பெயரைக்கொண்ட பட்டியல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்படியான நடவடிக்கை மூலம் கறுப்பின மக்களை அச்சுறுத்தி இன ஒதுக்கல் கொள்கையை அவர்களை ஏற்கச் செய்வதே வலதுசாரிகளின் குறிக்கோளாக இருக்கின்றது. அதே வேளையில் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான வெள்ளை இன முற்போக்காளர்களை எச்சரிக்கைசெய்வதை நோக்கமாகக் கொண்டும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

கடும் தீவிரவாதப் போக்குடைய வலதுசாரி அதிரடிப்படையினரின் இப்படியான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகள் எதையும் இனவெறிகொண்ட அரசாங்கம் இதுவரை மேற்கொள்ளவில்லை. ''ஆபிரிக்கானார்'' இன் வாழ்வுக்காக தேவைப்படின் படையில் மற்றும் காவல்துறையிலுள்ள தங்கள் ஆதரவாளர்களை போர்புரிய அழைக்கப்போவதாக

ஆபிரிக்கானா வீரசுரன்சு பி வெகிங் அமைப்பு 1991 ஆம் ஆண்டு அறிவித்துள்ளது. படையம் மற்றும் காவல்துறையில் உள்ளவர் களில் 90சத விகிதமானோர், வலதுசாரிக் குழுக்களின் உறுப்பினர் களாக அல்லது ஆதரவாளராக இருப்பதாக மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது, இதனால் திரு. கிறிசு கானி அவர்களின் கொலைக் கான பொறுப்பை வேறு யார்மீதும் சுமத்தி திரு. டி. கிளாக் அவர்களின் அரசு தப்பித்துக்கொள்ள முடியாது.

மறுபுறத்தில் பிரித்தாளும் கொள்கையை ஊக்குவிக்கும் இன ஒதுக்கல் கொள்கையையுடைய அரசு, சூலு இன மக்களைப் பெரும்பான்மையினராக கொண்டதும் மங்கோசுது புதெலெசி அவர்களின் தலைமையில் உள்ளதுமான இங்காதா சுதந்திரக்கட்சி மூலம் கறுப்பின மக்களிடையே கொடூரமான கொலைகளை நடாத்துவிக்கின்றது. இதன் நோக்கம் தெளிவாகவிருக்கின்றது. கறுப்பினமக்களைப் பெரும்பான்மையினராகக்கொண்ட சனநாயக ரீதியான அரசாங்கம் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந் தம் ஏற்பட்டால் தென் ஆபிரிக்காவில் முரண்பாடு நிலவச் செய்து தென் ஆபிரிக்காவில் வாழும் மக்களை ஒருவருடன் மற்றவரைச் சச்சரவில் ஈடுபடவைத்தால் அது இன ஒதுக்கல் கொள்கையை கடைப்பிடிப்பவர்களில் நலன்களைப் பேணவும், நாட்டின் கனிப் பொருள் வளத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பும் ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களைப் பேணவும் உதவும்.

தென் ஆபிரிக்காவிலுள்ள விடுதலை இயக்கம் இன்று பல சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது. பல இன மக் களைக் கொண்டதும், சனநாயக ரீதியானதுமான அரசாங்கம் ஒன்றை பேச்சு வார்த்தை மூலம் தென் ஆபிரிக்காவில் உருவாக்கு வதற்கான முயற்சி இந்த நிலைமைகளால் தடைசெய்யப்பட்டு வருகின்றது. மக்களின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வும், இன ஒதுக்கல் கொள்கையையுடைய அரசாங்கத்தின் சூழ்ச் சியை தடுத்து நிறுத்தவும் தங்களாலான முயற்சிகள் அனைத்தை யும் மேற்கொள்ள வேண்டிய நிலையில் தென் ஆபிரிக்க கம்யூனி சக்கட்சியின் தலைமைப்பீடம் உள்ளது. இதற்காக திரு. கிறிசு கானி அவர்கள் பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளார். அதன் கார ணமாகவே அவரை ஒழித்துக்கட்டுவது இன்றியமையாதது என மனித சமுதாயத்தின் விடுதலைக்கு எதிரானவர்கள் கருதினர்.

கறுப்பின மக்கள் அவரின் கொலைக்குக் காட்டிய எதிர்ப்பு அவர் எந்தளவிற்கு அந்த மக்களால் மதிக்கப்பட்டார் என்பதை

எடுத்துக்காட்டியது. இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் அரசாங்கத்தின் காவல்துறையினர் பல இடங்களில் கறுப்பின இளைஞர்களை வகை தொகையில்லாது சுட்டுக் கொன்றுள்ளார்கள். ஆனால் மக்கள் காட்டிய ஆத்திரமும், எதிர்ப்பும் கட்டுமீறிச் சென்றதைத் தொடர்ந்து, ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாளை திரு டிகிளாக் அவர்களின் அரசாங்கம் தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்த வேண்டியிருந்தது. "நீதிக்கும், சனநாயகத்திற்கும், சமாதானத்திற்கும் எதிரான பைத்தியக்காரர்கள்" என இந்தப் பேடித்தனமான கொலையை மேற்கொண்டவர்களை வர்ணித்த திரு நெல்சன் மண்டேலா அவர்கள், "கட்டுப்பாட்டுடன் சமாதானத்தைப் பேணி திரு கிறிசு கானி அவர்களை நினைவுகூர வேண்டும்" என மக்களைக் கேட்டுக் கொண்டார். அகில உலகெங்கணும் நடைபெறும் சுதந்திரத்திற்கான போராட்ட வரலாற்றில் சுதந்திரத்திற்காகப் போராடிய மாபெரும் தலைவர் எனத் திரு. கானி அவர்களை ஆபிரிக்க கம்யூனிசக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், தற்போதய தலைவருமான திரு. யோ சிலோவோ அவர்கள் வர்ணித்துள்ளார்.

திரு. கிறிசு அவர்கள் செயலாற்றல் மிக்கவர் – அவரின் அந்தச் சிறப்பியல்பு காரணமாகவே "பயன்தரக்கூடிய செயலைப் புரியும் தனிச்சிறப்பாளன்" என அவரைப் பலர் வர்ணித்துள்ளனர். தற்போது தென் ஆபிரிக்காவில் நிலவும் உண்மை நிலையுடன் மாக்சிச லெனினிசக் கோட்பாட்டைத் தொடர்புபடுத்திய அவர் "தனியார்துறையினர் முக்கிய பங்கை வகிக்கத்தக்க வகையில் நாம் ஒரு கலப்பு பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்துவதே தற்போதுள்ள சூழ்நிலையில் ஏற்புடையதாகும்." எனத் தென் ஆபிரிக்க கம்யூனிசக்கட்சியில் பொதுச் செயலாளராகப் பதவியேற்றபின் கூறியிருப்பது இதற்குச் சிறந்த உதாரணமாகும். அதேவேளை சோசலிச முறையைக் கொண்டுவர வேண்டும் என்ற தனது குறிக்கோளிலிருந்து அவர் எந்தவொரு காலத்திலாவது மாறுபட்டதில்லை.

சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருந்த திரு. கிறிசு அவர்கள் மற்றவர்களுடன் அன்பாகப் பழகுவதிலும் இன்பம் கண்டார். சிரத்தையும், அன்பும், வீரமும் மிக்க அவர் எப்பொழுதும் ஊக்கத்தையும், ஆர்வத்தையும் அளிப்பார். மற்றவர்களுக்கு உதாரணமாக விளங்கிய அவருடைய வாழ்க்கை முறையும், பழக்கவழக்கங்களும் அவர் பால் மக்களை அன்பு கொள்ள வைத்தது. இந்த உன்னதமான குணவியல்புகளே அவர் பால்

மக்களை அன்பு கொள்ளவைத்தது. இந்த உன்னதமான குண வியல்புகளே அவர் கம்யூனிசத்தைத் தழுவுவதற்குக் காரணமாக இருந்ததுடன் அந்தத் தத்துவமும் அவரிலிருந்து பிரிக்கமுடியாத ஒன்றாகிவிட்டது.

மனித குலத்தின் மேன்மைக்காகவும், விடுதலைக்காகவும் அயராது போராடிய பெருந்தகை ஒருவர் தற்போது உயிருடன் இல்லை. மனிதகுலம் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளது. ஆனால் அவரால் பல ஆண்டுகளாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட போராட்டமும், அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட அமைப்பும், தென் ஆபிரிக்க விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்தும் நடாத்த உதவும். திரு. கிறிசு கானி அவர்களின் கனவை நன வாக்குவதே நாம் அவருக்கு கொடுக்கக்கூடிய மதிப்பாகும் என ஆபிரிக்க தேசிய காங்கிரசு தனது இரங்கலுரையில் கூறி யுள்ளது. இது தென் ஆபிரிக்காவுடன் மாத்திரம் நின்றுவிடாது அகில உலகத்தையும் சார்ந்ததாகவிருக்கவேண்டும். அவரை அறிந்தவர்கள் அவருக்கு அளிக்கக்கூடி மதிப்பு அவரின் போராட் டத்தை முன்னெடுத்துச் செல்வதேயாகும்.

ஏகாதிபத்தியத்திற்கும் அடக்குமுறைக்கும் எதிராகப் போரா டும் அனைத்துலக மக்களில் ஒருவராகவும், அனைத்துலக தொழி லாளர் வர்க்கத்தின் ஒருவராகவும் விளங்கியவரும், நல்ல மனித இயல்புகளைக் கொண்டிருந்ததன் காரணமாகவே தான் ஒரு கம் யூனிசவாதியாக இருக்கமுடிந்தது என்று கூறியவருமான அவரை நாம் நினைவு கூருவதுடன், எங்கள் வணக்கத்தையும் அவருக் குச் செலுத்துகின்றோம்.

*உயர்ந்த லட்சியம் கொண்ட ஒருவன் ஆயிரம் தவறு செய்தால், லட்சியம் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான்.*

**- சுவாமி விவேகானந்தர்**

# தமிழா! நீ பேசுவது தமிழா?

— உணர்ச்சிக் கவிஞர். காசி ஆனந்தன் —

(ராணி - 20. 06. 93)

'செந்தமிழ்' என்று தமிழ் மொழியைப் போற்றுகிறோம். நாம் பேசுவது செந்தமிழா?

இல்லை!

அடிமைத்தனத்தை மகிழ்வோடு ஏற்று, வந்தவன் மொழியை யெல்லாம் வாயில் போட்டுக்கொண்டோம்.

"'வீட்டுக்கதவை கள்ளச் சாவியால் திறந்து- பீரோவில் இருந்த துட்டையும்- கோணிப் பையில் இருந்த பப்பாளிப் பழத்தையும், சப்போட்டா பழத்தையும் கொய்யாப் பழத்தையும் திருடிய சுமார்- இருபது வயதுடைய கில்லாடி- ஆட்டோ ரிக்ஷாவில் தப்பி ஓட முயன்றபோது தகவல் அறிந்த போலீஸ் ஏட்டு அவனை விரட்டி துப்பாக்கியால் சுட்டதில் தோட்டாக்கள் அவனைத் தீர்த்துக்கட்டின."

செய்தி ஏட்டில் இப்படி ஒரு திருட்டு நிகழ்வை கதைப்பகுதியாகவோ செய்தியாகவோ படித்து முடித்து அது செந்தமிழ் தான் என நினைக்கிறோம்.

ஆனால்-

தமிழா இது?

| | | |
|---|---|---|
| சாவி | — | போர்த்துக்கீசியம். |
| பீரோ | — | பிரெஞ்சு. |
| துட்டு | — | டச்சு. |
| கோணி | — | இந்தி. |

| | | |
|---|---|---|
| பப்பாளி | — | மலாய். |
| கொய்யா | — | பிரேசிலியன். |
| சப்போட்டா | — | இசுப்பானியம். |
| சுமார் | — | பெர்சியன். |
| வயது | — | சமஸ்கிருதம். |
| கில்லாடி | — | மராத்தி. |
| ஆட்டோ | — | கிரேக்கம். |
| ரிக்ஷா | — | ஜப்பானியம். |
| தகவல் | — | அரபி. |
| போலீசு | — | இலத்தீன். |
| ஏட்டு | — | ஆங்கிலம். |
| துப்பாக்கி | — | துருக்கி. |
| தோட்டா | — | உருது. |

நம் தாய்மொழியை- தமிழ் மொழியை எத்தனை முறை- எத்தனை வகையில் நாம் தலைதிருகிக் கொன்றிருக்கிறோம்.

## மொழி அழிந்தால்

மொழி அழிய இனம் அழியும் என்பதை தமிழன் நடந்து வந்த வழி அறியும்- அவன் வாழ்வறியும்.

பெரும் அளவில் சமஸ்கிருதத்தை ஏற்றுக்கொண்டதால்தான் கன்னடன்- தெலுங்கன்- மலையாளி என்று தமிழன் உருமாற்றம் பெற்றான்.

தென் ஆப்பிரிக்காவுக்குப் போன தமிழன், தமிழை முற்றிலும் இழந்து ஆங்கிலத்தைத் தன் மொழி ஆக்கிக்கொண்டான். மொரிசியசு சென்ற தமிழனோ ஆங்கிலத்தையும் கிரியோல் மொழியையும் தன் மொழியாக்கி- யாரோ ஒருவனாய்த் தேய்ந்து போனான்.

## இலங்கையில்

இலங்கையில் பழந்தமிழன் காலத்தில் அவன் கண்களுக்கு முன்னேயே உருவாகி, இன்று தமிழனையே அழித்துக்கொண்டிருக்கிறது சிங்களம்.

புத்தமதப் போர்வையோடு நுழைந்த பாளி மொழியும்—இந்துமதத்திரைமறைவில் புகுந்த சமஸ்கிருதமும் இலங்கை மக்களின் தமிழில் புகுந்து- கலந்து சிங்களமாய் புத்துருப் பெற்றன. பைந்தமிழறிஞர்- மறைமலையடிகள் முதல் தேவநேயப் பாவாணர்- பெருஞ்சித்திரனார் வரை சமஸ்கிருதத்தை ஓங்கி அடித்ததன் விளைவு, வடமொழிப் பற்கள் நொறுங்கி உதிர்ந்தன.

வெள்ளைக்காரன் வெளியேறிய பின்பு சிங்களம் மீண்டும் ஆட்சி மொழியாய் இலங்கையில் வெறிகொண்டு பாய்ந்தது.

பொகந்தலாவை தேயிலைத் தோட்டத்தில் வண்டியின் எண் பலகையில் சிங்கள 'சிறி' எழுத்தை மை பூசி அழித்த போரில் அயாவு- பிரான்சிசு என்னும் மலைநாட்டுத் தமிழர் இருவர், காவல் படையின் பொல்லாக் குண்டுகளுக்கு இரை ஆயினர்.

## தீக்குளிப்பு

தமிழ் நாட்டிலும் இந்தி ஆட்சி மொழியாய் நுழைந்தவேளை-தமிழினம் குமுறி எழுந்தது.

தமிழ்நாட்டில் 1938-இல் இந்தி காலெடுத்து வைத்தபோது களத்தில் மடிந்த தாளமுத்து- நடராசன் போலவே- இம்முறையும்- சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன்- தண்டபாணி- முத்து- சண்முகம் ஆகிய வீரவேங்கைகள் திக்குளித்தும், குண்டடிபட்டும், நஞ்சுண்டும் இந்திப்போரில் தங்களை அழித்துக்கொண்டனர்.

வடமொழியாம் சமஸ்கிருதத்துக்கு எதிராகப் புலவர்கள் எழுந்தனர். ஆனால், சிங்களத்துக்கும் இந்திக்கும் எதிராக மக்கள் எழுந்தனர்.

இம்முறை-

தமிழன் உயிர் கொடுத்து- தமிழ் உயிர் பெற்றது!

# கெடுபிடிப்போர் நடவடிக்கைகளின் இரகசியங்கள் வெளிவந்ததைத் தொடர்ந்து அமெரிக்க புலனாய்வுத்துறையினரான சி. ஐ. ஏ வேவு பார்ப்பதற்கு புதுமுறைகளை ஆராய்கின்றார்கள்

-இயோசன் கோயவெல்-

(ஐலண்ட் 7. 7. 93)

*1981*ம் ஆண்டு மே திங்கள் *11* ஆம் நாள் பாப்பரசர் இரண்டாவது யோன்போல் அவர்களைக் கொல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியைப்பற்றி சோவியத் ஒன்றியத்தின் புலனாய்வுத்துறையான கே. ஜி. பி. இன்றுவரை மிகவும் இரகசியமாகக் காததுவந்த அறிக்கையை, மொசுகோ சென்ற ஆண்டு வெளியிட்டது.

இந்தக் கொலை முயற்சிக்கும் கே. ஜி. பி. க்கும் எந்தவிதமான தொடர்புமில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே கே. ஜி பி யினரால் மிகுந்த கவனத்துடன் காக்கப்பட்டுவந்த முக்கயமான ஆவணங்களில் ஒன்றானதும், முதலாவதாக வெளியிடப்பட்ட ஆவணங்களின் ஒன்றானதுமான இந்த அறிக்கை சனாதிபதி போரிசு யெல்சின் அவர்களின் பணிப்புரைக்கு இணங்க வெளியிடப்பட்டது என அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

வாசிங்ரனிலுள்ள ஆயிரக்கணக்கான கோவைகளை "அமெரிக்கச் செய்திகளும் உலக விவகாரமும்" (U S. News And world Report) என்ற சஞ்சிகை அண்மையில் ஆராய்ந்த போது அவற்றில் மொசுகோவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டவையும், இதுகாறும் வெளிவராதவையுமான பல சம்பவங்களும், வேவு நடவடிக்கைகளும் இருக்கக் காணப்பட்டன.

*1953* ம் ஆண்டு யூலைத்திங்களில் வானூர்தியில் யப்பான் கடல்மேலாக வேவுப்பணியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென

மறைந்த தனது தந்தையை உருசியாவில் தேடுவதற்கு அவரின் புதல்வரும், அமெரிக்கருமான புரூசு சண்டேர்சன் அவர்களுக்கு உதவிய இந்தச் சஞ்சிகையின் மொாசுகோவிலுள்ள செயலகப் பணியாளர்கள் அந்தக் கோவைகளைக் கண்டெடுத்துள்ளனர்.

அந்தக் கோவைகளில் உள்ள தகவல்களின்படி 1950 ஆம் ஆண்டிலிருந்து 1971ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 31 அமெரிக்க வேவு வானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. அந்த வானூர்திகளின் வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 252 பேரில் 90 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். 24 பேர் சாவைத் தழுவியிருந்தனர். எஞ்சிய 138 பேரின் நிலைமையைப் பற்றி தெரியவில்லை.

கரிபவர்சு (Gary Powers) என்பவரால் செலுத்தப்பட்ட யு-2 ரக வானூர்தி 1960 ஆம் ஆண்டு மே திங்களில் சுடப்பட்டதை ஏற்றுக்கொண்ட அமெரிக்க அரசாங்கம், மேற்கு பேர்லின் நகரிலுள்ள கிளினெக்கர் பாலத்தில் (Berlin's Glienecker Bridge) முதலாவது தொகுப்பு வேவு வானூர்திகளின்பரிமாற்றம் 1962 ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்களில் நடைபெற்ற பொழுது இந்த வானூர்தி திரும்பிப் பெறப்பட்ட இரகசியத்தை மட்டுமே வெளியிட்டிருந்தது.

வாசிங்ரனிலும், மொாசுகோவிலும் கெடுபிடிப்போர் சம்பந்தமான பட்டறிவைப் பெற்றவர்களுடன் உரையாடியபோதும், ஆவணங்கள் மூலம் பெறப்பட்ட தகவலின் படியும், பவர்சு அவர்களுடைய விவகாரத்துக்கு முன், யூ-2 ரக வானூர்திகளால் சோவியத் வானெல்லை 17 தடவை ஆக்கிரமிப்புக்குள்ளானது எனவும், அதன் பின் ஆயிரக்கணக்கான ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றன எனவும் அறியமுடிகின்றது.

கெடுபிடிப் போரின் முடிவு சி . ஐ . ஏ க்கும் கே .ஜி. பிக்கும் இடையேயுள்ள இரகசியங்களை பரிமாறும் தன்மையை வளர்த்தெடுக்க உதவியதுடன், இந்த இரு சேவையிலுமுள்ள தலைவர்கள் தகவல்களைப் பரிமாற்றம் செய்வதற்காக ஒருவர் மற்றவருடைய தலைமையகத்திற்குச் செல்லவும் வழிவகுத்துள்ளது.

படைய பலத்திற்கும் ஆயுத உற்பத்திக்கும் இந்த இரு நாடுகளும் இப்பொழுது அதிக முக்கியத்துவம் கொடுக்காததன் காரணமாகவும், வேவு நடவடிக்கைகளில் பாரிய மாற்றத்தை மேற்கொள்ளவேண்டிய நிலையில் இவை உள்ளன.

97567

முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ஏவுகணைகளையும், தாங்கிகளையும், பீரங்கிகளையும், படையினரின் எண்ணிக்கையையும் மதிப்பிட்டு ஆய்வு செய்வதற்கு சி. ஐ. ஏ முன்னர் 100 பேரைச் சேவையில் அமர்த்தவேண்டியிருந்தது. ஆனால் இன்று இதற்கு 9பேர் போதுமானதாகவிருக்கின்றது.

வேவு நடவடிக்கைக்காகச் செலுத்தப்பட்ட விண்கலங்கள் மூலம் பெறக்கூடிய நிழற்படங்களைப் பெறுவதற்கு சி. ஐ. ஏ யினர் தற்பொழுது அவ்வளவு அக்கறைகாட்டத்தேவையில்லை எனவும், முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் குடியரசுகளினதும் அதற்கு அப்பாலுள்ள மக்களினதும் தகவல்களைப் பெறுவதே சி. ஐ. ஏ. யினரின் தற்போதைய கடமையாகவிருப்பதாகவும் இந்த விடயத்தில் கைதேர்ந்தவர்கள் கூறுகின்றார்கள்.

அனைத்துலகிலும் நிலவும் பயங்கரவாதம், போதைப் பொருள் வர்த்தகம் முதலியவற்றுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளவும், அணு மற்றும் இரசாயன ஆயுதப் பரவல், சமூக நிலை மற்றும் நெருக்கடி நிலையை உருவாக்கக் கூடிய பிராந்தியங்களிலுள்ள நிலைமையை அறிந்து கொள்ளவும் விபரங்கள் தேவையாகவுள்ளது. இப்படியான விடயங்களில் அதிகளவிலான தகவல்களைப் பெற்றிருப்பின் கம்யூனிசத்தின் வீழ்ச்சி குவைத்தில் ஆக்கிரமிப்பு போன்ற நிகழ்வுகளை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருக்க முடியும்.

செயலாற்றும் ஆட்களிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையில் பெண்கள் ஈடுபடுத்தப்படுவதுடன், முன்பு நடைபெற்ற சிரற்ற தபால் அனுப்பும் முறைக்குப் பதிலாக வானொலிகளும், தொலைபேசிகளும், கணினிகளும் தற்போது உபயோகிக்கப்படுகின்றன.

சி. ஐ. ஏ. இப்பொழுதும் இழிவான சூழ்ச்சி நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றதென்பதை எவரும் மறுக்க முடியாது.

"இது ஒரு அபாயகரமான விடயமாகவிருப்பதால் இதில் ஈடுபடும் ஒருவர் தானும் பாதிக்கப்படுவார் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். ஆனால் பயங்கவாதத்தைப் பற்றியும், அணு ஆயுதப் பரவல் பற்றியும் கூடுதலாக அறிய வேண்டுமாகில், அபாயத்தை எதிர்கொள்ளவேண்டும்" என சி. ஐ. ஏ. யின் முன்னாள் இயக்குனர் றொபற் கேற்சு அவர்கள் நியூசுவீக் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலின் போது கூறியுள்ளார்.

கண்ணீர்த்துளி வடிவில்
    கடல் நடுவே நிலம் மிதக்கும்
என்ன இதன் பெயரென்றால்
    இலங்கை எனச் சொல்லுகிறார்
பாரழுத கண்ணீர்
    பனிக்கடலாய் கிடக்க, இது
யாரழுத கண்ணீர்
    அலை நடுவே மிதக்கிறது?
இது, அந்தச்
    சீதை அழுததெனச்
செப்பியது ராமகதை!
    தமிழென்னும்
கோதை அழுததெனக்
    கூறவில்லை பூமி இதை.

'இளவேந்தன்'

உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல. அவர்கள் உங்கள் மூலமாக வருகின்றார்களேயன்றி, உங்களில் இருந்து வருவதில்லை. அவர்களுக்கு உங்கள் அன்பைக் கொடுங்க எண்ணங்களை அல்ல. ஏனெனில் அவர்களுக்கு என எண்ணங்க உண்டு. அவர்கள் உடலை நீங்கள் பராமரிக்கலாம் ஆன்மாவை அல்ல, ஏனெனில் அவை 'நாளை' என்ற இல்லத்தில் குடியிருப பவை. நீங்கள் உங்கள் கனவுகளில்கூட அங்கு போய் வர முடி யாது. நீங்கள் அவர்களாக ஆக முயற்சிக்கலாம். ஆனால் அவ களை உங்களைப்போல் மாற்ற முயற்சி செய்யாதீர்கள் வாழ்க்கை என்றும் முன்னுக்கு செல்லுமேயின்றி பின்னுக் செல்வதில்லை.

—கலீல் கிப்ரான்

97567

2772 c.c.

# செஞ்சோலைக் கீதம்

சீர்பல எந்திநம் சிந்தையில் நிறைந்திடும்
செந்தமி ழீழத்துச் செஞ்சோலை,
வேரிடை யூறிய நீரென எங்களின்
வீடென ஆகிய செஞ்சோலை.

வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழிய, வாழிய, வாழியவே!

உலகிடை மேவிய கலைகளின் தலமென
உயர்ந்தது எங்களின் செஞ்சோலை,
நலந்தரு புதுமைகள் நல்லவிஞ் ஞானங்கள்
நாம் பெறும் ஆலயம் செஞ்சோலை.

வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழிய, வாழிய, வாழியவே!

அன்பொடு கருணையில் அடுத்தவர் நலத்தினில்
ஆழவே ரோடிய செஞ்சோலை,
மணிணிடை யோர்மணி என்றொளி வீசிடும்
மாசற்ற வாசத்தின் செஞ்சோலை.

வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழிய, வாழிய, வாழியவே!

தாயினை நிகர்த்திடும் தாயகம் எங்களின்
தாகமென் றோதிடும் செஞ்சோலை,
காவிய நாயகன் காட்டிடும் பாதையில்
கால்நடக் கின்றநம் செஞ்சோலை.

வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழிய, வாழிய, வாழியவே!

2772.